பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 22 செவ்வாய்க்கிழமை (08.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 347



21
ஹசாரே குழுவினர் மீது வழக்கு



23
2011 இன் மிஸ்வேல்ட் அழகி



25
தொடரை தனதாக்கியது பாகிஸ்தான்

# இலங்கை அரசுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குக

## மன்மோகனுக்கு நேற்று 'ஜெ' கடிதம்
## மீனவர்கள் மீதான தாக்குதலால் சீற்றம்



சென்னை, நவம்பர் 8

மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தாதீர்கள் என்று இலங்கை அரசுக்கு எத்தனை தடவை தான் சொன்னாலும் "செவிடன் காதில் ஊதிய சங்கு" போன்று பயன் ஏதும் ஏற்படுவதில்லை. எனவே இலங்கை அரசு மீது இந்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதி இருக்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

கடந்த 5ஆம் திகதி ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து ஜெயலலிதாவின் சீற்றம் மீண்டும் கடித வடிவில் வெளியாகி உள்ளது. எனினும் தம் மீதான குற்றச்சாட்டை இலங்கைக் கடற்படை மறுத்துள்ளது.

இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் ஜெயலலிதா தெரிவித்திருப்பதாவது:-

பாக்கு நீரிணைப் பகுதியில், தங்கள் பாரம்பரிய மீன்பிடித் தொழிலை, தமிழக மீனவர்கள் மேற்கொள்ளும்போது இலங்கை கடற்படையினர் மற்றும் கூலிப்படையினர் தினமும் அவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். மீனவர்களின் பாதுகாப்பு குறித்த மிகுந்த கவலையுடன், இக்கடிதத்தை எழுதுகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல், தமிழக மீனவர்கள் மீது, இலங்கை அதிகாரிகள் தாக்குதல் நடத்துவது, சித்திரவதை செய்வது போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளமை பற்றி, ஏற்கனவே தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன். சென்னை வந்த, இந்திய வெளியுறவுத் துறை செயலர் ரஞ்சன் மாத்தாயிடமும், நேரடியாக இதுபற்றி விளக்கியிருந்தேன்.

நியூயோர்க்கில், இலங்கை ஜனாதிபதியைத் தாங்கள் சந்தித்தபோது, இது பற்றிக் கவலை தெரிவித்தீர்கள் எனவும் இதுபோன்ற சம்பவங்கள் பற்றி தீவிரமாக விசாரிப்பதாக, இலங்கை அரசு உறுதியளித்தது எனவும், எனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டி

பக் 27

## மன்னாரில் டெங்கு தீவிரம் 20 பேர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், நவ.8

பருவகால மழை ஆரம்பித்துள்ளதை அடுத்து கடந்த மாதம் தொடக்கம் நேற்றுவரை மன்னாரில் 20 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தற்பொழுது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கிசிச்சை பெற்று வருகின்றனர் என்று மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என்.சரீட் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மாத இறுதியில் டெங்கு

பக் 27

## வன்னித் தொண்டராசிரியர் இன்று உண்ணாவிரதம்

வன்னி, நவ.8

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த நிரந்தர நியமனம் கிடைக்காத தொண்டராசிரியர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தைக் கோரி தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

வன்னி தொண்டராசிரியர் ஒன்றிய ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறவுள்ளது. இதில் 700 இற்கும் மேற்பட்ட தொண்டராசிரியர்கள் வலய அடிப்படையில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (எ-323-426)

## அமைச்சர்களுக்கு சரிநிகரான அந்தஸ்தை சிரேஷ்ட அமைச்சர்களுக்கும் வழங்க முடிவு

கொழும்பு, நவ. 8

2012ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றத்தின்போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களைப் போன்று சிரேஷ்ட அமைச்சர்களுக்கும் நிதி உட்பட அனைத்து வசதிகளும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

தற்போது சிரேஷ்ட அமைச்சர்களாகப் பதவி வகிக்கும் 10 அமைச்சர்களுக்கான பொறுப்புகள் அதிகரிக்கப்பட உள்ளன எனவும் நம்பத்தகுந்த வட்டாரங்

பக் 28

## கொழும்பை நிர்வகிக்க ஐ.தே.க. தமிழரின் உதவியை நாடுகிறது

### மனோ கணேசனுக்கு ரணில் உத்தியோகபூர்வ கடிதம்

கொழும்பு, நவ. 8

கொழும்பு மாநகரசபையின் நிர்வாகத்தை செம்மையாக நடத்திச் செல்ல ஜனநாயக மக்கள் முன்னணியின் முழுமையான ஆதரவை உத்தியோகபூர்வமாக நாடியுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி. அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான கடிதத்தை நேற்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கு அனுப்பி வைத்தார். ரணிலின் கடிதத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் உடன்

பக் 28

## அரசுடமையாக்கல் சட்டத்தை திருத்துக இல்லையேல் புதுவியூகத்துடன் எதிர்ப்பு

### கட்சிக் கூட்டத்தில் ரணில் பரபரப்பு அறிவிப்பு

கொழும்பு, நவ. 8

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அரச பொறுப்பேற்பதற்கான சட்டத்தில் முழுமையான திருத்தங்களைச் செய்யவேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து வலியுறுத்தினேன். எனது கோரிக்கைகளை அவர் கவனமாக செவிமடுத்தார். இதன் பிரகாரம் இந்தச் சட்டத்தில் திருத்தங்களைச்

பக் 28

## 348 பட்டதாரிகளுக்கு அடுத்தவாரம் வடக்கு மாகாண சபையில் பதவிகள்

அச்சுவேலி, நவ.8

வடக்கு மாகாண சபையில் நிலவும் பட்டதாரி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு 348 பட்டதாரிகளுக்கு வடமாகாண பொது நிர்வாக செயலகம் நியமனக் கடிதங்களை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நவம்பர் மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்

பக் 27

### எம்.ஜி.ஆரால் வளர்த்து உருவாக்கப்பட்ட

## பிரபாகரன் மீது ஆணை கூறி சத்தியப்பிரமாணம் தமிழக வேட்பாளரின் செயலால் பெரும் பரபரப்பு

சென்னை, நவ. 8

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவரான தம்பி பிரபாகரனின் விடுதலை வேட்கையின் மீது ஆணையாக நான், எனக்கு வாக்களித்த மக்களுக்கும் இந்த நாட்டுக்கும், நாட்டின் இறையாண்மைக்கும் கடமை தவறாமல் பணியாற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

- இவ்வாறு பதவியேற்பு விழாவில் அதிரடியாகச் சத்தியப் பிரமாணம் செய்தார் தமிழக உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற சுயேச்சை வேட்பாளர் சோலை கேசவன். இதனால் பதவியேற்பு விழாவில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பழனி நகராட்சியின் முதலாவது வட்டார அ.தி.மு.க. கிளைக் கழகச் செயலாளராகவும், பழனி நகர எம்.ஜி.ஆர் மன்றத் துணைத் தலைவராகவும் இருப்

பக் 27

## வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

### ஜனவரி முதல் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், நவ.8


யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று அடுத்த வருடம் ஜனவரி மாதம் அமுல்படுத்தப்படவுள்ளது. யாழ். மாவட்டத்தில் இதனை அமுல்படுத்தவுள்ளதாக யாழ்ப்பாண மருத்துவர் சங்கம் தெரிவித்தது.

யாழ். போதனா வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே யாழ்ப்பாண மருத்துவர் சங்கத்தினர் இதனைத் தெரிவித்தனர்.

பக் 27

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/பணிமனைகள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் தெளிவான வானிலையும் பிற மாவட்டங்களில் இடி, மின்னல் நிலவுவதற்கான சாத்தியம் அதிகம் உள்ளது

# கோத்தபாயவின் பாதுகாப்புப் பிரிவை பல்கலையிலிருந்து உடன் அகற்றுக!

## உயர் கல்வி அமைச்சிடம் அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, நவ. 8

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளால் மாணவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, அவர்களை உடனடியாக நீக்குவதற்கு உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

.- இவ்வாறு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் சஞ்சீவ பண்டார வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் பாதுகாப்புப் பிரிவின் கீழுள்ள 'ரத்னா லங்கா' ஏன்ற பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் பல்கலைக்கழகப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதன் பின்னணி என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவர் நேற்றுக் கூறியவை வருமாறு:-

கடந்த இரண்டாம் திகதி முதல் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் 'ரத்னா லங்கா' எனப்படும் பாதுகாப்பு அதிகாரிகள் ருஹுணு பல்கலைக்கழகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், உப வேந்தர்கள் ஆகியோர் அதிருப்தியையும், எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர்.

பாதுகாப்புச் செயலாளரின் இந்நடவடிக்கையால் மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதோடு, பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளும் அதிகரிப்பதற்கான வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாம் திகதி ருஹுணு பல்கலைக்கழகத்தில் ஆண்கள் தங்கியிருக்கும் விடுதியில் தனித்தனி மாடிகளாகச் சென்று குறித்த பாதுகாப்பு அதிகாரிகள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து மாணவர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்திய 6 மாணவர்கள் மீது வகுப்புத்தடையும் விதிக்கப்பட்டது.

அதேவேளை, ஆண்கள் விடுதிகளில் நுழைந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட அவர்கள், நாளை பெண்கள் விடுதிகளுக்கும் சென்று பிரச்சினை ஏற்படுத்தமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்த முடியுமா?

எனவே, பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்பட்டுள்ள இவர்களை உடனடியாக நீக்கி, ஏற்கனவே பணியில் அமர்த்தப்பட்டிருந்த அதிகாரிகளை மீண்டும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துமாறு உயர்கல்வி அமைச்சிடம் கேட்டுக்கொள்கின்றோம். இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் தெரிவித்துள்ளோம் - என்றார். (ஓ-சி)

## 56 அகதிகளுடன் ஆஸிக்கு மற்றொரு படகு சென்றது

ஆஸ்திரேலியாவுக்கு 56 புகலிடம் கோருபவர்களுடன் சென்ற படகு ஒன்றை சுங்க கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் தடுத்து நிறுத்தியது. அந்தப்படகில் 56 பயணிகளும் 4 மாலுமிகளும் இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## புதுக்குடியிருப்பில் பல்வேறு இடங்களில் பொதுமக்கள் மீது ராணுவம் தாக்குதல்

கிளிநொச்சி, நவ.8

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பில் பல்வேறு இடங்களிலும் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அவர்கள் முறைப்பாடு தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு புதுக்குடியிருப்பு துர்க்கா வீதிச் சந்தியில் வணிக நிலையம் ஒன்றினுள் நுழைந்த இராணுவத்தினர் அங்கு படுத்திருந்த கடை உரிமையாளர் அவரது மகன், பஸ் சாரதி என மூவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதேவேளை - அன்று முற்பகல் 10 மணியளவில் கோம்பாவில் பகுதியில் வணிக நிலையம் ஒன்றை நடத்திவரும் காலிழந்த ஒருவரைத் தாக்குவதற்கும் இராணுவத்தினர் முயன்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.இதன்போது உடனிருந்த கடை உரிமையாளரின் மனைவி மீது கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களையும் இராணுவத்தினர் மேற்கொண்டனர் என்று கூறப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து இராணுவத்தினர் இவ்வாறு பொதுமக்களிடம் அத்துமீறி நடந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தினரின் இந்தத் திடீர் மாற்றத்துக்கான உண்மைக் காரணத்தை அறிந்து கொள்ளமுடியாதுள்ளதால் இங்குள்ள மக்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். (க-6)

## யாழ்.மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் 804 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், நவ.8

யாழ். மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் 804 மில்லியன் ரூபா பெறுமதியான 19 வேலைத் திட்டங்களுக்கு ஜனாதிபதி செயலணி அனுமதி வழங்கியுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ். மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் தற்போது 804.26 மில்லியன் ரூபா பெறுமதியான 19 வேலைத் திட்டங்களுக்கு ஜனாதிபதி செயலணியின் அனுமதி கிடைத்துள்ளது.

அத்துடன் இந்த வருடம் விசேட திட்டங்களான 'வடக்கின் துரித மீள்எழுச்சித் திட்டம்', 'நிக்கொட்' மீள் எழுச்சித் திட்டம் ஆகியவற்றினூடாக யாழ் மாவட்டத்தில் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கின் துரித மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் 120 அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆயிரத்து 554 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

அதே போன்று 'நிக்கொட்' திட்டத்தினூடாக 36 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 160 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 314 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 669 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. மூன்று விசேட திட்டங்களுக்கான நிதிகளும் வெளிநாட்டு நிறுவனங்களால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டு அதனூடாக வழங்கப்பட்டு வருகின்றது - என்று கூறப்பட்டுள்ளது. (ம-15)

## தமிழ்நாட்டில் இருந்து இன்று கப்பலில் தாயகம் திரும்புவர் 49 அகதிகள்

சென்னை, நவ.08

தமிழ்நாட்டில் தங்கியுள்ள 49 ஈழத்தமிழ் அகதிகள் கப்பல் மூலம் இன்று தாயகம் திரும்பவுள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா. முகவரகம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டின் பல்வேறு முகாம்களிலும் தங்கியிருந்த 12 குடும்பங்களைச் சேர்ந்த 49 அகதிகள் இன்று தூத்துக்குடியில் இருந்து கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை அகதிகளுக்கான ஐ.நா. முகவரகம் செய்துள்ளதாக சென்னையிலுள்ள அதன் பணியகத்தின் நாடு திரும்பும் நடவடிக்கைகளுக்கான இணை அதிகாரி விஜயபாரதி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி- கொழும்பு கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதல் முறையாக கடந்த மாதம் 37 அகதிகள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை அகதிகளுக்கான ஐ.நா முகவரகம் செய்து கொடுத்திருந்தது. (ம)

## அதிவேக வீதியால் தினமும் வருமானம் ரூபா 20 லட்சம்

கொழும்பு, நவ. 8

இம்மாத இறுதியில் புதிதாகத் திறக்கப்படவுள்ள தென் மாகாண அதிவேக நெடுஞ்சாலையின் மூலம் நாளொன்றுக்கு 20 இலட்சம் ரூபாவை வருமானமாகப் பெற முடியுமென எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை தென்மாகாணத்திற்கான இந்த அதிவேக நெடுஞ்சாலையை எதிர்வரும் 27ஆம் திகதி மக்களின் பாவனைக்காக விடவுள்ளது. அதிவேக நெடுஞ்சாலையில் செல்லும் வாகனங்களுக்கான கட்டண அறவீடு குறித்து அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி கொட்டாவையிலிருந்து காலிவரை செல்வதற்காக ஒரு வழிக் கட்டணம் 400 ரூபாவாகும். நெடுஞ்சாலையில் செல்வதற்கான ஆகக் குறைந்த கட்டணம் 100 ரூபாவாகும். நெடுஞ்சாலையில் செல்லும் தூரத்திற்கேற்ப கட்டண அறவீடு மேற்கொள்ளப்படவுள்ளது. (சி)

# நிகழ்வுகள்

### அபிவிருத்திக் கூட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினர் குடிதண்ணீர் விநியோகத்திட்டம் சம்பந்தமான அபிவிருத்திக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துப் பிரதேச செயலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-302)

### ஒளிவிழா

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி நாகேந்திரராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் உப அதிபர் திருமதி எல்.ஆர். ராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-207)

### பொதுக் கூட்டம்

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் ப. வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-7)

### கலந்துரையாடல்

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் வன்முறையற்ற தொடர்பாடல் சம்பந்தமான பாடசாலை மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆனைக்கோட்டை புனித அன்னம்மாள் றோ.க.த. பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம-160)

***

யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆரிய குளத்தடியில் உள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-313)

***

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள ஆலய பரிபான சபைகள் , நிர்வாகிகள், குருக்கள் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வார். (ம-230)

### பரிசளிப்பு விழா

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் இராஜசேகரம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வார். (ம-313)

# இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க இந்தியா உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் தீர்மானம்

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அதன் மீது இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்று ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈழப் படுகொலைக்கு எதிரான மக்கள் இயக்கம் சார்பில் கோவையில் ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் வைகோ, பா.ம.க. தலைவர் ஜி.கே. மணி, தொல். திருமாவளவன், பழ.நெடுமாறன், கம்யூனிஸ்ட் ராஜா மற்றும் முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மாநாட்டின் போது பஷ்நாமை செய்தது. இதைத் தொடர்ந்து மாநாடு பாதியில் முடிவடைந்தது. எனவே, மாநாட்டின் முடிவில் நிறைவேற்றப்பட இருந்த தீர்மானங்களை நேற்று வெளியிட்டனர்.

அதன் விவரம் வருமாறு -

★ விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்க வேண்டும்.
★ 2013 பொதுநலவாய மாநாட்டை புறக்கணிப்பதாக இந்தியா அறிவிக்க வேண்டும்.
★ இலங்கைச் சிறையில் உள்ள தமிழர்களை உடன் விடுவிக்க வேண்டும்.
★ மூவரின் தூக்குத்தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும்

தனி ஈழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும். இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அதன் மீது இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2013 இல் இலங்கையில் நடைபெற உள்ள உச்சி மாநாட்டைக் கனடா பிரதமர் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளார். அதேபோல் இந்தியாவும் புறக்கணிப்பதாக அறிவிக்க வேண்டும்.

பேரறிவாளன், சாந்தன், முருகன் தூக்குத்தண்டனையை நீக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்க வேண்டும்.

இலங்கை சிறையில் விசாரணையின்றி சட்டத்துக்குப் புறம்பாக அடைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை நிபந்தனையின்றி இலங்கை அரசு விடுவிக்க வேண்டும்.

சாந்தன், முருகன், பேரறிவாளன் தூக்குத்தண்டனையை இரத்துச் செய்ய தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும்.

தமிழக சிறைகளில் வாடும் மரணதண்டனைக் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்.


இப்படிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் பெரியார் தி.க. பொதுச் செயலாளர் ராமகிருஷ்ணன், தமிழ்த்தேசிய பொதுச் செயலாளர் தியாகு மற்றும் பலர்

**மீண்டும் ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு**

கலந்து கொண்டனர்.

மாநாடு குறித்து இதில் இயக்க ஒருங்கிணைப்பாளர் கனகுறிஞ்சி கூறும்போது, ஈழத் தமிழர் வாழ்வு மாநாட்டை மழை காரணமாக தொடர்ந்து நடத்த முடியவில்லை. இருப்பினும் அது வெற்றி மாநாடு தான். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். மாநாட்டை மீண்டும் நடத்துவோம் - என்றார்.




யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, பார்வையாளர்களுடன் முன்வரிசையில் அமர்ந்திருப்பதையும், யாழ். அரச அதிபர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# சிறுவர் உரிமைகள் தொடர்பான புதிய சட்டங்கள் அடுத்த ஆண்டில்

## யாழ். வந்துள்ள அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 8

அடுத்த ஆண்டில் சிறுவர் உரிமைகள் தொடர்பான புதிய சட்டங்களைக் கொண்டு வருவதற்கு அரச மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகள் பல்வேறு நாடுகளிலும் காணப்பட்டாலும் எமது நாட்டில் சிறுவர் தொடர்பான உரிமை மீறல் செயற்பாடுகளைக் குறைப்பதற்காகவே இந்தப் புதிய நடவடிக்கை எடுக்கப்பட்வுள்ளது..

- இவ்வாறு தெரிவித்தார் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த.

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

யாழ். மாவட்டத்தில் 30 வருடங்களுக்கு முற்பட்ட கலாசாரம் மற்றும் பண்பாட்டு நிலைமைகள் மீளவும் கொண்டு வரப்பட வேண்டும். சிறுவர்கள் எதிர்கால சந்ததிகள் என்பதால் சிறுவர்களின் உரிமைகள் சட்ட ரீதியாகப் பாதுகாக்கப்படவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் நிகழ்வின் விருந்தினர்களாக சிறுவர் அதிகார சபைத்தலைவர் திருமதி அனோமா திஸ்ஸநாயக்க, யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் இசை, நடனம், பேச்சு, நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஒ-4-313)

# சிறுவர் நலனில் எமது சமூகமே அதிக அக்கறை காட்ட வேண்டும்

## அதன் மூலமே துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கலாம்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். மாவட்டத்தில் பல்வேறு காரணங்களால் 123 சிறுவர்கள் தீராத நோய்களுக்கு ஆளாகி சிகிச்சை பெற முடியாமல் உள்ளனர். அதேசமயம் சிறுவர் துஷ்பிரயோகங்கள் யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றன. சிறுவர்கள் நலனில் எமது சமூகம் தான் அக்கறைகொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினம் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அரச அதிபர் தொடர்ந்து கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் 50 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் 35 ஆயிரம் குடும்பங்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வு செய்யும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

எனினும் யாழ். மாவட்டத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இதில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். சிறுவர்களுக்கும் சமூகத்தில் ஓர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

கிராமப் புறங்களில் சிறுவர்களுக்கு எதிராக அதிக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறிப்பாக பெண்பிள்ளைகள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுகிறார்கள். சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுகின்றார்கள். இதன்மூலம் நோய்களினால் பாதிப்படைந்து சிகிச்சை பெறமுடியாமல் நிறுவ வைத்தியசாலைகளுக்குள் முடக்கப்பட்டுள்ளார்கள்.

இதுபோன்ற சிறுவர்களின் பிரச்சினைகளை எமது சமூகம் தான் முன்வந்து தீர்த்து வைக்க வேண்டும் - என்றார். (ஒ-313)

# கொழும்பில் இருந்து யாழுக்கு கஞ்சா கடத்திய 7 பேர் கைது

கொழும்பிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு வானில் கஞ்சா கொண்டு வந்த 7 பேரை வவுனியா பஸ் நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவர்கள் 7 பேரும் பெரும்பான்மை இனத்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரகசிய தகவலை அடுத்து குறித்த வானை இடைமறித்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் இவர்களிடமிருந்து 25 கிலோ கிராம் கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டன என்றும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அரசு ஜனநாயகத்தை மீறி செயற்படின் மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கும்

## கரு ஜயசூரிய எச்சரிக்கை

கொழும்பு, நவ. 08

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் பயன்பாடு குறைந்த சொத்துகளை அரசுடைமையாக்குல் சட்டத்தை அறிமுகப்படுத்தல் போன்ற செயற்பாடுகளால் அரசு ஜனநாயகத்தை மீறுமாயின் மாபெரும் மக்கள் எழுச்சி ஏற்படும் - என்று ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

1956 ஆம் ஆண்டு தனியாருக்குச் சொந்தமான பெருந்தோட்டங்கள், பஸ் கம்பனிகள், சுரங்கங்கள் என்பன அரசால் சுவீகரிக்கப்பட்டபோது உள்நாட்டு தொழிற்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. தற்போதைய அரசு மீண்டும் அத் தவறை செய்ய முயற்சிக்கிறது.

இந்தியாவில் ஆட்சியாளர்கள் ஒருபோதும் அப்படி செய்யவில்லை. அவர்கள் தொழில் முனைவோரையும் முதலீட்டாளர்களையும் ஊக்குவித்தனர்.

அதனால்தான் டாடா பிர்லா போன்ற உலகப் புகழ்பெற்ற கோடீஸ்வரர்கள் உருவானார்கள்.

இலங்கையில் சில தொழிலதிபர்கள், 1956 ஆம் ஆண்டின் தவறுக்குப் பின்னரும் எல்லா பிரச்சினைகளையும் எதிர்கொண்டு தலைதூக்கினர்.

செவனகல சீனித்தொழிற்சாலை உரிமையாளர் தயா கமகே, பெல்வத்தை சீனித் தொழிற்சாலை உரிமையாளர் ஹரி ஜயவர்தன ஆகியோரும் அவர்களில் இருவராவர் - என்றார் அவர்.

## இதோ!

**இன்னும் சொற்ப நாட்களே உள்ளன.**

**உங்கள் நகர் கிளிநொச்சியில்**

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

நிறுவனத்தினர் நடாத்தும்

**மிகப் பிரமாண்டமான**

**புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

**இடம்** : கிளிநொச்சி மத்திய கல்லூரி.
**காலம்** : இம்மாதம் (நவம்பர்) 14,15,16,17,18 ஆம் திகதிகளில்
**நேரம்** : காலை 8.30 மணிதொடக்கம் மாலை 5.00 மணிவரை.

எமது யாழ்.நகர் காட்சியறையில் உள்ள அனைத்து வகையான புத்தகங்கள், ஸ்ரேசனரிப் பொருள்கள், லெமினேற்றிங் மெசின், பைண்டிங் மெசின், ஓவர் கெட் புறொஜெக்ரர், புறொஜெக்ரர் ஸ்கிறீன், விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள், வைற்போட், மக்னெற்போட், பிளிப்சாட் வகைகள், இசைக் கருவிகள் உட்பட அனைத்து வகையான பொருள்களையும் பார்வையிடுவதுடன் கழிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,**
**212, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி/5870) (3-6-7) T.P.021 222 5542

## இவரைக் காணவில்லை



**ஆனந்தகணேஸ் கந்தசாமி** *(கணேஸ்)*


கடந்த 06.10.2011
வியாழக்கிழமை
3 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி வருவதற்கு 3.30 மணியளவில் யாழ். பேருந்து நிலையம் சென்றவர் இன்றுவரை வீடு திரும்பவில்லை.
இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

*ஆ.சரஸ்வதி (தாய்)*
*ஆலடிச் சந்தி,*
*மலையாளபுரம்,*
*கிளிநொச்சி.*
*0214913674*

ஆ.வளர்மதி (சகோதரி)
3 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
0777547230

(4-6-7) (14006)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி**
**சரஸ்வதிஅம்மா செல்லையா**

ஓய்வுபெற்ற ஆசிரியை
புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி

| அன்னை மடியில் | அரன் அடியில் |
|---|---|
| 15.12.1927 | 20.10.2010 |

பெற்றவளே எம்மைப் பேணிக்காத்தவளே
உற்றதுணையாய் இருந்து வழிகாட்டிவந்தவளே
அன்பின் திருவுருவே பாசத்தின் பிறப்பிடமே
குடும்பத்தின் ஒளிவிளக்கே குறைவில்லாச் செல்வமே

ஆண்டொன்று ஆனாலும் உங்கள் பிரிவு
ஆறாத்துயராக நிற்கிறதே எம் நெஞ்சில்
மண்ணுலகைவிட்டு நீர்மறைந்து போனாலும்
மறையாது நிற்கின்றீர் மணிவிளக்காய் எம் மனதில்

அன்னையின் நினைவலைகளை என்றென்றும்
நெஞ்சங்களில் சுமந்துநிற்கும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சகோதரர்கள், மைத்துனர்கள்.

Canada
Moahn & Saro : 647 926 3041
Thiru & Kala : 61 418 855 123
Australia
Jaya & Gowry : 61 427 110 235
Easan & Gowri : 61 409 407 684

### திருத்தி வாசிக்குக

இன்றைய உதயனில் 11 ஆம் பக்கத்தில் 'காணி தொடர்பான விழிப்புணர்வில் மாற்றுக்கொள்கைகளுக்கான மையம்' என்ற செய்தித் தலையங்கம் தவறுதலாக பிரசுரமாகியுள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் என்று திருத்தி வாசிக்கவும். ஆர்

## தவறிவிட்டது

676/3D, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 15, முகவரியைச் சேர்ந்த இராசரெத்தினம் சோபிதர் என்பவரது தே.அ.அ.(881072270 V), ATM காட் என்பன யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி பகுதிகளுக்குள் 05.11.2011 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(10212) தொடர்பு: 0772370220 (2-6-7)

## தேவை

**தனியார் பாலர் பாடசாலை ஒன்றுக்கு யாழ்ப்பாணத்துக்கும் மருதனார் மடத்துக்கும் இடைப்பட்ட K.K.S. வீதியை அண்மித்ததாக வீடு அல்லது கட்டடம் வாடகைக்கு தேவை.**
(10210) தொடர்பு: 0777729525 (4-6-7)

## தேசிய கிறிஸ்த ஐக்கியம் நடத்தும் 'ஒன்றிப்பின் மேன்மை' மகாநாடு

That they all may be one
NCASL

நவம்பர் : 09, 10 (புதன், வியாழன்)
நேரம் : காலை 8 - 2
இடம்: றிம்மர் மண்டபம், யாழ்ப்பாணம்.
*(யாழ்.பொலிஸ் நிலையம், அருகில்)*
அனைத்து திருச்சபை போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

தேசிய கிறிஸ்தவ ஐக்கியம்
யாழ்.மாவட்டம்
021 222 6341, 0773720154

## கண்ணீர் அஞ்சலி



*அமரர் நன்னியர் கணேஷ்*

[ஊரெழு விவசாய சம்மேளனத் தலைவரும் உரும்பிராய் கமநலசேவை நிலைய குழு உறுப்பினரும்]

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரும் ஊழியர்களும், தலைவரும் அனைத்து விவசாய சம்மேளனங்களும்.
*கமநல சேவை நிலையம், உரும்பிராய்.* (10214)(1,6)

# HND

கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மற்றும் **IT** துறையில் 2 வருட கற்கைநெறியைப் பயின்ற மாணவர்களுக்கான

**(HIGHER NATIONAL DIPLOMA)**
**OR**
**Advanced Diploma**

# B.Sc.

**in Computer Science**

கற்கைநெறிக்கான விசேடபிரிவு ஆரம்பம்!

**Duration: 01 Year**

சலுகைக் கட்டணத்தில்..

வங்கிகளில் பணிபுரியும் எமது பட்டதாரி மாணவர்கள் எமது **Degree Certificate** மூலம் பதவிநிலைகளில் தரமுயர்த்தப்பட்டுள்ளதை முன்னிட்டு ஆரம்பமாகியுள்ள விசேட பிரிவில் இணைந்து **B.Sc., Post Graduate Diploma, M.Sc., MBA** பட்டதாரியாகுங்கள்!

**B.Sc. in Comp. Sc.**
**Duration: 02 Years | A/L**
**Duration: 03 Years | O/L**

**Post Graduate Diploma in Comp. Sc. >> M.Sc.**
**Duration: 01 Year** (Any Degree)



**No.01 British Qualification**

சர்வதேசதரம் வாய்ந்ததென்று
எச் சந்தர்ப்பத்திலும் நிருபித்துவரும்
பட்டச்சான்றிதழ்களைப்பெற
இன்றே இணையுங்கள்....!!
நாளைய பட்டதாரியாகுங்கள்....!!



எமது மண்ணிலேயே பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து Degree Certificateயை வழங்கிவரும் தன்னிகரற்ற தனித்துவமான நிறுவனமாக எப்போதும் விளங்கிவரும்

# NORTH LANKA IIT

**#113, NAVALAR ROAD, JAFFNA.** **Phone: 021 567 7774**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அரச நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை எவ்வழி செல்லும்.....

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து, விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். - என்று எமது நாட்டின் அரசாங்கத்திடம், பிரிட்டன் கேட்டிருக்கிறது.

இத்தகவலை பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் வெளியிட்டுள்ளார். அந்நாட்டு நாடாளுமன்றில், உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

அதேவேளை, இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக, பிரிட்டனின் பொதுநலவாயப் பணியகம் வெளியிட்டுள்ள மனித உரிமை மற்றும் ஜனநாயகம் (2010) என்ற அறிக்கையில், இலங்கை கவலைக்குரிய நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது குறித்தும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

பாதிக்கப்படக் கூடிய குழுக்களின் மனித உரிமை நிலைமைகள் முன்னேற்றப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசு, இலங்கையைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதாகவும் அமைச்சர் அலிஸ்ரெயர் நாடாளுமன்றில் தமது பதிலில் பிரஸ்தாபித்துள்ளார்.

இத்துடன் நின்றுவிடாது, பிரிட்டனின் கரிசனைகளை, இலங்கை அரசுக்குத் தொடர்ந்து தெரிவித்து வருவதாகவும் அமைச்சர் சபையில் தகவல் வெளியிட்டார்.

அத்தோடு நிற்காமல், இலங்கையின் நிலைவரத்தை கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதரகம் மிக உன்னிப்பாகக் கண்காணித்துக் கொள்வதாகவும் அமைச்சர் அலிஸ்ரெயர் அறிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த பொதுநலவாய மாநாட்டில், அதற்கு முன்னர் இலங்கை அரசுக்கு எதிராகச் செய்யப்பட்ட பிரசாரத்துக்கு மாறாக, மூன்று வெற்றிகள் கிடைத்திருப்பதாகத் தெரிவித்து, வெளிவிவகார அமைச்சர் புளகாங்கிதம் அடைந்த ஒரு சில நாள்களில், பிரிட்டிஷ் நாடாளுமன்றில் இலங்கை நிலைவரத்தை தமது நாடு கண்காணித்து, அவதானித்து வருகிறது என்ற தகவல் வெளிவந்திருக்கிறது.

ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் நாடுகளை விடவும், இலங்கை மீது அதிக அக்கறை காட்ட வேண்டிய தேவையும், கரிசனையும் பிரிட்டனுக்கு அதிகம் உண்டு. காரணம் அறுபத்து மூன்று ஆண்டுகளுக்கு முந்திய காலப்பகுதியில் 133 ஆண்டுகளாக இலங்கை அதன் குடியேற்ற நாடாக விளங்கியது. இந்தியாவில் நடைபெற்ற சுதந்திப் போராட்டத்தைத் தொடர்ந்து அதற்குச் சுதந்திரம் வழங்கும் நிலை 1947 இல் உருவானது. அதன் நீட்சியாக அடுத்த வருடம் இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது.

தசாப்பதங்கள் ஆறு கழிந்தாலும், இங்கு என்ன நடைபெறுகிறது என்பதனை அவதானிப்பதற்கும், அக்கறை கொள்வதற்கும், கரிசனை கொள்வதற்கும் ஏனைய நாடுகளைவிட பிரிட்டனுக்கு அதிக பாத்தியதை உண்டு.

இன்றைய கட்டத்தில், இலங்கை மீது அனைத்துலக நாடுகள், முன்னர் எப்போதும் இல்லாதவாறு கூடிய கவனம் செலுத்துவதற்குக் காரணம், ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்குழு, இந்நாட்டு அரசு மீது சுமத்திய போர்க் குற்றங்களே. அவை பொய்யானவை என்று முழு அளவில் மறைப்பதிலும் மறுப்பதிலும் அரசு ஈடுபட்டிருப்பதால், பல எதிர்ப்புகளையும் சங்கடங்களையும் முகம்கொள்ள வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

அவற்றிலிருந்து தப்புவதற்காகவும் அல்லது நழுவுவதற்காகவும், தான் நியமித்துள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை, அனைத்துலக நீதியாளர்கள் கொண்ட குழு எதனுடனும் சமன்படுத்த, இலங்கை அரசு, தனக்குச் சார்பான சகல வாதங்களையும் முன்வைத்து முயற்சித்து வருகிறது; படாதபாடு படுகிறது.

ஆனால் நல்லிணக்க ஆணைக்குழுவுக்குப் பதிலாக ஆகக்குறைந்தது சர்வதேச நீதியாளர் ஒருவரையேனும் உள்ளடக்கிய கனதியான விசாரணைக் குழுவை நியமித்து, ஐ.நா. நிபுணர்குழு சுமத்தி உள்ள குற்றச்சாட்டுக்களை விசாரித்துக் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்பது சர்வதேச நாடுகள் பலவற்றினதும் நிலைப்பாடாக இருந்தது.

ஆனால், இலங்கை அரசு தனது நிலைப்பாட்டையே கிடுக்கிப் பிடியாக கௌவி வைத்துக்கொண்டுள்ளது. தான் உருவாக்கி உள்ள நல்லிணக்க ஆணைக்குழு இம்மாதம் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க உள்ள அறிக்கை போதுமானதாக, நம்பகத் தன்மை நிறைந்ததாக இருக்கும் என்று அரச தரப்புக் கூறிவருகிறது.

எந்த நாடாவது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் அதனை தவறானது என்று நிராகரிக்க முடியாது; கருத்தும் கூற இயலாது - என அமைச்சர் பீரிஸ் சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் குறைபாடுகள் காணப்படுமானால் குற்றச்சாட்டுகள் கூறப்படலாம். அவை வரவேற்கப்படும் - என்று வெளிவிவகார அமைச்சர் ஒரு நெளிந்த சமன் பாட்டையும் பிரலாபித்திருக்கிறார்.

எது எப்படியோ, அறிக்கை வெளிவந்த பின்னரே அதன் தாரதம்மியம் தெரியவரும். ஐ.நா. நிபுணர் குழுவினது அறிக்கையின் வீச்சையும் பெறுமானத்தையும் தாழ்த்தி, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின் அழுத்தத்தை அமிழ்த்தி விடுவதற்கு, நம் நாட்டு அரசு என்னதான் மந்திர, தந்திரம் செய்திருக்கிறது என்பது இன்னும் ஒரு வாரத்தில் தெரியவருமா, இல்லை அதுவும் பின்னகர்த்திச் செல்லப்படுமா என்பதனை எவரும் எதிர்வுகூற முடியாதே....!

## வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இராணுவத்தினர் 1776 நிரந்தர வீடுகள்

### யாழ்.கட்டளைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ.8

தற்காலிக வீடுகளில் மீளக் குடியமர்த்தப்பட்ட வடபகுதி மக்களுக்கு இராணுவத்தால் தற்போது 1,776 நிரந்தர வீடுகள் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் 2,000 வீடுகளையும் இவ்வாறு நிர்மாணித்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பருத்தித்துறை, வெற்றிலைக்கேணி, மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் தற்போது இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இராணுவத்தினரின் முயற்சியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றின் அனுசரணையுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த வீடொன்றுக்கு 3 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன் இந்த வீடொன்றுக்கான அரசின் மதிப்பீட்டுப் பெறுமதி 6.5 லட்சம் ரூபாவாகும் என அவர் தெரிவித்தார்.

இந்த வீட்டுத் திட்டத்துக்கு ஒட்டுமொத்தமாக 53 கோடி 28 லட்சம் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளதாகவும் கட்டளைத் தளபதி கூறினார்.

மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள வடபகுதி மக்களின் தற்காலிக வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இராணுவத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் இதுவரை 20 வீடுகள் பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைக்கப்புட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் 'ஹபிற்றற்' தன்னார்வத் தொண்டு நிறுவனம் இந்த வீடுகளை அமைப்பதற்குக் கட்டட உபகரணங்களை வழங்கியதன் மூலம் பெரும்பங்களிப்பை வழங்கியுள்ளதாகக் கூறிய அவர் அடுத்த ஆண்டின் ஜனவரி மாதமளவில் எஞ்சியுள்ள 2000 வீடுகளுக்கான திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

(த-22)

## உள்ளூராட்சித் தேர்தலுக்கான செலவினம் 195 கோடி ரூபா

கொழும்பு, நவ.08

மூன்று கட்டங்களாக இடம்பெற்றுள்ள உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு தேர்தல் திணைக்களத்துக்கு 195 கோடி ரூபா செலவாகியுள்ளது.

இதற்கமைய மூன்று கட்டங்களாக நடைபெற்ற இந்தத் தேர்தலில் பொலிஸ் திணைக்களத்துக்கு 31 கோடி ரூபாவும், தபால் திணைக்களத்துக்கு 25 கோடி ரூபா வும், அரச அச்சகத்துக்கு 13 கோடி ரூபாவும் செலவாகியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றுக்கு மேலதிகமாகத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த உதியோகத்தர்களுக்கான எரிபொருள் செலவினம் மற்றும் தேர்தல்கள் அலுவலகத்தின் செயற்பாடுகள் ஆகியவற்றுக்குக் கணிசமான தொகையொன்று செலவாகியுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகம்தெரிவித்துள்ளது.

மேற்படி உள்ளூராட்சித் தேர்தல்களுக்காகத் தேர்தல் செயலகம், இந்த ஆண்டின் ஆரம்பத்தில் 200 கோடி ரூபாவை ஒதுக்கியிருந்தது.

மேலும் 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலின் முதற்கட்டம் கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதியிலும் , இரண்டாம் கட்டம் ஜூலை மாதம் 23 ஆம் திகதியிலும், மூன்றாம் கட்டம் ஒக்ரோபர் மாதம் 08 ஆம் திகதியிலும் இடம்பெற்றிருந்தது.

இந்த மூன்று கட்டங்களிலும் 322 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது. (த-22)

## இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு நாளொன்றுக்கு ரூ.22 லட்சம் நட்டம்

### டீசல் விலை அதிகரிப்பே காரணம்

கொழும்பு, நவ.8

டீசல் விலை அதிகரிப்பையடுத்து இலங்கைப் போக்குவரத்துச் சபை நாளொன் றுக்கு 22 இலட்சம் ரூபா வரை நட்டத்தை ஏற்க வேண்டியுள்ளதாக இலங்கைப் போக்கு வரத்துச் சபை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக சபைக்கு மாதாந்த நட்டம் 6.5 கோடி ரூபா எனவும் அவர் தெரிவித்தார்.

பஸ் கட்டண அதிகரிப்பை மேற்கொள்வதைத் தவிர, சேவையைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத சிரமநிலை உருவாகியுள்ளது எனவும் குறைந்த பட்சம் ஊழியர்களின் சம்பளங்களைக் கூட வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இ.போ.ச முகம் கொடுத்துள்ள இந்த நிலைப்பாடு குறித்து போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இ.போ.ச இதுவரை அன்றாடம் கிடைக்கும் வருமானம் மூலம் ஊழியர்களின் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் பஸ்களின் பராமரிப்புச் செலவு ஆகியவற்றை மேற்கொண்டு வந்ததாகவும் டீசலின் விலை அதிகரித்துள்ளதால் தற்போது ஏற்க வேண்டியுள்ள அதிகரிப்புச் செலவினத்தால் போக்குவரத்துச் சேவைகள் முடங்கும் அபாயம் நிலவுவதாகவும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

இன்றைய நிலையில் நாளொன்றுக்கு 5,250 பஸ்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.மேலும் 400 பஸ்களை இந்த மாதம் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(த-22)

## 79 லட்சம் மீற்றர் துணி வகைகள் பாடசாலை சீருடைக்காக இறக்குமதி

### அமைச்சரவை அனுமதி கிடைத்தது

கொழும்பு, நவ.8

அடுத்த ஆண்டு பாடசாலைச் சீருடைகளுக்கு 79 இலட்சம் மீற்றர் துணிவகைளைச் சீனா மற்றும் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இது குறித்துக் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் முன்வைக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அரசின் ஊடகப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். 58 இலட்சத்து 10 ஆயிரம் மீற்றர்கள் வெள்ளைத்துணி, 9 இல்ட்சத்து 80 ஆயிரம் மீற்றர்கள் வெள்ளைக் காற்சட்டைத் துணி, 7 இலட்சத்து 70 ஆயிரம் மீற்றர்கள் நீலக் காற்சட்டைத்துணி மற்றும் 4 இலட்சம் மீற்றர்கள் காவி உடைத்துணி என்ற அளவில் இவை இறக்குமதி செய்யப்படவுள்ளதாக கடந்த 03ஆம் திகதி அரச தகவல் திணைக்களத்தில் இடம் பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். இது தொடர்பாக அரசால் செலவிடப்பட்டும் தொகை ஆயிரத்து 54 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

# திருத்த வேலைக்காக நிறுத்தப்படும் மின் இருண்ட பின்னரே மீண்டும் வருகிறது

## இதனால் பொதுமக்கள் பெரும் சிரமம்

தென்மராட்சி, நவ.8

வீதி அகலிப்புக்காக நிறுத்தப்படும் மின்விநியோகம் மீண்டும் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தினால் தூர இடங்களிலிருந்து மாலை 6 மணிக்குப் பின்னர் வருவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அண்மையில் பெய்த மழையின் பின்னர் பல வீதிகள் சேதமடைந்திருப்பதால் வாகனங்கள் 6 மணிக்குப் பின்னரே தென்மராட்சிப் பிரதேசத்தினுள் வந்து சேர்கின்றன.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் மாலை 6 மணிக்கு முன்னர் இருள் சூழ்ந்து விடுகிறது மின்சாரம் இல்லாததால் வாகனங்களில் வருவோர் பயப் பீதியுடன் வீடுகளுக்குச் செல்வதாகவும் சில பெற்றோர் வீதிகளில் வந்து நின்று பிள்ளைகளை அழைத்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின்தடை ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய தலைமைக் காரியாலயம் அறிவிக்கின்றபோதிலும் தென்மராட்சியில் நிறுத்தப்படும் மின்விநியோகம் இரவு 7 மணிக்குப் பின்னரே வழங்கப்படுகிறது.

மின்சார சபையினால் அறிவிக்கப்படும் நேரத்துக்கு ஒருபோதும் மின்சாரம் கிடைப்பதில்லை என தென்மராட்சி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தொடர்ந்து இந்த நடைமுறை உள்ளமையால் தாம் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பகலில் நீண்ட நேரம் தடைப்பட்டிருக்கும் மின்சாரத்தை இருள்சூழ முன்னர் தந்தாலாவது தாம் பல அலுவல்களை கவனிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

தற்போது ஆரம்பமாகியுள்ள மழைகாலம் முடியும் வரையாவது அறிவித்தலில் குறிப்பிடும் நேரத்துக்கு மின் விநியோகம் வழங்கமாட்டார்களா எனப் பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். (207)

# நவாலி கொத்துக்கட்டியில் திண்மக் கழிவுகள் அகற்றல்

யாழ்ப்பாணம், நவ.8

நவாலி கொத்துக் கட்டிப் பகுதியில் கொட்டப்பட்டிருந்த திண்மக் கழிவு முற்றாக அகற்றப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பிரதேசத்தில் டெங்கு அபாயம் நீங்கியுள்ளது.

இதன் மூலம் கடந்த ஆறு வருடங்களாக திண்மக் கழிவினால் மூடப்படிருந்த கேணியும் அருகில் உள்ள நன்னீர்க் கிணறும் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கேணியும் கிணறும் மீளப் புனரமைத்துத் தரப்படும் என வலி தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசன் தெரிவித்தார்.

நவாலி கொத்துக்கட்டிக் கேணியடிப் பகுதி நீண்ட காலமாகப் புனரமைப்பு இன்றியும், திண்மக் கழிவுகளாலும் நிறைந்து வழிந்தது.

மேற்படி விடயத்தை நவாலி பொது அமைப்புக்கள் வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வந்தன.

இதையடுத்து தொழில் நுட்ப அதிகாரி க. சுகர்ணன், வேலைகள் மேற்பார்வையாளர் ஏ. சாந்தகுமார் ஆகியோர் அடங்கிய குழுவினர் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'பைக்கோ' மூலம் மேற்படி கழிவுகளை அகற்றினார்கள்.

இதனையடுத்து கழிவுகள் அந்தப் பகுதியில் கொட்டுவதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டது.

இதேவேளை கேணியடிப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனப் பிரதேச சபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

நவாலி கொத்துக்கட்டிக் கேணியடியில் புனிதத் தன்மை பேணுவது தொடர்பாகவும், தொடர் சிரமதானப் பணி மூலம் மேற்படிப் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (த-302)

# சாதாரண தர மாணவர்களுக்கு கணித, விஞ்ஞானக் கருத்தரங்கு

## ஐந்து வலயங்களிலும் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,நவ.8

ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாடக் கருத்தரங்கு எதிர்வரும் 19 ஆம், 20 ஆம், 26 ஆம் திகதிகளில் வலய ரீதியாக நடைபெறவுள்ளது.

யாழ்.நகரப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பாடசாலை களையும் உள்ளடக்கியதாக இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கருத்தரங்கின்போது மாணவர் களுக்கான போக்குவரத்து மற்றும் உணவு என்பன அந்தந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பாகவுள்ள இராணுவத் தளபதிகளால் வழங்கப்படவுள்ளது என வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கணித விஞ்ஞான பாடத்துக்கு தோற்றும் இந்த மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்கும் நோக்கில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இவற்றை நடத்தும்படி இராணுவத்தினர் கேட்டுக் கொண்டனர். அதனடிப்படையில் மாணவர் நலன்கருதி இந்தக் கருத்தரங்கை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் யாழ். வலயத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கருத்தரங்கு நடைபெறும். தென்மராட்சி வலயத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறும்.

வலிகாமம் வலயத்தில், உடுவில் மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறும்.

வடமராட்சி வலயத்தில் வட இந்து மகளிர் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறும்.

தீவக வலயத்தில் காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் கருத்தரங்கு நடைபெறும்.

கிளிநொச்சி வலயத்தில் பளை மத்திய கல்லூரியில் நடைபெறும். சுமார் 6 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு இந்தக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது என்றார் அவர். (த-4)

### உயிர்காக்கும் பணி...




தொடரட்டும்: யாழ்.இந்துக் கல்லூரியின் இன்றறக்ட் கழகத்தினால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் 70 மாணவர்கள்வரை இரத்ததானம் வழங்கினர். (த-15)

# பொன்னாலையில் எரிபொருள் நிலையம்

சண்டிலிப்பாய்,நவ.8

சபையின் வருமானத்தை அதிகரிக்கும் வகையிலும் பாவனையாளர் களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும் வலிகாமம் மேற்கில் பொன்னாலைச் சந்தியில் எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

தலைவர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மேற்படி தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வலிகாமம் மேற்கில் தற்பொழுது சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான ஒரே ஒரு எரிபொருள் விற்பனை நிலையம் மட்டும் இயங்கி வருகிறது.

எமது பிரதேச சபையின் எல்லைக்குள் காணி ஒன்றைக்கொள்வனவு செய்து எரிபொருள் நிலையம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் சபையின் வருமானத்தை அதிகரிப்பதுடன் மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும். பொன்னாலைச் சந்திப் பகுதியில் பொருத்தமான இடத்தில் எரிபொருள் நிலையம் அமைப்பதன் மூலம் தீவகப்பகுதி மக்களும் நன்மையடைவார்கள் என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-115)

# வலி.தென்மேற்கு வீதிகளுக்கு பெயர் சூட்டுவதற்கு ஏற்பாடு

சண்டிலிப்பாய், நவ.8

வலி தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள முக்கியமான வீதிகளுக்குப் பெயர் சூட்டப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையைப் பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

பரந்துபட்ட பிரதேசத்தை உள்ளடக்கிய வலி. தென் மேற்குப் பிரதேசத்தில் பல தரப்பட் வீதிகள் இருந்த போதிலும் அந்த வீதிகளுக்குப் பெயர்கள் இல்லாததினால் பொது மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதுடன் தபால் விநியோகத்திலும் தாமதங்கள் ஏற்படுகின்றன.

இந்த நிலைமையைக்கருத்தில் கொண்டும் பொது மக்களின் நலன் கருதியும் இந்த வீதிகளுக்குப் பெயர்சூட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதனால் பிரதேச சபை இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. (த-115)

# உதயபுரம் கரையோர வீதியில் சேறும் சகதியும்; மக்கள் அவலம்

கொழும்புத்துறை, நவ.7

கொழும்புத்துறை, உதயபுரம் பகுதிக்கான கடற்கரையோரமாகவுள்ள போக்குவரத்துப் பாதை சீரின்மையால் இந்த வீதியூடான போக்குவரத்து தடைப்படும் நிலை தோன்றியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மணல் பாதையாக உள்ள இந்த வீதியில் உள்ள குழிகளில் மழைநீர் தேங்கியுள்ளது.

இதுமட்டுமன்றிக் குறித்த வீதி சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் அவசர தேவைகளுக்காக வாகனங்கள் சென்று வருவதிலும் நாளாந்த செயற்பாடுகளுக்காக நகரப் பகுதிகளுக்குச் சென்று வருவோரும் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த வருட ஆரம்பத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட உதயபுரம் கிராமத்தில் நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

தற்போது இந்த வீதி சேதமடைந்துள்ளதால் மாற்றுப் பாதையூடாகச் சுற்றிவர வேண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம- 135)

# கிழக்கு அரியாலையில் நெற்செய்கை இம்முறை இல்லை


கொழும்புத்துறை, நவ.8

கிழக்கு அரியாலைப் பகுதி வயல் நிலங்களில் இம்முறை காலபோக நெற்செய்கையை விவசாயிகள் மேற்கொள்ளவில்லையென அந்தப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு அரியாலை முனைப் பகுதிகளில் வயல்நிலங்களில் மேற்கொள்ளப்படும் பயிர்கள் அந்தப்பகுதி காடுகளில் உள்ள கட்டாக்காலி மாடுகளினால் சேதமாக்கப்படும் என்ற அச்சத்தினால் நெல் விதைப்பை மேற்கொள்ளாது கவலையுடன் விவசாயிகள் உள்ளனர். கடந்த வருடம் இந்தப்பகுதி களில் முட்கம்பி வேலிகள் அமைத்து நெற்செய்கையை மேற் கொண்டபோதும் அறு வடைக்கு முன்னர் வேலிகள் சேதமடைந்தமையால் மாடுகள் வயல்களுக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்ததாக விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் நடமாடும் பெருமளவான கட்டாக்காலி மாடுகள் பிடித்து அகற்றப்படும் வரை விவசாயம் மேற்கொள்வது கேள்விக்குரியதாகவே இருக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தப்பகுதிகளில் சுமார் 750 பரப்பு நெற்காணிகள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-135)

# வடபகுதியில் அமைதியான ஹஜ்



யாழ்ப்பாணம் பெரிய பள்ளி வாசலில் ஹஜ் பெருநாள் பண்டிகையை முன்னிட்டு விசேட தொழுகை நேற்றுக் காலை 8.15 மணியளவில் இர்ஷார் மௌலவி தலைமையில் இடம்பெற்றது. (படம்- கஜீபன்)

யாழ்ப்பாணம்,நவ.8

முஸ்லிம்களின் பெருநாளான ஈதுல் அல்ஹா ஈகைத் திருநாளை வடபகுதி முஸ்லிம் மக்களும் நேற்றைய தினம் அமைதியான முறையில் மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள்.

இந்தத் திருநாள் இப்ராஹிம் வரலாறுகளில் ஒன்றாகும். இதனை முஸ்லிம்கள் தியாகத்தின் பெருநாளாகக் கொண்டாடுகின்றனர்.

வடபகுதியில் யாழ்ப்பாணம் பெரிய பள்ளிவாசல் , யாழ்.முஹமதியாப் பள்ளிவாசல் மற்றும் வேலணை மங்குஸ்தான் பள்ளிவாசல் எனப் பல இடங்களில் உள்ள பள்ளி வாசல்களிலும் விசேட தொழுகைகளில் ஈடுபட்டு முஸ்லிம்கள் தமது பெருநாளைக் கொண்டாடினர்.

இந்த வழிபாட்டின் சிறப்பு நேரம் நேற்று முற்பகலாகும். நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் 7.30 மணி வரை முஸ்லிம் பெண்களும் காலை 8 மணி முதல் 8.30 வரை ஆண்களும் ஹஜ் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

முஸ்லிம்கள் அனைவரும் ஹஜ்ஜுப் பெருநாள்முழக்கத்துடன் தமது வீடுகளிலிருந்து பள்ளியை நோக்கிச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

நேற்றுக்காலை ஹஜ் பெருநாளை முன்னிட்டு யாழ்ப்பாணப் பள்ளிவாசல்களில் இடம்பெற்ற விசேட தொழுகைகளில் பெரும் எண்ணிக்கையான முஸ்லிம்கள் கலந்துகொண்டனர். தற்போது யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம்களுடன் வியாபார நோக்கத்துக்காக இங்கு வந்துள்ள முஸ்லிம்களும் அமைதியாகவும் சந்தோஷமாகவும் ஹஜ் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடபகுதியில் தற்போது பெரும் எண்ணிக்கையான முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் நிலையில் நேற்று ஹஜ் பெருநாளை தாம் சிறப்பாக கொண்டாடியதாக அவர்கள் தெரிவித்தனர்.

(த-4)

# காரைநகர் உள்ளூர் பஸ்சேவை சீராக இல்லை; மாணவர் சிரமம்

காரைநகர் உள்ளூர் பஸ் சேவை சீராக இடம்பெறாததமையால் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் புகார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலையால் தினமும் காலையும் மாலையும் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி உள்ளூர் பஸ் சேவை ஒன்று நடத்தப்படுகின்றது. இந்த பஸ்சேவையை நம்பிப் பெருமளவான பாடசாலை மாணவர்கள் பயணம் செய்கின்றனர். எனினும் இந்த பஸ்சேவை கடந்த சில வாரங்களாக சீராக இடம்பெறாமையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

காலையில் பாடசாலை செல்லும் மாணவர்கள் பிற்பகல் பஸ் வராமையால் நீண்ட நேரம் காத்திருந்தபின் கால்நடையாக வீடு செல்ல வேண்டி உள்ளது. அதேபோல் காலையில் பஸ் சேவை இடம்பெறாவிட்டால் மீண்டும் வீடு திரும்பும் நிலை ஏற்படுகின்றது. இந்த பஸ் சேவையை தினமும் ஒழுங்கான முறையில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை-

யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகருக்கு பயணம் செய்கின்ற இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவையும் ஒழுங்கீனமாக இருப்பதால் அதில் பயணம் செய்யும் பாடசாலை ஆசிரியர்களும் அலுவலகங்களில் பணிபுரிவோரும் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாவதுடன் தேவையற்ற லீவுகளும் எடுக்கவேண்டிய நிலை காணப்படுவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த சேவைகளையும் சீராக நடத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த- 250)

## மருதங்கேணியில் 32 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள்

வடமராட்சி, நவ.8

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள 32 முன்பள்ளி சிறார்களுக்கு புத்தகப்பைகளும், அப்பியாசக் கொப்பி களும் தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்டன.

சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி இந்தப்பிரிவைச்சேர்ந்த முன்பள்ளிச் சிறார்களுக்கு வழங்குவதுக்கென குறிப்பிட்ட அளவு கற்றல் உபகரணங்களைத் தந்துதவுமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு வேண்டு கோள் விடுத்திருந்தார்.

இதனையடுத்து சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கிய முன்பள்ளிச் சிறார்களுக்கான கற்றல் உபகரணங்கள் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு நடத்திய சர்வதேச சிறுவர்தின விழாவில் வைத்து வழங்கப்பட்டன. (த-236)

## 'பாண்ட்' வாத்தியம் அன்பளிப்பு

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய ஆண் மாணவர்களுக்கான பாண்ட் வாத்தியக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வித்தியாலய பழைய மாணவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய முருகேசு சந்திரகுமார் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் வழங்கிய ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாக அதிபர் வே. விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

வித்தியாலய மாணவிகளுக்கான பாண்ட் வாத்தியக் கருவிகள் ஏற்கனவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த- 207)

# உதவித் திட்டங்கள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.8

பிரிட்டன் உதவி நிறுவனமான 'லிட்டில் எய்ட்' உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

யாழ்.ஒஸ்மானியா முஸ்லிம் பாடசாலை, குருநகர் சென்.றோக்ஸ் றோ.க.த.க பாடசாலை ஆகியவற்றில் இந்த நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட நூலகங்கள் இன்று காலை திறந்து வைக்கப்படவுள்ளன.

அத்துடன் கோப்பாய் நவமங்கை நிவாசத்தில் அமைக்கப்பட்ட கணினித் தொழிற் பயிற்சி நிலையமும் இன்று மாலை 4 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது. 'லிட்டில் எய்ட்' நிறுவனத்தின் ஸ்தாபகரும் வேலைத் திட்ட இணைப்பாளருமான டறின் கொன்ஸ்ரன்ரைன் இவற்றைத் திறந்து வைப்பார்.

# சிறுப்பிட்டி ஞானவைரவர் வீதியை புனரமைக்காமை குறித்து விசனம்

## ஆளுநரிடம் முறையிட முடிவு

யாழ்ப்பாணம், நவ.8

சிறுப்பிட்டி மேற்கு ஞான வைரவர் வீதியை வலி.கிழக்கு பிரதேச சபை கவனத்தில் எடுக்காமை குறித்து வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியின் கவனத்திற்கு கொண்டுவரப்படவுள்ளது.

சிறுப்பிட்டியில் உள்ள ஆலய நிர்வாகிகளும், பொது அமைப்புக்களும், சனசமூக நிலையங்களுமாக 5 அமைப்புக்கள் இந்த விடயத்தை ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவரவுள்ளன.

வலி.கிழக்கு பிரதேச சபையின் கீழ் வரும் சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர் வீதி விவசாயிகள், அரச அலுவலர்கள், பாடசாலைமாணவர்கள், கைத்தொழிலாளர்கள் எனப் பலரும் பயன்படுத்தும் வீதி யாகும்.

இந்த வீதியின் புனரமைப்புக் குறித்து கடந்த 5 வருடங்களுக்கு மேலாக அங்கு கடமையாற்றிய செயலாளர்களிடம் அறிக்கைகள் , மகஜர்கள் வழங்கப்பட்டன. எனினும் பிரதேச சபை இந்த விடயத்தில் அக்கறை காட்ட வில்லையென அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வீதி அழிவடைந்துள்ளது. இந்தவீதி முற்றாகச் சேதமடைந்துள்ளமையால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம், கமநெகும, நெல்சிப் திட்டம் எனப் பல பெயரை கூறி வலி.கிழக்கு பிரதேச சபையினர் எமது மக்களின் கோரிக்கையை நிறைவேற்றாமல் உள்ளனர்.

இதனால் நாம் வடக்கு மாகாண அளுநரிடம் நேரடியாகச் சந்தித்து இந்தவிடயம் குறித்து முறையிட முடிவு செய்துள்ளதாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (த)

# நல்லை ஆதீனத்துக்குப் புதிய கட்டடம் 4 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ.8

யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்கு 4 கோடி ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா நேற்று திங்கட்கிழமை முற்பகல் நடை பெற்றது. நல்லை ஆதீனத் துக்கு அண்மையிலுள்ள வளா கத்தில் இந்த அடிக்கல் நடப்பட்டது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சார்ய சுவாமிகள் முதலில் அடிக்கல் நட்டு வைத்தார். தொடர்ந்து அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் வி.கயிலாயபிள்ளை உட்பட பலர் கற்களை நட்டனர்.

புலம்பெயர் தமிழர்களால் நிதி சேகரிக்கப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஊடாக இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்படுகின்றது. சுமார் நான்கு கோடி ரூபா செலவில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

அடிக்கல் நடும் விழா ஆரம்பமாவதற்கு முன்னர் கோயிலிருந்து அடிக்கல் நடும் கற்கள் உள்ளிட்ட பொருள்கள்எடுத்து வரப்பட்டன. பின் இந்து சமயக் கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அகில இலங்கை இந்து மாமன்ற உறுப்பினர்கள், சமயப் பெரியார்கள், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



தொடர்ந்து ஆதீன மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. இதன் போது இந்தப் புதிய கட்டடத்துக்கு நிதி சேகரித்து வழங்கிய புலம்பெயர் தமிழர்களுக்கு நன்றி கூறப்பட்டது.

(த- 4)

# இலங்கை மீது வோஷிங்டன் உளவியல் போர்

## அமெ. ஆங்கில ஊடகச் செய்தியாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.8

இலங்கை மீது அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் உளவியல் போர் ஒன்றைத் தொடுத்திருப்பதாக ஆங்கில ஊடகம் ஒன்றின் அமெரிக்கச் செய்தியாளர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு மாதகாலமாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அதிகாரபூர்வமற்ற வகையில் இலங்கை அரசுக்கு தகவல்களை வழங்கி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நேரடியான ஆய்வுகளைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்றும், அவதானிப்புகள், பரிந்துரைகள், வெளிப்படைத் தன்மையைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் ராஜாங்கத் திணைக்களம் அடிக்கடி கூறி வரும் கருத்து, இலங்கை மீதான உளவியல் போரே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விரைவில் இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ள நிலையிலேயே அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் இந்த உளவியல் போரில் இறங்கியுள்ளதாகவும் அந்தச் செய்தியாளர் கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியா நுலன்ட் அம்மையார், ஆணைக் குழுவின் அறிக்கை குறித்துப் பெரிதும் எதிர்பார்ப்புடன் இருப்பதாகவும் அது உயர்ந்த தரத்தில் இருக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)




யாழ்.மாவட்ட முதியோர் பேரவையின் ஏற்பாட்டில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு மானிப்பாய் பிரதேச சபையில் இடம்பெற்றது. நிகழ்வில் சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் முதியவர்களுக்கு சத்து மாவும், மற்றொருவருக்கு சக்கரநாற்காலி ஒன்றையும் வழங்கியது. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவற்றை வழங்கினார்.

# தேசிய சமூக ஒருமைப்பாட்டு அமைச்சால் தீபாவளி நிகழ்வு

## நாளை அமைச்சுச் செயலர் தலைமையில்

கொழும்பு, நவ.8

தேசிய சமூக ஒருமைப்பாட்டை கருத்தில்கொண்டு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் வேண்டுகோளின் பேரில் தீபாவளி விசேட நிகழ்வு நாளை புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் மேற்படி அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சின் செயலாளர் திருமதி.மல்காந்தி விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ். இராதாகிருஷ்ணன் கலந்துகொள்ள உள்ளார். இந்த நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கலாநிதி எஸ். மோகன் மேற்கொண்டுள்ளார் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு அறிவித்துள்ளது. (வ)

# டெங்கைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்கவும்

## சுகாதார அமைச்சு வேண்டுகோள்

சண்டிலிப்பாய், நவ.8

டெங்கு நோயைப் பரப்பக்கூடிய நுளம்புகள் உருவாகுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டால் சம்பந்தப்பட்டோர் மீது இலங்கைச் சட்டப் பிரிவு 262 ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்தில் பொலிஸாரால் வழக்குத் தாக்குதல் செய்வதற்கு வாய்ப்பு உள்ளது.

எனவே வீண் சிரமங்களுக்குள்ளாகாமல் உங்கள் சூழலை டெங்கு நுளம்பு உருவாகாத சூழலாக மாற்றுவதற்கு முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு சுகாதார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கவனம்' என்ற தலைப்பில் பொலிஸாரால் மக்களுக்கு விநியோகிக்கப்படும் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

உங்களின் சுற்றுச்சூழலில் நுளம்புகள் பெருகுவதற்கான மற்றும் டெங்கு நோயினைப் பரப்பக்கூடிய நுளம்புகள் உருவாகுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா எனப் பரீட்சிப்பதற்காக எதிர்வரும் தினங்களில் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழு ஒன்று உங்கள் இல்லங்களுக்கு பயணம் செய்யவுள்ளது. எனவே அவர்களுக்கு உங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்குவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் பரிசோதனையின் போது உங்களின் சூழல் மேல் குறிப்பிட்டது போல் அடையாளம் காணப்பட்டால் சட்டப்பிரிவு 262 ஆம் பிரகாரம் டெங்கு நோய்க் காவிகள் பரவுவதற்கு ஏதேனும் ஒரு காரணியைச் சட்ட விரோதமாக அல்லது பொறுப்பற்ற விதத்தில் செயற்படுத்திய குற்றச் சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான வாய்ப்பு உள்ளது.

எனவே அவ்வாறான ஒரு சிரமத்துக்குள்ளாகாமல் உங்கள் சூழலை டெங்கு நுளம்புகள் உருவாகாத சூழலாக மாற்றுவதற்கு உங்கள் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம் - என்றுள்ளது. (த-115)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையால் இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் அதிகரிப்பு

கொழும்பு,நவ.8

அனைத்துலக போர்க்குற்ற நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்தக் கோரும் நாடுகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மீது தாக்குதல் தொடுக்கத் தயாராகி வருவதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையைச் சமர்ப்பிக்க வழங்கப்பட்டுள்ள காலக்கெடு எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. ஆனால் இந்த அறிக்கை எப்போது இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்பது குறித்த குழப்பமான தகவல்கள் வெளியாகின்றன.

எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியின் பிறந்த நாளன்று இந்த அறிக்கை கையளிக்கப்படும் என்று முன்னர் கூறப்பட்டது. இதே வேளை, காலக்கெடு முடிந்த நான்கு நாள்களின் பின்னர் எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று இலங்கை அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். நேற்றுடன் இந்த அறிக்கை தயாரிப்புப் பணி முடிந்துவிடும் என்றும் இந்த வாரமே இது இலங்கை அரசிடம் கையளிக்கப்படும் என்றும் மற்றொரு தகவல் கூறுகிறது.

இதேவேளை, அறிக்கை தயாரிப்பு முடிவடைந்து செப்பனிட்டு, சரிபார்க்கும் பணிகள் நடந்து வருவதாகவும், நேற்றுடன் அது நிறைவடையும் நிலையில், எதிர்வரும் 11 ஆம் திகதிக்கும் 15ஆம் திகதிக்கும் இடையில் இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை, புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் செயற்படும் சில எதிர்க்கட்சிகள் தமது அரசியல் விளையாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இலங்கை அரசு கவலை கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதேவேளை, ஆணைக் குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்ட 2 வாரங்களுக்குள் அது பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்ற அழுத்தங்கள் இலங்கை அரசுக்கு அதிகரித்துள்ளன.

முன்னதாக இந்த அறிக்கை பொதுமக்களுக்குப் பகிரங்கப் படுத்தப்படாது என்று ஆணைக் குழுவின் அதிகாரி ஒருவர் கூறியிருந்தார். ஆனால் அந்த அறிக்கையை இலங்கை ஜனாதிபதி நடாளுமன்றத்தின் மூலம் பகிரங்கப்படுத்துவார் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் 2 வாரங்களுக்குள் இந்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று கொழும்பிலுள்ள சில வெளிநாட்டு ராஜதந்திரிகளும், ஊடகங்களின் ஒருபகுதியும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

அத்துடன் இந்த அறிக்கையை அடுத்த ஆண்டு ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்குமாறு பரப்புரை செய்யவும் இவர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் அந்த ஆங்கில ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (வ)

# வீதி புனரமைக்கப்பட்டதால் சிரமமின்றி மக்களின் பயணம்

நவாலி, நவ.8

நவாலி சின்னப்பா வீதி, வைரவர் வீதி, பிள்ளையார் வீதி என்பன புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதால் நீண்டகாலமாக வெள்ளத்திலும் சேற்றிலும் மிதந்த மக்கள் தற்போது எவ்வித கஷ்டமுமின்றி சந்தோசத்துடன் பிரயாணம் செய்கின்றனர்.

மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு. சிவலிங்கத்தின் முயற்சியின் பயனாக நெல்சிப் திட்டத்தின் கீழ் 80லட்சம் ரூபா செலவில் கருங்கல் வீதி அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்யும் மழையினால் சிரமங்களை எதிர்நோக்காது அந்தப் பகுதி மக்கள் பிரயாணம் செய்து வருகின்றனர்.

இதற்கு நிதி வழங்கிய உலக வங்கியினருக்கும், பிரதேச சபையின் செயலாளருக்கும், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோருக்கு மக்கள் தமது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துள்ளனர். (வ-100)

# வீட்டுத்தோட்டம் செய்வோருக்கு மரக்கறி விதைகள்

நவாலி, நவ.8

"திவிநெகும" வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வீட்டுத் தோட்டம் செய்யும் மக்களுக்குக் கிராம சேவையாளர்கள் மூலம் மரக்கறி விதைகளும் உரவகையும் வழங்கப்படுகின்றன.

குடும்ப பொருளாதாரத்தையும் போசாக்கையும் மேம்படுத்தும் பத்து இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்கும் தேசிய இயக்கம் இதனை வழங்கியுள்ளது. (வ-100)

# வியளம் கேட்டீர்களா?

## ஆண்டவரே, எங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றும்

எனக்குக் கனகாலமாய் ஒரு சந்தேகம்.நாங்களும் படிச்சு உத்தியோகத்திலை சேர்ந்து பென்சனும் எடுத்திட்டம்.நாங்கள் கன விசயங்களைப் படிச்சிட்டம். ஆனா பரீட்சையிலை கேட்கிற கேள்வியளுக்கும் எங்கடை வாழ்க்கைக்கும் ஏதாவது சம்பந்தம் இருந்துதோ? அந்தக் கேள்வி எங்கடை திறன்களை வளர்க்க, புதிய விசயங்களைத் தேட ஏதாவது வழிகாட்டி யிருக்குதோ எண்டு நானும் கனநாளாய் நினைச்சுப் பாக்கிறன். ஒண்டுமே புலப்படுகுதில்லை.

கன பிள்ளையளும் இந்தக் கேள்வியளைப் பார்த்திட்டுக் குழம்பியடிச்சதுதான் மிச்சம்.நாங்களும் பெரும் புத்தகங்களையெல்லாம் வாசிச்சு, மனப்பாடம் பண்ண வைத்து பரீட்சையை எழுத வைத்தம்.கன பிள்ளையள் வாழ்க்கை வெறுத்துப்போய் படிப்புக்கே முழுக்குப் போட்டது இந்தப் பரீட்சைகளாலைதானே! ஆனா நாங்கள் தேவையில்லாமலோ ஆத்தாமலோதான் இப்படிக் குழம்பிறம் எண்டு நினைச்சன். இப்பதான் தெரியுது எங்கடை குழப்பமும் சரியெண்டு.

அண்மையிலை கண்டியிலை ஒரு பரிசளிப்பு விழாவிலை எங்கடை பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க பேசியிருக்கிறார். அவர் சொல்கிறார் உலகத்திலையே மிகக் கடுமையான பரீட்சை முறைமை எங்கடை நாட்டிலை மட்டுந்தான் இருக்குதாம். ஆபிரிக்க கோத்திர சமூகங்களைத் தவிர உலகிலை எங்கடை போல கடுமையான பரீட்சை முறை வேறை எங்கையும் கிடையாதாம். பரீட்சை எண்டது மாணவர்களின் ஆற்றலை மதிப்பீடு செய்யிறதுக்கான ஒரு பொறிமுறைதான். ஆனால் நாட்டிலை நடைமுறையிலை இருக்கிற பரீட்சை முறையாலை எவருக்கும் நன்மையில்லை எண்டும் அந்தாள் சொல்லியிருக்குது. அதோடை நாட்டிலை இருக்கிற ஒட்டு மொத்தப் பரீட்சை முறையிலையும் மாற்றம் கொண்டு வரவேணும் எண்டும் வலியுறுத்தி இருக்கிறார்.

ஆரம்பத்திலை ஆசிரியர் மையக்கல்வி எண்டிருந்து பிறகு மாணவர் மையக் கல்வி எண்டார்கள். இப்ப தேர்ச்சி தழுவிய மாணவர் மையக் கல்வியாம்! ஆனா இதை யாரும் கண்டு கொள்ளுறதில்லை. பரீட்சையை நோக்கித்தான் எல்லாச் செயற்பாடுகளும் முடுக்கிவிடப்படுகுது. பெரிய பரப்பிலை என்னென்ன கேள்விவரும் எண்டு பிள்ளையள் அங்கலாய்க்க வேண்டியிருக்குது. அங்கலாய்க்கிற சனம் சாத்திரக்காரன்களைத் தேடி அலையிறது போலை பிள்ளையளும் ரியூட்டறிகளையும், வினாவிடைப் புத்தகங்களையும் தேடி அலைஞ்சு அவையளைக் கொளுக்கப் பண்ணித் தாங்களும் சாந்தி அடையுதுகள்.

மேற்கு நாடுகளிலை பிள்ளையளுக்குக் கல்வியைத் திணிக்கிறதில்லை. பள்ளிக்கூடம் விடுமுறைவிட்டால் வீட்டுவேலை குடுக்கிறதில்லை. அவுட்டிங் போய் என்ஜோய் பண்ணீட்டு வாங்கோ எண்டுதான் சொல்லுவினை.வெளிச்சுற்றுலா எண்டது பிள்ளையின்ரை அனுபவப் பரப்பை விரிவாக்கி, உள நலத்தை மேம்படுத்தும் எண்டது வெள்ளைக்காரனுக்குத் தெரியும்.நாங்கள் எப்படி எங்கடை பஞ்சாங்கப் படிப்பை மாத்திறது? லண்டனிலை இருக்கிற என்ரை மோள் சொல்லுறாள் அங்கை படிப்புச் சரியில்லையாம். அங்கையும் அவள்பாவி பிள்ளையளை விட்டு வைக்கேல்லை. ஐம்பது பவுண் ஒரு மணித்தியாலத்துக்குக் குடுத்து வீட்டிலை ரியூசன் சொல்லுவிக்கிறாள். எங்கை போனாலும் எங்கடை மனநிலை மாறாது பாருங்கோ!

இஞ்சை இவ்வளவு கடுமையாகப் பரீட்சையை வைச்சு, உப்புச் சப்பில்லாத கேள்வியளைப் போட்டு கடைசியிலை பட்டம் பெற்றதுகள், எமக்கு அரசாங்கம் வேலை தராட்டால் உண்ணாவிரதம் இருப்பம் என்று எச்சரிக்கை செய்யிற துணிவைத்தானே இது தந்திருக்குது. பரீட்சை ஆணையாளர் நாயகத்தின்ரை இன்னொரு கருத்தும் முக்கியமானது பாருங்கோ. சில பரீட்சை வினாத்தாள்களுக்கு மாணவர்களாலை மட்டுமில்லை அதனைத் தயாரித்த பேராசிரியர்களாலையும் விடையெழுத முடியாது எண்டும் அவர் சொல்லியிருக்கிறார் எப்படியெல்லாம் இடியப்பச் சிக்கல் வினாக்களைப் பிள்ளையளுக்குக் குடுத்துக் குழப்பினம் பாருங்கோ! இப்ப புலமைப் பரிசில் காய்ச்சல் முடிஞ்சு க.பொ.த. சாதாரணதரக் காய்ச்சல் தொடங்கிட்டுது. பரீட்சைத் திணைக்களம் ஒரு பயிற்சிப் பரீட்சையை வைத்துப் பின்னூட்டல் செய்யுது. போதாதற்கு மாகாணமும், வலயங்களும் பயிற்சிப் பரீட்சையளை வைக்கினம். அதை விட லேபலிலை வாழுற கன அமைப்புக்களும், விளம்பரந் தேடுகிற நிறுவனங்களும் சமூகத்துக்கு அவசியமான எவ்வளவோ தேவையளைச் செய்யாமல் விட்டிட்டு இப்படிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்களை நடத்துகினை.கல்வித் திணைக்கள அதிகாரிகளும் கோவில் காளைகள் போலை எடுத்ததுக்கெல்லாம் தலையாட்டிக் கொண்டிருக்கினை.

பிள்ளையள் சுயமாய்ப் படிக்க வழியில்லை. படிச்சதுகளையும் வழிகாட்டல் வகுப்பிலை கும்பல்லை கோவிந்தாவாக மாத்தி மாத்திச் சொல்லி வாந்தியெடுக்கச் செய்து போடுவினை. இதை நான் சொல்லேல்லை. பிள்ளையளும், பெற்றோரும் சொல்லுகினை.யாழ்ப்பாணத்தின்ரை கல்வியை அளவுக்கு மிஞ்சின அமிர்தத்தைக் குடுத்துச் சீர்குலைக்க யாரும் கங்கணம் கட்டி நிக்கினையோ எண்டு சந்தேகப்பட வேண்டிக் கிடக்குது. ஆண்டவரே! எங்கள் பிள்ளையளைக் காப்பாற்றுவீராக!

விழிச்சான் குஞ்சு.

# நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசுடைமையாக்கும் சட்டமூலத்தை நாடாளுமன்றுக்குள் கொண்டு வரக்கூடாது

## ஜே.வி.பி.கடும் எச்சரிக்கை



கொழும்பு,நவ.8

நட்டத்தில் இயங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களை அரசுடமையாக்கல் தொடர்பான அரசின் உத்தேச சட்டமூலத்தை அரசு நாடாளுமன்றத்துக்குள் கொண்டுவரக்கூடாது. மீறி கொண்டுவர முற்பட்டால் கடும் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

-இவ்வாறு நேற்றுமுன்தினம் எச்சரித்தார் ஜே.வி.யின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க.

பத்தரமுல்லையிலுள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வழமைக்கு முரணான வகையிலும் நாடாளுமன்றச் சட்ட ஒழுங்குகளை மீறியும் அரசு உத்தேச சட்டமூலத்தை நடைமுறைப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றது.

இதேபோன்றே 18ஆவது திருத்தத்தையும் தன்னிச்சையாகச் செயற்பட்டு நடைமுறைப்படுத்திக் கொண்டது அரசு. எனவே, அரசு தன்னிச்சையாகச் செயற்படுவதை நிறுத்திவிட்டு உத்தேச சட்டமூலத்தை நீக்கிக்கொள்ள வேண்டும் - என்றார். (ச-சி)



கொழும்பு, காலிமுகத்திடலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை இடம்பெற்றவேளையில்...

# ஓட்டோவுக்கும் கட்டண மானி

கொழும்பு,நவ.8

நாட்டிலுள்ள சகல ஓட்டோக்களுக்கும் கட்டண மானிகளை பொருத்துவது குறித்து போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விலை அதிகரிப்பை தொடர்ந்து ஓட்டோ சாரதிகள் தமது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் கட்டணங்களை அறவிடுவதன் காரணத்தினாலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் கட்டண மானிகளை பொருத்துவது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

ஓட்டோவில் பயணத்தை ஆரம்பிக்கும் போதே கட்டணத்தை பேசிக்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சந்தன மரத்துண்டுகளை வைத்திருந்தோர் கைது

கண்டி,நவ.8

அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமான முறையில் 136 கிலோ கிராம் வெண் சந்தன மரத்துண்டுகளை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

கண்டி, தலாத்துஓயா பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்ட இந்தச் சந்தேகநபரை மேலதிக விசாரணைக்காக தலாத்துஓயா பொலிஸ் நிலையத்திற்கு ஒப்படைக்கவுள்ளதாக அம்பகொட்டே விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

# தொழில் சங்க ஒன்றியம் போராட்டத்தில் குதிக்கிறது

கொழும்பு, நவ 8

தொழில் சங்க ஒன்றியம் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் தொழில் சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இந்த தகவலை, ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் கே.எம். சிந்தகபண்டார தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தை தபால் மா அதிபரிடம் இருந்து காப்பாற்றும் நோக்கிலேயே இந்த தொழில் சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனிடையே, தபால் மா அதிபர் மீது, முன்வைக்கப்பட்டுள்ள பல குற்றச்சாட்டுகள் காரணமாக அமைச்சரவை அனுமதியுடன் அவற்றை விசாரணை செய்வதற்கு மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில், தபால் சேவை அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர்.

இந்தநிலையில், தபால் மா அதிபர் மீது முன்வைக்கப்பட்டுள்ள 26 குற்றச்சாட்டுகளில் 21 குற்றச்சாட்டுகள் நிரூபணமாகியுள்ளன.

இதேவேளை, இந்தக் குழுவின் அறிக்கை தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

# செல்வந்தர்களைவிட வறியவர்களே உடல் ஆரோக்கியத்தில் முன்னிலை

## சர்வதேச ஆய்வு கூறுகிறது

உடல் பருமன் மற்றும் இருதய நோய் என்பன அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் முதலாவது உலக சுகாதாரப் பிரச்சினைகளாக வேரூன்றி வருகின்றன.

ஆனால் இந்த நோய்கள் பெரும்பாலும் பணக்காரர்களையும் மத்திய தரத்தினரையுமே தாக்குகின்றன.

வறிய மக்கள் மந்த போசணையினால் மெலிந்து போன தேகக் கட்டுடன் இருப்பதனால் இத்தகைய நோய்கள் அவர்களைத் தாக்குவது குறைவு.

இவ்வாறு கூறுகின்றது ஓர் ஆராய்ச்சி.

ஆசியா,ஆபிரிக்கா, தென்னாபிரிக்கா போன்ற வருமானம் குறைந்த 37 நாடுகளைச் சேர்ந்த சுமார் ஐந்து லட்சம் பெண்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஆராய்ச்சியின் முடிவில் செல்வச் செழிப்பு உடையவர்களை விட ஏழைகள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது என அமெரிக்க சஞ்சிகையான 'கிளினிக்கல் நியூற்றிஷன்' செய்தி வெளியிட்டுள்ளது.

ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் புவியியல் மற்றும் பொது மக்கள் ஆரோக்கியத்துறையில் சிரேஷ்ட ஆராய்ச்சியாளரான பேராசிரியர் எஸ்.வீ. சுப்பிரமணியம் கருத்துத் தெரிவிக்கையில்:

இந்த நாடுகளில் மக்கள் குண்டாகி வருகிறார்கள். ஆனால் குண்டாவது யார்? வசதி வாய்ப்பு உள்ளவர்கள். ஏழைகளின் உடல் பருமனாவதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவு.

உலக சனத்தொகையில் பெரும்பாலானோர் குறைவான போஷாக்கையே பெறுகின்றார்கள் - என்றார். (ச-22)

# தறப்பாளின்கீழ் தஞ்சமடையும் அக்கராயன் அரச ஊழியர்கள்

அக்கராயன், நவ.8

கிளிநொச்சி அக்கராயன் பகுதி அரச ஊழியர்களுக்கு மழை காலத்துக்கு முன்னர் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்ட தற்காலிக வீடுகள் மழை பெய்துவரும் நிலையிலும் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

அக்கராயன் பகுதியில் உள்ள அரச ஊழியர்களுக்குத் தற்காலிக வீடுகள் வழங்கவென விவரங்கள் திரட்டப்பட்ட நிலையில் மழை பொழிந்து கொண்டிருக்கும் இந்தவேளையில் அரச ஊழியர்கள் தறப்பாள் கொட்டகைகளில் அவலத்துடன் வாழும் அவலம் தொடர்கின்றது. தமக்குத் தற்காலிக வீடுகள் கிடைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அரச ஊழியர்கள் உரிய அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-410)

பெருமைக்குரியவர்கள்...



சாதனை தொடரட்டும்: கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க.பாடசாலையில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான ஸ்ரான்லி அமல்ராஜ் சயந்தன், கேதீஸ்வரன் சரண்யா ஆகியோர் காணப்படுகின்றனர். (க- 410)

## பாடசாலை பஸ் சேவை இல்லாததால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு

மன்னார், நவ.8

மன்னார் அல்- அஸ்கர் மகா வித்தியாலயப் பாடசாலை மாணவர்களுக்கென பஸ் சேவையொன்றை நடத்துமாறு கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் பாடசாலை நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் இதுவரை அது நிறைவேற்றித் தரப்படவில்லையெனப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலை ஒரு முஸ்லிம் பாடசாலையாகக் காணப்படுகின்றது. வெள்ளிக்கிழமைகளில் ஜும்மாத் தொழுகைக்காக முற்பகல் 11.30 மணியுடன் பாடசாலை மூடப்படுகின்றது. இதனை ஈடுசெய்யும் முகமாக ஏனைய தினங்களில் பிற்பகல் 2.10 மணி வரை பாடசாலையை நடத்த வேண்டியுள்ளது. ஆனால் ஏனைய பாடசாலைகள் 1.30 மணியளவில் மூடப்படுகின்றன. பஸ்சேவையும் 1.45 மணிக்கு ஆரம்பிக்கப் படுகின்றது. இதனால் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த தாராபுரம், எருக்கலம்பிட்டி, புதுக்குடியிருப்பு, கரிசல், கட்டாலைப் பத்திரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும்1.30 மணிக்கே பாடசாலையை விட்டுச் செல்கின்றனர். இதனால் இறுதிப் பாடத்தை நடத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

எனவே ஏனைய மாணவர்களுக்கென பஸ் சேவையை 10 நிமிடங்கள் தாமதித்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபட முடியும். அத்துடன் இவர்களுக்கெனத் தனியானதொரு பஸ் சேவையை நடத்துவதன் மூலம் இவர்கள் பயன் பெறுவார்கள். (க-601)

## ஒளி விழா நிகழ்வு

அக்கராயன், நவ.8

யுத்த சூழலில் இருந்து விடுபட்டு ஒளி விழாவைக் கொண்டாடும் மாணவர்களுக்கு எல்லாச் செல்வங்களும் கிடைக்க வேண்டும் என அக்கராயன் இலங்கை அமெரிக்கன் மிஷன் திருச்சபையின் அருட்திரு எஸ். ஜெயானந்தன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒளி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யேசு பிறப்பு உலகத்தின் மக்களுக்குப் பல செய்திகளைத் தந்திருக்கிறது. இன்று கொண்டாடும் ஒளிவிழா மாணவர்களுக்கு மத நம் பிக்கை உட்படப் பல நற் பழக்க வழக்கங்களையும் கற்றுத் தரும் என அவர் மேலும் தெரிவித்தார்.(க- 410)

## சிவில் பாதுகாப்புக் கூட்டம்

வடபகுதி மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் வவுனியா வில் கடந்த 5 ஆம் திகதி சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன் போது வடமாகாணத்தில் மாவட்டங்கள் மற்றும் கிராம மட்டங்களில் நடைபெறும் போதைப் பொருள்களின் பாவனை மற் றும் ஏனைய சமூக விரோத செயல்களான சிறுவர் துஷ்பிர யோகம், பாலியல் துஷ்பிரயோகம் போன்றவற்றை நிறுத் துதல் தொடர்பாக ஆராயப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் அறிவுறுத்தலின் பிரகாரம் ஒவ்வொரு கிராமத்திலும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் ஆளுநரின் செயலாளர், கிராம சேவகர்கள், பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க- 421)

# மோசமான நிலையில் முல்லைத்தீவு பொதுச் சந்தை

1990 களில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் முல்லைத்தீவு நகரம் முடங்கிக் கிடந்த நாள் தொடக்கம் இன்று வரை அபிவிருத்தி என்பதை அறியாமல் உள்ளது. ஒரு காலத்தில் தமிழரும், முஸ்லிம், சிங்கள மக்களும் ஒற்றுமையாகக் குடியிருந்து, தொழில் செய்து சீவித்த முல்லைத்தீவு, யுத்தத்துக்குள் சிக்கிச் சீரழிந்து மீண்டும் சிறிது சிறிதாகப் புத்துயிர் பெற்று வருகிறது. அதுவும் மந்த கதியில்தான்.

அவலங்களைச் சுமந்து கொண்டு வாழ்ந்து வரும் இந்த மாவட்ட மக்களுக்கு இதுவரை எந்தவிதமான அடிப்படைத் தேவைகளும் பூர்த்தியாகவில்லை. செல்வச் செழிப்போடு வளமான மக்களாய் வாழ்ந்த இந்த மக்களின் வாழ்வாதாரம் என்பது வணிகத்தைத்தான் அதிகமாக ஆதாரமாய்க் கொண்டதாகும். கடலுணவுகள், தானியங்கள், வேறு உற்பத்திப் பொருள்கள் எனத் தாம் உற்பத்தி செய்கின்ற பொருள்களைத் தாமே வாணிபம் செய்து தன்னிறைவானதொரு பொருளாதாரத்தை இம் மாவட்டமும் மக்கள் கொண்டிருந்தார்கள். ஆனால் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

முல்லைத்தீவின் தெற்கே கொக்குத்தொடுவாய் அடங்கலாக உள்ள அத்தனை பிரதேசங்களிலும் வாழும் மக்கள் இன்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக முல்லைத்தீவு நகரத்தையே நாடி வருகின்றனர். ஏனென்றால் அரச திணைக்களங்களும் சரி , ஏனைய தனியார் நிறுவனங்களும் சரி; அத்தனையும் இன்று முல்லைப் பட்டணத்தைத்தான் ஆக்கிரமித்திருக்கின்றன. திருகோணமலையிலிருந்தும் யாழ்ப்பாணம், கொழும்பு, புத்தளம், கண்டி, வவுனியா எனப் பிற மாவட்டங்களிலிருந்தும் இப்போது முல்லைத்தீவுக்குப் பயணிகள் பஸ்கள் வந்து போகின்றன. உல்லாசப் பிரயாணிகள், வியாபாரிகள், பெரிய வர்த்தக நிறுவனங்கள் என முல்லைத்தீவு இப்போது பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. இது நவீனத்துவம் ஏதுமற்ற நகரமாக இருந்தாலும் ஓய்வில்லாமல் மக்கள் கூட்டம் நிறைந்தே கிடக்கிறது.

மறுபக்கம் பார்க்கின்றபோது: ''எந்தளவுக்கு முல்லைத்தீவு ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் பின்னடைந்து நிற்கின்றது'' என்பது புரியவரும்.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு முதுகெலும்பாகப் பிரதானமாய் இருக்கின்ற பொருளாதாரமானது பெரும்பாலும் சந்தைகளை மையப்படுத்தித் தான் அமைந்துள்ளது.

அந்த வகையில் முல்லைத் தீவை நாம் பார்க்கின்றபோது ஒரு குடும்பம் குடியிருக்கக் கூடிய வீட்டை ஒத்த இடத்தினுள்சந்தை இயங்கிக் கொண்டிருக்கின்றது இந்த நகரின் பொதுச் சந்தை. குறுகிய இடத்தினுள் வணிகம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பரபரப்புக்கும் வியாபாரத்துக்கும் பஞ்சமேயில்லை.

ஒரு பக்கம் மீன் சந்தையும், மறு பக்கம் பழக்கடைகளும் மறுபுறத்தில் வெற்றிலைக் கடைகளும், அதற்கெதிரே மரக் கறிக் கடையுமாய் சிறிய நிலப் பரப்புகளைத் தமது வியாபாரத் தளமாகக் கொண்டு வேகமாக; தமது வாழ்வாதாரத் தொழிலைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் மக்கள். சிறிய பெட்டிக் கடையாய் சிவப்பு நிறப்பூச்சு அடிக்கப்பட்ட கடைதான் இறைச்சிகள் விற்கப்படும் இடமாய்த் தெரிந்தது.

சுத்திகரிக்கப்படாத பொதுக் கிணறு, சரியாகப் பேணப் படாத மலசல கூடங்கள், சுகாதாரமேயில்லாத சுற்றுச் சூழல், கால் நடைகளின் ஆக்கிரமிப்பு என அடிப்படைச் சுகாதார வசதிகளோ அல்லது ஒரு பொதுச் சந்தைக்குரிய வசதிகளோ இன்றி ஏதோ கவனிக்கப்படாமல் கிடக்கும் பிரதேசமாய் இந்த முல்லைத் தீவு பொதுச்சந்தை இயங்கிக் கொண்டிருக்கின்றது. இத்தனை காலமாய்ப் போரைக் காரணம் காட்டி வன்னிப் பிரதேசம் அபிவிருத்தியை அடைய முடியாமல் தட்டிக்கழிக்கப்பட்டது. இன்று போர் முடிவுற்று இரண்டு வருடங்கள் முடியப் போகும் தறுவாயில் கூட, எதுவுமே நடப்பதாய் தெரியவில்லை.

''தம்பி! நாங்களும் ''எல்லோரிடமும் கேட்டுப்பார்த்து விட்டோம். ஆனால், இதுவரை யாரும் முன்வந்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வைத் தரவில்லை. நாங்கள் சாதாரணமானவங்க. அதனால எங்கட வயித்துப் பாட்டுக்கு அன்றாடம் உழைச்சால்தான் குடும்பம் ஓடும். இனி என்ன தம்பி நாங்க செய்யிறது?''

இப்படித் தனது ஆதங்கத்தைத் தெரிவித்தார் இந்தச் சந்தையில் வெற்றிலை வியாபாரம் செய்யும் தவமணி அம்மா. யாரிடமாவது இது தொடர்பாக உங்கள் பிரச்சினைகளை முன்வைத்தீர்களா என்று கேட்ட போது;

''ஏன் முன்வைக்கவில்லை? பிரதேச சபைப் பிரதிநிதிகளிடமும் ஏனைய தொண்டு நிறுவனங்களிடமும் எமக்குள்ள பிரச்சினைகளைதெரியப்படுத்தினோம்.

இவற்றுக்குத் தீர்வு வெகு விரைவில் கொண்டு வரப்படும் என்றார்களே தவிர, ஆனது எதுவுமேயில்லை'' இப்படித் தெரிவித்தார் மீன் வியாபாரம் செய்யும் வேலும் மயிலும் என்ற வயதானவர்.

இவர்களால் முன் வைக்கப்படும் இந்தக் கருத்துக்கள் உண்மையில் சரியானவைதானா என்பதற்காக பொதுச் சந்தையில் வரிப்பணம் பெறும் ஊழியர் ஒருவரிடம் கேட்ட போது; ''இவர்கள் சொல்லுவது உண்மைதான். அரச அதிகாரிகள் மற்றும் வேறு தொண்டு நிறுவனங்கள், பிரதேச சபையைச் சேர்ந்தவர்கள் என ஏராளமானவர்கள் வந்துபார்த்தார்கள். இன்னும் ஒரு வருடத்தினுள் புனரமைத்துத் தரப்படும் என்றார்கள். ஆனால், இன்னும் விடிவு வரவில்லை'' என்றார்.

இவர்களின் கேள்விகளை உதாரணப்படுத்தியும் இந்த பொதுச் சந்தை அபிவிருத்தியை முக்கியப்படுத்தியும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் பேசினோம். அவர் இவற்றுக்கு எதிர்மாறானதொரு கருத்தை வெளியிட்டார்.

இப்படியொரு தேவையும் பிரச்சினையும் இருக்கிறது என்பதே இப்பொழுது நீங்கள் சொல்லித் தான் எனக்குத் தெரிகிறது. அந்த வகையில் இது தொடர்பாக நான் பதவியேற்றதன் பிற்பாடு பொதுமக்களோ அல்லது பிரதேச சபையைச் சேர்ந்தவர்களோ என் கவனத்துக்குக் கொண்டு வரவில்லை. அப்படிக் கொண்டு வந்திருந்தால், நான் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றார். இப்போது ஒன்றும் கெட்டுவிடவில்லை. இந்தப் பிரச்சினை தொடர்பாக உள்ளூராட்சிச் சபையினரோ அல்லது பொது மக்களோ எனக்கு தெரியப்படுத்தினால், அடுத்த நிதியாண்டில் நிச்சயமாய் இதற்கு முடிவு நான் கொண்டு வருவேன்'' என்றார்.

**இராமசாமி ரமேஷ்**

முல்லைத்தீவு பொதுச் சந்தை விவகாரத்தில் பொது மக்கள் வியாபாரிகளின் கருத்து ஒரு பாதையிலும் அரச அதிபரின் கருத்து வேறொரு பாதையிலும் பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது. எது எப்படி இருந்தாலும் மக்கள் பிரச்சினைகளை உரியவர்களுக்குத் தெரியப்படுத்துகின்ற போதுதான் தீர்வு கிடைக்கும். எனவே, எமது பிரச்சினைகளை நாம் தான் உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும். எனவே, அரச அதிபரின் கவனத்துக்கு இந்த பொதுச் சந்தைக்கான நிரந்தர கட்டடத் தொகுதிப் பிரச்சினை கொண்டு செல்லப்படும் போது அதற்கு தீர்வைப் பெற்றுத்தர அதிகாரிகள் தயாராக இருப்பது புலனாகிறது. இதில் அக்கறை கொண்டு பொதுச் சந்தையின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட வேண்டியது முல்லைத் தீவு வாழ் ஒவ்வொரு குடிமகனினதும் கடமையாகும்.

(முற்றும்)

# மருத்துவமனை இயங்காததால் அக்கராயன் மக்கள் அவலத்தில்

அக்கராயன், நவ.8

மருத்துவர்கள் பணியில் இல்லாததால் அக்கராயன் பிரதேச மருத்துவமனை கடந்த 22 ஆம் திகதியிலிருந்து இயங்க முடியாத நிலையில் முடங்கியுள்ளது.

அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், ஆரோக்கியபுரம், மணியங்குளம், கோணாவில், யூனியன்குளம், முக்கொம்பன், அமைதிபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்த நிலையில் இந்த மருத்துவமனையையே நம்பியுள்ளன.

கடந்த இரு வாரங்களாக இந்த மருத்துவமனையில் மருத்துவர்கள் பணியில் இல்லாததால் இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் வைத்திய வசதிகளைப் பெறுவதில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் பல்வேறு நோய்களும் மக்களைப் பீடிக்கும் ஏது நிலையும் காணப்படுகின்றது. அத்துடன் போக்குவரத்து வசதிகள் சீரில்லாததால் வேறு இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்வதில் இடையூறுகள் காணப்படுகின்றன.

தற்போது இங்குள்ள மக்கள் 20 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள கிளிநொச்சிப் பொது மருத்துவமனைக்கே செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர்.

எனவே தமது துன்பரமான நிலையைக் கருத்தில் கொண்டு மருத்துவர் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கிளிநொச்சிப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க- 410)

நல்ல முன் மாதிரி.....



ஆரோக்கியமான கல்வி: முல்லைத்தீவு ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயத்திலிருந்து தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவனான க. வசீகரனுக்கு துணுக்காய் கல்விப் பணிப்பாளர் த. மேகநாதன் சைக்கிள் வழங்கிக் கௌரவிக்கின்றார். (410)

# காணி தொடர்பான விழிப்புணர்வில் மாற்றுக் கொள்ளைகளுக்கான மையம்

கிளிநொச்சி, நவ.8

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் காணிகள் உரிமைகள் மற்றும் சட்டங்கள் தொடர்பாக கருத்தரங்கு கடந்த 5 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

போருக்குப் பின்னர் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்குவாரங்களில் காணி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன.

இந்த நிலையில் அரசால் முன்வைக்கப்பட்டுள்ள பிம்சவிய திட்டம்மக்களிடையே காணி தொடர்பான ஒரு தெளிவற்ற சூழலை உருவாக்கியிருப்பதை அவதானிக்க முடிந்துள்ளதாக அவதானிகள் கருத்துத்தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பாகத் தெளிவான கருத்துக்களை மக்கள் அடையும் பொருட்டு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் போரினால் பாதிக்கப் பட்ட வடக்கு கிழக்கு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

இதனொரு அங்கமாக கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தலைமையில் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் மாற்றுக்கொள்கைகளுக்கான வையத்தினால் கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கை ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி. சாந்தா அபி மன்ன சிங்கம் நெறிப்பிடுத்தினார்.

வளவாளர்களாக மாற்றுக் கொள்கை மையத்தைச் சேர்ந்த சட்டத்தரணி பவானி பொன்சேகா மற்றும் மிராக் ரகீம் யாழ்.பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் குருபரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கிளிநொச்சி மாவட்டத்தில் காணி தொடர்பான மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான விரிவான உரையொன்றை ஆற்றியிருந்தார்.

இவர் தனியார் அரச காணிகளில் இராணுவம் சட்ட விரோதமாக உரிமை கோருவதை சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தக் கருத்தரங்கில் முல்லை மாவட்டத்தில் இருந்து மாந்தை கிழக்குப் பிரதேசசபை உப தவிசாளர் செந்தூரன் மற்றும் கரைதுறைப்பற்று கோட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் அன்ரனி ஜெகநாதன் உட்பட மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டதுடன் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த பிரதேசசபை உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள் எனப்பெருமளவானோர் கலந்துகொண்டனர். (க-426)

# கிளிநொச்சியில் கொள்ளைச் சம்பவம்; இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம்

கிளிநொச்சி, நவ.8

கிளிநொச்சியில் இரவு நேரக் கொள்ளையரின் அட்டகாசம் தொடர்வதால் மக்கள் அச்சத்தில் ஆழ்ந் துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கிளிநொச்சி புதுமுறிப்பு ஆத்தியடி என்னும் இடத்திலுள்ள வீடொன்றினுள் புகுந்த கொள்ளையர்கள் பணம், நகை, கைடயக்கத் தொலைபேசிகள்ஆகியவற்றைக் கொள்ளையடித்துள்ளனர்.

மூன்று மோட்டார் சைக்கிள்களில் முகங்களை மூடியவாறு கறுப்பு உடையுடன் வந்தவர்களே இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டனர்.

இவர்கள் தம்முடன் கொண்டு வந்த கைத்துப்பாக்கி, கூரிய கத்தி என்பவற்றை வீட்டினுள்ளவர்களின் தலை, கழுத்து ஆகிய இடங்களில் வைத்து அச்சுறுத்திய பின்னரே கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் பொருள் களை அடித்து உடைத்து நாசமாக்கியுள்ளனர்.

அயலவர்கள் தெரிவித்த தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த இராணுவத்தினர் கொள்ளையரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போதிலும் கொள்ளையர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்களால் அந்தப் பகுதி முழுவதும் அதிர்ந்ததுடன் மக்கள் பெரும் பீதியும் அடைந்தனர்.

மாங்குடி ஆறுமுகம் என்பவரின் வீட்டிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. சுமார் 49 ஆயிரம் ரூபா பணம், 10 பவுண் பெறுமதியான நகைகள், கையடக்கத் தொலைபேசிகள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

இது தொடர்பாகப் பொலிஸில் முறைப்பாடு தெரிவித்த தன் பேரில் விசாரணைகள் நடை பெற்று வருகின்றன. (க- 426)

# அவல நிலையில் மாணவர்கள்

முல்லைத்தீவு, நவ.8

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலைப் பேருந்து சேவை இயக்கப்படாததால் தூர இடங்களிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த மாணவர்கள் சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் காலையில் உரிய நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

பாடசாலை முடிந்து வீடு செல்லும் போது தாமதமாகவே வீடு செல்கின்றனர்.

குறிப்பாக மன்னா கண்டல், கெருடமடு, பேராறு பகுதிகளிலிருந்து கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் பாடசாலைகளுக்கு வந்து செல்லும் மாணவர்களே அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (க-500)

# சிறுமியின் கண் சிகிச்சைக்கு நிதியுதவி வழங்கக் கோரிக்கை

வவுனியா, நவ.8

வவுனியா கூமாங்குளம் காளிகோயில் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட 3 வயதுக் குழந்தையின் வைத்தியச் செலவுக்காக உதவிகள் கோரப்பட்டுள்ளன.



சிவபாலன் தேவதர்சினி என்னும் பெயருடைய இந்தக் குழந்தையின் கண்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் ஏற்கனவே ஒரு கண் அகற்றப்பட்டுள்ளது. அடுத்த கண்ணுக்கும் இந்த நோய் பரவியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தற்போது இந்தச் சிறுமி கொழும்பு கண் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தொடர்ந்து கொழும்பு சென்று சிகிச்சையளிப்பதற்கான பொருளாதார வசதி இந்தக் குழந்தையின் குடும்பத்தவரிடம் இல்லாததால் ஏனையோரின் நிதியுதவியை நாடியுள்ளனர்.

இவர்களது குடும்ப நிலைமை தொடர்பாக கூமாங்குளம் கிராம அலுவலரும், வவுனியாப் பிரதேச செயலரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தக் குழந்தையின் வைத்தியச்செலவுகளுக்குநிதியுதவியை வழங்குவதற்கு விரும்புபவர்கள் வவுனியா வர்த்தக வங்கியிலுள்ள 8610012872 என்னும் கணக்கு இலக்கத்துக்குத் தமது உதவிகளை அனுப்பி வைக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க- 421)

# வவுனியாவில் 213 ஆவது படையணியால் மக்களுக்கு உதவும் நிகழ்வுகள்

வவுனியா 213 ஆவது படையணியின் கீழ் வசிக்கும் மக்கள் மற்றும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளைகளின் நன்மை கருதி பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் மற்றும் இலவச மருத்துவ சேவை என்பன கடந்த 5 ஆம் திகதி வவுனியா மெனிக்பாம் அருவித்தோட்டம் சிவநாதர் வித்தியாலயததில் நடத்தப்பட்டன.

இங்கு 525 பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சீருடைகள் 300 பிள்ளைகளுக்கு அப்பியாசப் பாடக்கொப்பிகள், வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 500 பேருக்குப் படுக்கை விரிப்புக்கள், பாய்கள், சேலை, சாரம் என்பன வழங்கப்பட்டன.

சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான இந்தப் பொருள்களை கொழும்பிலுள்ள லயன்ஸ் 306-பி2 அமைப்பு அன்பளிப்பாக வழங்கியது.

இந்தச் சேவையைச் சிறப்பாக மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்புப் பணிகள் 213 ஆவது படையணியின் தளபதி கேணல் கே. பேமதிலக்கவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் மற்றும் லயனஸ்கிளப் தலைவர் லயன் பெனடிக்ற் சில்வா உட்பட ஏனைய அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர். (க)

# இலங்கையில் வரவேற்புப் பெற்றுள்ள Eurostar தயாரிப்புகள்



Eurostar தயாரிப்புகள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட குறுகிய காலத்திலேயே மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

UAE லிருந்து இறக்குமதி செய்யப்படும் Eurostar தயாரிப்புக்கள் இலங்கையில் UKAAYE (Pvt) Ltd நிறுவனத்தினால் நாடு முழுதும் விநியோகிக்கப்படுகின்றன. ஏற்கெனவே இலங்கையில் Eurostar Satellite மற்றும் திருமண அழைப்பிதழ்கள் வியாபாரத்தின் மூலம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள UKAAYE நிறுவனத்தின் மூலம் Eurostar தயாரிப்புகள் விநியோகிக்கப்படுவதால் மக்களின் நம்பிக்கையை இலகுவாகப் பெற்றுள்ளன.

இலங்கை மாத்திரம் அல்லாமல் 25க்கும் மேற்பட்ட நாடுகளில் Eurostar இலத்திரனியல் பொருள்கள் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

Eurostar இலத்திரனியல் மற்றும் சமையலறை சாதனங்களைப் பொறுத்தவரை இலங்கை மக்கள் மத்தியில் குறுகிய காலத்துக்குள்ளேயே நல்ல வரவேற்பைப் பெறுவதற்குக் காரணம் அந்தப் பொருட்களில் காணப்படும் தரமாகும். அனைத்துப் பொருட்களும் ஏற்றுமதித் தரத்திலேயே காணப்படுகின்றன.

Eurostar தயாரிப்புகள், இலத்திரனியல் தயாரிப்புகள், சமையலறை உபகரணங்கள் என காணப்படுகின்றன. இலத்திரனியல் தயாரிப்புகளில் Eurostar LCD TV மக்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. USB, Data Cable என பல மேலதிக வசதிகளைக் கொண்ட Eurostar LCD TVகள் குறைந்த விலையில் மக்களுக்கு நிறைவான பயனை வழங்குகின்றன. இப்போது வீடுகளில் சாதாரண TV யை மாற்றி LCD TV வாங்க நினைப்பவர்களுக்கு Eurostar LCD TV கள் நல்ல தெரிவாக அமையும். காரணம் சாதாரண விலையில் சகல வசதிகளுடன் High Quality Eurostar LCD TV யை வாங்கலாம்.

Eurostar இன் ஏனைய தயாரிப்புகளாக LED TVs, LCD TVs, plasma TVs, pure flat and super flat TVs, washing machines (fully automatic front and top loading and semi automatic), air conditioners (split and window), microwave ovens, vacuum cleaners, DVD players, home theatre systems and room heaters என்பன காணப்படுகின்றன.

மக்களுக்கு நிறைவான பயன் தரக் கூடிய பொருட்களை விநியோகிப்பதை தமது நோக்கம் எனவும் Eurostar தயாரிப்புகள் அதற்கு பொருத்தமாக அமைவதாகவும் Eurostar தயாரிப்புகளின் ஏக விநியோகஸ்தர்களான UKAAYE நிறுவனத்தினர் குறிப்பிடுகின்றனர்.

அது போல 'சகலருக்கும் LCD TV' எனும் தொனிப் பொருளில் UKAAYE நிறுவனம் யாழ்ப்பாணம் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் சகாய விலையில் Eurostar LCD TVகளை விற்பனை செய்கின்றது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகையினூடாக கடந்த உலகக் கிண்ணப் போட்டியை மையமாக வைத்து நடத்தப்பட்ட போட்டியில் ஒரு 32' LCD TV ஒன்றையும் UKAAYE (Pvt) Ltd நிறுவனத்தினர் பரிசாக வழங்கியிருந்தனர்.

எதிர்காலத்திலும் இவ்வாறான போட்டிகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகள் மூலம் உங்கள் வீடுகளுக்கு Eurostar LCD TVகளை வழங்க UKAAYE நிறுவனம் ஆலோசித்துள்ளது. அத்துடன் LCD TVக்கு மாறும் கனவில் இருக்கும் மக்களுக்கு UKAAYE (Pvt) Ltd நிறுவனத்தினர் Eurostar LCD TVகளை அவர்களது வீடுகளுக்கு அருகிலுள்ள இலத்திரனியல் கடைகளினூடாகவே விற்பனை செய்ய ஏற்பாடு செய்துள்ளது.

(த)

## கார்ல்டன் மாணவருக்கு பொன்டேரா நிறுவனம் போஷாக்கு

Fonterra Brands Lanka நிறுவனம் அண்மையில் முதற் பெண்மணியான ஷிரந்தி ராஜபக்ஷ அம்மையாரின் அனுசரணையுடன் மாளிகாவத்தையிலுள்ள கார்ல்டன் முன்பள்ளி மாணவர்களுக்குப் பாலை வழங்கியுள்ளது.

முதற்பெண்மணியால் நாட்டில் நிறுவப்பட்டு 1,600இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கல்விபுகட்டுகின்ற எட்டு முன்பள்ளிகளுள் ஒன்றாக மாளிகாவத்தையிலுள்ள கார்ல்டன் முன்பள்ளி பணியாற்றிவருகின்றது. இளம் தலை முறையினர் மத்தியில் பால் அருந்தும் பழக்கத்தை மனதில் பதியவைக்கும் முயற்சியை Fonterra Brands Lanka நிறுவனம் முன்னெடுத்து வருவதுடன், இத்தகைய பாடசாலை மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டங்களின் வாயிலாக ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு இலவச அங்கர் பாலை வழங்கி வருகின்றது.

# கிராமப்புற மற்றும் நகரப்புற இல்லங்களின் தூய்மைக்கும் சுகாதாரத்துக்கும் Magic Clean

இல்லங்களின் தூய்மைக்கும் சுகாதாரத்துக்கும் பயன்படுத்தப்படும் Harpic மற்றும் Lysol போன்ற தூய்மையாக்கிகளை சந்தைப்படுத்தும் முன்னணி நிறுவனமான Reckitt Benckiser தன்னுடைய சமூகப்பொறுப்புணர்வுத் திட்டத்தின் அடுத்தகட்ட முயற்சியாக Magic Clean பிரசார முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. இதன்படி தம்முடைய இல்லங்களின் மேற்பரப்புகளையும் மலசல கூடங்களையும் தூய்மையாக வைத்திருப்பதன் முக்கியத்துவம் பற்றி அறிவுறுத்துவதற்கும் அது தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டம் கடந்த சில வருடங்களாக நடைமுறையில் இருந்தாலும் கடந்த மூன்று மாதங்களாக புது வேகத்துடன் இத்தியில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. பல பிரதேசங்களிலும் ஒரே நேரத்தில் பிரசாரங்களை மேற்கொள்ளக்கூடிய வகையில் பல அணிகள் களத்தில் பணியாற்றுகின்றன. சுத்தமாகத் தெரியும் எந்த மேற்பரப்பும் கிருமித்தொற்று இல்லாது இருக்கும் என்ற அவசியம் இல்லை என்ற செய்தி இங்கு முக்கியமாக குறிப்பிடப்பட்டது. ஆகவே வீட்டுக்கு வீடு விஜயம் செய்யும் குழுவினர் ஒரு இல்லம் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் இருப்பதற்கு சிறந்த தூய்மையாக்கிகளே உதவ முடியும் என்பதை வலியுறுத்துகின்றனர்.

அண்மையில் இடம்பெற்ற ஊடக மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய Reckitt Benckiser இலங்கைக்கான முகாமைத்துவ பணிப்பாளரான ராகுல் முர்கை ''பொதுவாக பெரும்பாலான மக்கள் தமது இல்லத்தைக் கிருமித் தொற்றில்லாமல் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் அசுத்தமான மேற்பரப்புகள் மூலமாக நோயைப் பரப்பும் கிருமிகள் பரவும் என்ற விழிப்புணர்வும் அறிதாகக் கொண்டவர்களாக உள்ளனர் என்று அநேக நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

ஆகவே குடும்ப ஆரோக்கியத்திற்கு சுகாதாரமான பழக்க வழக்கங்களை அறிந்து வைத்திருப்பது முக்கியம் என்பதை மக்களுக்கு அறிவுறுத்துவது முக்கியம்'' எனத் தெரி வித்தார்.

அவர் மேலும் தொடர் கையில், எம்முடைய Magic Clean பிரசாரம் ஊடாக மக்களிடம் இச்செய்தியை எடுத்துச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனும் இலக்கைக் கொண்டுள்ளோம். எதிர்காலத்தில் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை பரவலாக்குவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்'' - என்றார்.

Reckitt Benckiser (Lanka) Limited, இலங்கையில் வளர்ந்து வரும் பாவனையாளர் நிறுவனமாகும். Harpic, Lysol,Dettol, Mortein, Veet, Airwick, Colin, Disprin, Brasso, Cardinal, Mansion, Colmans, Robin உள்ளிட்ட பல உற்பத்திகளை இலங்கையில் சந்தைப்படுத்துகின்றது.

(த)

## டெல்மேஜ் மெடிக்கலுடன் இணையும் சிங்கப்பூரின் சுகாதார சேவைக் குழுமம்

சிங்கப்பூரின் மிகப் பெரிய சுகாதார சேவை வழங்குநரும், முன்னணி சர்வதேசக் குழுமமான சிங்ஹெல்த், 150 வருடங்களுக்கும் மேல் பழைமை வாய்ந்த டேல்மேஜ் போர்சித்தின் அங்கமான டெல்மேஜ் மெடிக்கல் பிறைவேட் லிமிட்டெட்டுடன் இணைந்துள்ளது. சிங் ஹெல்த், மூன்றாம் நிலை மருத்துவமனைகள் இரண்டினையும், விஷேட நிலையங்கள் ஐந்தினையும் கொண்டிருக்கிறது. இவ்விணைவின் மூலம், சிங் ஹெல்த்தின் உள்ளூர்ப் பிரதிநிதியாக டெல்மெஜ் மெடிக்கல் செயற்படும்.

சிங்கப்பூர் பொது வைத்தியசாலை மற்றும் கேகே பெண்கள் மற்றும் சிறுவர் வைத்தியசாலை என்பனவே சிங் ஹெல்த்திலுள்ள இரண்டு, மூன்றாம் நிலை வைத்தியசாலைகளாகும். சிங்கப்பூர் தேசிய புற்றுநோய்ச்சிகிச்சை நிலையம், சிங்கப்பூர் தேசிய இருதய சிகிச்சை நிலையம், தேசிய நரம்பியல் விஞ்ஞான நிலையம், சிங்கப்பூர் தேசிய கண்சிகிச்சை நிலையம், தேசிய பற்சிகிச்சை நிலையம் என்பனவே விஷேட நிலையங்களாகும்.

சிங் ஹெல்த் நிலையங்களில் உலகின் அதி நவீன மருத்துவத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. உலகிலுள்ள சிறந்த மருத்துவமனைகளுடன் போட்டி போடக்கூடிய வகையில் பரந்துபட்ட மருத்துவ வசதிகள் இங்கு காணப்படுகின்றது. 40 துறைசார் விற்பன் னர்களும், சர்வதேச அங்கீ காரம் பெற்ற 1000 தகுதி வாய்ந்த மருத்துவர்களுமாக சிங் ஹெல்த், பல்வகைப்பட்ட ஒருங்கிணைந்த மருத்துவப்பராமரிப்பினை வழங்குகின்றது. பிராந்தியத்தில் புதிய சிகிச்சை முறைகளை வெற்றிகரமாக அறிமுகப்படுத்துவதிலும் பெயர் பெற்றது.

# ஆசியாவின் சிறந்த கம்பனி கொமர்ஷியல் கிரடிட் பி.எல்.சி

உயர்ந்தளவிலான சர்வதேச தராதரத்தைக் கொண்ட சேவை மற்றும் செயற்பாடு என்பன வற்றை அடையாள நியமமாக நிலைநிறுத்தியுள்ள ஒரு முன்னணி நிதியியல் நிறுவனம் என்ற நன்மதிப்பை மேலும் மெருகூட்டும் வகையில் கொமர்ஷியல் கிரடிட் ஆனது, அண்மையில் மலேசியாவில் நடைபெற்று முடிந்த UDC Business Awards நிகழ்வில் 'ஆசியாவின் மிகச் சிறந்த நிதிக் கம்பனி' விருதினை பெற்றுக் கொண்டது.

மலேசியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மஹதிர் மொஹமட் வழங்கி வைத்த இவ்விருதினை கொமர்ஷியல் கிரடிட் நிறுவனத்தின் சார்பில் அதன் கூட்டாண்மை திட்டமிடல் பிரதிப் பொதுமுகாமையாளர் அன்ரூ சாமுவேல் பெற்றுக் கொண்டார்.

அவ்வேளையில் பிரதிப் பொது முகாமையாளர்களான (செயற்பாடுகள்) கே.எல்.ஏ.சென விரத்ன, சுதத் ஜயசேகர ஆகியோரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

''மதிப்பிற்குரிய இந்த சர்வதேச UDC Business Awards விருதினைப் பெற்றுக் கொள்ளவதனது ஆசியாவின் மிக முக்கியமானதொரு நிதியியல் நிறுவனம் என்று கொமர்ஷியல் கிரடிட் நிறுவனம் சம்பாதித்துள்ள நன்மதிப்பினை உறுதிப்படுத்தும் அதேநேரம், முன்னணி நிதி நிறுவனங்களின் சர்வதேச வரைபடத்தில் எமது நிறுவனத்தையும் நிலைநிறுத்துகின்றது'' என்று கொமர்ஷியல் கிரடிட் பி.எல்.சி. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஷான் எகொடகே தெரிவித் தார்.

மலேசியாவின் EL Universo De' Comercio Sdn Bhd உடன் ஒன் நிணைந்து ஐக்கிய இராச்சியத்தின் Uni verso De'Comercio (UDC) இனால் முதன்முதலாக வழங்கப்பட்ட UDC Business Awards விருதுகள், தனியார் மற்றும் அரச துறைகளையும் அத்துடன் முன்னணி வர்த்தக ஆளுமைகள் தொழில் முயற்சியாளர்கள் போன்ற தரப்பினரது கவனத்தையும் வெகுவாக கவர்ந்துள்ளது.

மிகவும் மதிப்பிற்குரியதும் பரவலாக எதிர்பார்க்கப்பட்டிருந்ததுமான இந்த விருது வழங்கல் நிகழ்வானது உலகெங்கிலும் உள்ள உயர்சாதனைகளை நிலைநாட்டிய நிறுவனங்கள் மற்றும் ஆளுமைகளை வெளியுலகிற்கு வெளிக்காட்டுவதுடன் வர்த்தக மேன்மையின் முக்கியத்துவத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

மலேசியா, கோலாலம்பூர் நகரின் புத்ரா வர்த்தக மையத்தில் இந்த விருது வழங்கல் நிகழ்வானதுஇடம்பெற்றது.

(த)

# எரிபொருள் விலை உயர்வுகளால் தோட்டத் தொழிலாளர்களுக்கே பாதிப்பு

## ம.தொ.மு. பொதுச் செயலாளர் கூறுகிறார்

நுவரெலியா,நவ.8

எரிபொருள்களின் விலைகள் எந்த ரூபத்தில் அதிகரித்தாலும் முதலாவதாகவும் முழுமையாகவும் பாதிக்கப்படுபவர்கள் தோட்டத் தொழிலாளர்களே - என்று மலையகத் தொழிலாளர் முன்னணியின் பொதுச்செயலாளர் க.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

பெருந்தோட்டத்துறையில் முன்னரைப் போல அல்லாமல் தற்போது மரங்களை வெட்ட முடியாததால் தொழிலாளர்கள் எரிபொருளுக்காக மிகவும் சிரமப்படுகின்றனர். மர ஆலைகளில் கிடைக்கும் துண்டுப் பலகைகள் மற்றும் மரத்தூளை நம்பியே பல குடும்பங்கள் சமையல் செய்கின்றன.

இதன் காரணமாக பெரும்பான்மையான தோட்டத் தொழிலாளர்கள் மண்ணெண்ணெய் அடுப்புகளில் சமையல் செய்கின்றார்கள். மின்சாரம் இல்லாத குடும்பத்தினர் குப்பி விளக்குகளையே வெளிச்சத்துக்காகப் பாவிக்கின்றனர்.

இந்த நிலையில், மண்ணெண்ணெயின் விலை உயர்வு தோட்டத் தொழிலாளர்களை நேரடியாகவும், முழுமையாக வும் பாதிக்கின்றது. ஒட்டு மொத்தத்தில் சாண் ஏற முழம் சறுக்கும் நிலையில் தான் எமது சமூகத்தின் வாழ்க்கை அமைந்துள்ளது.

அதிகள வாக கொழுந்து கிடைக்கும் காலங்களிலும், முழுக் குடும்ப உறுப்பினர்களுக்கும் கிடைக்கும் வருமானத்தை மட்டும் கணக்கிட்டு எமது மக்கள் வசதியாக வாழ்வதாகப் பலர் விமர்சனம் செய்கின்றார்கள்.

அத்தோடு, முன்பு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளையும் நிர்வாகங்கள் நிறுத்திவிட்டன. அண்மையில் குளவி கொட்டியதால் மஸ்கெலியா, மரே தோட்டத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்கு இதுவும் ஒரு காரணமாகும். தேன் கூடுகளை எரிப்பதற்கு என்று முன்பு நிர்வாகங்கள் நடைமுறைப்படுத்திய ஒழுங்கு தற்போது நடைமுறையில் இல்லை.

இவ்வாறு குளவிக் கூடுகளைத் தீயிட்டு அழிப்பதற்கு மீண்டும் நிர்வாகங்கள் நடவடிக்கையை எடுக்க வேண்டும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தீர்வைத் தேடி சர்வதேசத்திடம் கூட்டமைப்பு சென்றது ஏன்?

## காரணத்தைக் கூறுகிறார் பொன்.செல்வராசா எம்.பி.



வெல்லாவெளி, நவ.8

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் உள்நாட்டில் எடுக்கப்பட்ட அரசியல் தீர்மானங்கள் கிழித்தெறியப்பட்டன. இதன் காரணமாகவே சர்வதேசம் மூலம் ஒரு தீர்வுத் திட்டதைப் பெற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயன்றுள்ளது.

இந்நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் சிலர் நாங்கள் சர்வதேசத் திடம் உண்டியல் குலுக்கச்சென்றுள்ளோம் என்று தெரிவித்திருப்பது வேடிக்கையானது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார். மட்டக்களப்பு, கல்லடி, உப்போடை விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற நிர்வாகசபைப் போட்டிப் பரீட்சையில் இலங்கைத் தீவிலே வாழ்கின்ற எந்தத் தமிழ் பேசும் இனத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளும் தெரிவு செய்யப்படவில்லை என்கின்ற துக்ககரமான செய்தியையும் நாங்கள் உங்கள்முன் வைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு எமது தாயகம். அதனை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழ் ஒரு தேசிய மொழி. அதனையும் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இப்படியான நிலையில் நாங்கள் எங்களது விழுமியங்களின் அடிப்படையில் எமக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்ள அசையாத நம்பிக்கையில் இருக்கின்றோம். இதற்கு வருங்கால சந்ததிகள் அல்லது வருங்கால சந்ததிக்காக வாழும் பெற்றோர் வழி வகுத்து வைக்கவேண்டும். இதற்கான பொறுப்பிலும் கடமையிலும் நாம் இருந்துகொண்டிருக்கின்றோம்.

அந்தநிலையில், கல்வியைக் காப்பாற்ற மாணவர்களும் ஆசிரியர்களும் இருப்பதுபோல, எமது காணிகளைக் காப்பாற்ற வடக்கு, கிழக்கிலே வாழக்கூடிய மண்ணின் மைந்தர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் முன்வரவேண்டும். இந்த மாவட்டத்தில் இருக்கின்ற சகல அரசியல்வாதிகளும் இணைந்து எமது மாவட்ட மக்கள் சிறந்த வாழ்க்கையை அனுபவிப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டும்.

நாங்கள் இதனை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கியுள்ளோம். இந்தக் காணிப்பகிர்வு தொடர்பில் சட்ட நடவடிக்கையெடுப்பதற்கு அரச அதிகாரிகள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்திலே தமிழ் மக்கள் பால் எடுக்கப்பட்ட பல்வேறு சட்டவரைவுகள், அதிகார பரவலாக்கல்கள் கிழித்தெறியப்பட்டன. அதன் காரணமாகவே நாங்கள் சர்வதேசத்தை நாடினோம்; நாடியுள்ளோம்.

அந்தவகையில் எமது சமூகம் இந்த நாட்டில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட, இந்த நாட்டிலே சகல அபிலாஷைகளும் நிறையப்பெற்ற ஒரு சமூகமாக வாழவேண்டி யிருக்குமானால் நிச்சயமாக நாங்கள் கல்வியையும் காணியையும் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்- என்றார். (ச)

# கரையொதுங்கிய வெளிநாட்டவரின் சடலம்

திருகோணமலை,நவ.8

திருகோணமலை, குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரடிமலை கடற்கரைப்பகுதியில் கடந்த சனிக்கிழமை சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடல் அலையுடன் சடலம் கரையொதுங்குகிறது எனப் பொதுமக்களால் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு சட்ட வைத்தியரின் பரிசோதனைக்காக திருமலை அரசினர் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம் ஆண் எனவும், இவர் வெளிநாட்டவர் எனவும் குச்சவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# காணி அபகரிப்பைத் தடுத்த பிரதேச செயலாளர் திடீர் மாற்றம்

மட்டக்களப்பு,நவ.8

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி அபகரிப்பில் உள்வாங்கப்பட்டுள்ள கிரான் பிரதேச செயலகப்பிரிவில் கடந்த காலத்தில் காணி அபகரிப்புக்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த பிரதேச செயலாளர் அம்பாறை மாவட்டத்துக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அண்மைக் காலமாக ஓட்டமாவடியைச் சேர்ந்த சில முஸ்லிம் அரசியல்வாதிகளினால் கிரான் பிரதேச செயலாளர் தவராசா வுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. இந்தநிலையில் தமிழ்ப்பகுதிகளில் அத்துமீறி நில அபகரிப்பில் ஈடுபட்டுவந்தவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்து வந்த கிரான் பிரதேச செயலாளர் தவராசா அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராகவுள்ள முஸ் லிம் பெண்ணொருவர் கிரான்பிரதேசசெயலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.(ச)



கல்முனை பிரதி முதல்வர் நிசாம் காரியப்பர் இலங்கைக்கான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதுவரும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவர்கள் அமைப்பின் தலைவருமான மஹ்மூத் முஹம்மட் அல் மஹ்மூதை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துள்ளார்.

# மாணவர் தாக்கப்பட்ட சம்பவம்

# முறைப்பாட்டை ஏற்க மறுத்த இரு பொலிஸார் இடைநிறுத்தம்

கண்டி, நவ.8

பாடசாலை மாணவர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவரது தந்தை கண்டி பொலிஸ் தலைமையகத்தில் செய்த முறைப்பாட்டை ஏற்க மறுத்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் அங்கு கடமையில் இருந்த சப்இன்ஸ்பெக்டரும், சார்ஜண்டும் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டை ஏற்க மறுத்தனர் என்ற குற்றச்சாட்டின்பேரில் கண்டி பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பீ.பீ.பெரமுன நடத்திய விசாரணை அறிக்கை பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனுக்கு சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்ட இருவரையும் பதவி இடைநிறுத்தம் செய்யுமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (ச)

# டெங்கு ஒழிப்புக்கான வேலைத் திட்டம் ஆரம்பம்

மூதூர், நவ.8

திருகோணமலை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் டெங்கு ஒழிப்புக்கான ஆரம்ப வேலைத் திட்டங்கள் பரவலாக இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஜாயாநகர், மூதூர் கிழக்குப் பகுதிகளில் உள்ள பொது இடங்களில் சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாக மூதூர்- ஜாயாநகர் பகுதியில் சிரமதானம் இடம்பெற்றது.

இந்தச் சிரமதான நடவடிக்கைகளில் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

திரு கோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக மாலை வேளையில் மழை பெய்கின்றமையால் மாவட்டத்தின் பல பிரதேசங்களில் டெங்குநோய் பரவக்கூடிய அச்ச நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# சிங்கராஜ வனத்தில் வேட்டையாடியோர் கைது

சிங்கராஜ வனத்தில் வேட்டையாடிய நால்வரை கொலொன்ன பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து இரண்டு துப்பாக்கிகள், 10 கிலோ இறைச்சி ஆகியன மீட்கப்பட்டன.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபடுகின்றனர். (ச)

# புதையல் தோண்டிய இருவர் கைது

தம்மன்னாகல, நவ.8

ஹொரவப்பொத்தான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்மன்னாகல பகுதியிலுள்ள தொல்பொருள் ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்ட காணியொன்றில் புதையல் தோண்டியதாகத் தெரிவிக்கப்படும் இருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் வழங்கிய தகவலையடுத்து குறித்த இடத்திற்கு சென்ற பொலிஸ் குழுவினர், மேற்படி சந்தேக நபர்களை கைதுசெய்ததாக ஹொரவப்பொத்தான பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்கள் பலர் புதையல் தோண்டிக்கொண்டி ருந்த போது அவ்விடத்திற்கு சென்ற காணியைச் சுற்றி வளைத்துள்ளனர்.

இதன் போது சந்தேக நபர்கள் பலர் தப்பியோடியதாகவும் இருவரை மாத்திரமே கைது செய்ய முடிந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

இவர்கள் விட்டுச்சென்ற மோட்டார் சைக்கிளொன்று மற்றும் புதையல் தோண்டப் பயன்படுத்திய ஆயுதங்களை கண்டெடுத்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய சந்தேக நபர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:**
எதிர்ப்புகள், போட்டிகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களை விமர்சிக்கலாம் அல்லது பாராட்டலாம். குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொடுப்பீர்கள். உங்களுக்குப் பிடித்த ஒன்று மற்றவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைவீர்கள். வீண் செலவுகள் ஏற்படலாம்.

**ரிஷபம்:**
நண்பர்கள், சக ஊழியர்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள். குடும்பப் பெரியவர்கள் உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். அவசரத் தேவைக்காக சிலரிடம் கடனுதவி பெறலாம். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். சில நாள்களுக்கு முன் எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று திடீரென வரலாம்.

**மிதுனம்:**
அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டுச் செய்வீர்கள். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். நீங்கள் குறைவாக மதிப்பிட்ட ஒருவர் மூலம் பெரிய அளவிலான உதவி கிடைக்கும். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்க நேரிடலாம்.

**கடகம்:**
ஆரம்பித்த சில வேலைகளை திடீரென இடைநடுவில் விட்டு விடலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்பீர்கள். தொழில் ரீதியாக வெளியூர் பயணங்கள் செல்லலாம். சிறிய செலவு ஒன்றுக்கு யோசித்த நீங்கள், ஒரு காரியத்திற்காக பெரிய அளவில் செலவு செய்யலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம்.

**சிங்கம்:**
பிள்ளைகள் வழியில் தண்டச்செலவுகளை எதிர்கொள்ளலாம். அயலாரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். எங்காவது வெளியில் புறப்பட்டுச் செல்லும் நேரத்தில், முக்கிய பொருளை எடுத்துச் செல்ல மறந்துவிடலாம். ஓய்வெடுக்க நினைத்தாலும், முடியாத அளவுக்கு வேலை நெருக்கடி உருவாகும்.

**கன்னி:**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். ஆடம்பரப் பொருள்கள் வாங்க அடித்தளம் அமைப்பீர்கள். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்பவர்கள் அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். மாற்று மத நண்பர்கள் வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம்.

**துலாம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணவரவுகளைப்பெறும் நாள். புதிய முதலீடுகள் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். கணவன், மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது வாகன வசதி கிடைக்கலாம்.

**விருச்சிகம்:**
சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். உங்களுக்கு கீழான நிலையில் உள்ள சிலருக்கு பண உதவி செய்யலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். உங்களுடன் பேச முற்படும் சிலரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம்.

**தனுசு:**
உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். சுய தொழில் புரிவோர் கணிசமான வருமானம் பெறலாம். நீண்டதூர பயணங்கள் செல்லலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். தவறான காரியம் ஒன்றைச்செய்ய முற்பட்டு, அதனால், பதற்றம், படபடப்பு அடையலாம். வேலைப் பளுகூடும்.

**மகரம்:**
அனைத்தது நடந்து சந்தோஷம் அடையும் நாள். விருந்து, விசேடங்களால் மகிழ்ச்சி, உற்சாகம் பெறுவீர்கள். பெண்கள் சிலர் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம். வியாபாரிகளுக்கு பணப் புழக்கம் அதிகரிக்கும். தொழில் நிமித்தமாக ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்குச் செல்லலாம். புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள்.

**கும்பம்:**
தம்பதியரிடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டு, மனஸ்தாபம் உருவாகலாம். சிலபொருள்களை எங்காவது மறதியாக வைத்து விட்டு தேடலாம். வாகனங்களில் செல்லும் போது கவனம் அவசியம். அயலாரிடம் உங்களின் பழம் பெருமைகளைப் பேசி மகிழ்வீர்கள். வீடுமாற்றம் தொடர்பான சிந்தனைகள் உருவாகும்.

**மீனம்:**
உடன் பிறப்புகள் வழியில் பண உதவிகளைப் பெறலாம். உடல் உபாதைகள் குறைந்து உற்சாகம் பெறுவீர்கள். சிக்கலில் இருக்கும் ஒருவருக்கு கை கொடுத்து உதவுவீர்கள். சில காரியங்களில் மற்றவர்களை முந்திக்கொண்டு செயற்பட நினைப்பீர்கள். சக ஊழியர்கள் சிலருடன் கருத்து மோதல்கள், வாக்குவாதங்கள் ஏற்படலாம்.

# பயணத்தில் பெரும் தடையா? பதறாதே

உலகம் மிகச் ''சிறியது'', என்று பொருளுணர்த்தும் தொழில்நுட்ப உயர் வளர்ச்சிக் காலத்தில்தான் வெறிகொண்ட வேட்டை நாய்களால் நாற்புறமும் சூழப்பட்டுக் கொத்துக் கொத்தாக வெள்ளாடுகளென கொன்று குவிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தின் மரண வாக்குமூலத்தைக்கூட ''குருட்டுக்கு நடிக்கும் சர்வதேசங்கள்'' நம்ப மறுக்கின்றன.

வளர்ந்து நின்ற தொழில்நுட்பமும், துல்லியமான தொலைத்தொடர்பு சாதனங்களும், ஒலியையும் விஞ்சும் போக்குவரத்து வசதிகளும் ''அல்லற்பட்டு ஆற்றாது அழுது'' உயிர் உருக்கிக் காத்திருந்த தமிழுடல்களுக்கு வாய்க்கரிசி போட வசதிப்பட்டனவே ஒழிய ஒருவாய் வார்த்தை ஆறுதல் கூட சொல்ல முன்னிற்கவில்லை.

துளித் துளியாய் திரட்டியெடுத்து, உண்மைச் சம்பவங்களைக் கோர்வையாக்கி, தனது இறுதி நிமிடங்களில் தமிழன் எப்படியெல்லாம் இழிந்த பின் புதைந்து போனான் என்பதை ஆதார பூர்வமாக அளிக்கப்படுத்திய போதிலும், அந்தவொரு நொடிமட்டும் கண்களில் கண்ணீர் துளிர்க்கப் பார்த்துவிட்டு, பின் பக்கத்துக் ''கோர்ட்''டில் ஒட்டிய தூசியைத் தட்டியபடி எழுந்து போன ஜனநாயக தேசங்களின் தூதுவர்களினால் ஒன்றிணைக்கப்பட்ட கட்டமைப்புகளின் ''பிரியாணிக்குள்'' கறிவேப்பிலையாகிப் போனோம் நாங்கள்?

''அங்கீகரிக்கப்பட்ட நாடொன்றின் இறைமைக்குள் தலையிட முடியாது'', ''ஜனநாயக தேசமொன்றின் சட்டவாக்கத்தை எதிர்த்து விசாரிக்கும் திராணி சர்வதேச சட்டங்களுக்குப் போதாது'', ''உங்களுக்கான இனவிகிதத் தன்மைப் பற்றாக் குறைதான் உலகத்தை உங்களின் பால் நம்பிக்கையற்றவர்களாக்கியுள்ளது'' என்றெல்லாம் எங்களுக்கு இலகுவில் புரிந்து விடாத வார்த்தைகளாலும், சாசனங்களாலும், கூட்டத் தொடர்கலாலும் விமர்சிக்கப்படும் எங்களின் பிரச்சினையென்ன ''மயிர்'' விழுந்ததென்பதா?

உயிர் போக்குவதற்கு முன்னும் பின்னும், பொய்யென்றும் பின்னிய மெய்யுடல்கள் மீது மனிதாபிமான வீரர்கள் (?) கட்டவிழ்த்துவிட்ட மனிதகுலத்துக்கே ஒவ்வாத கீழ்த்தரமான செய்கைகளையும், காதும் கூசும் வார்த்தைகளையும், இரத்தப் பசையோடு தொங்கி நின்ற குறையுயிர்களையும் நம்ப மறுக்கின்ற அல்லது எதிர் நடவடிக்கையெடுக்கத் துணியாத ''உரிமைத் தேசங்கள், இனியும் எம்மை நம்ப வேண்டுமென்பதற்காக, இழப்பதற்கு எம்மிடம் எதுவுமே இல்லை என்பதே யதார்த்தம்.

> “அடே தம்பி! தலையிழந்த கணவனை நேற்றுத்தான் வீதியில் போட்டுவிட்டு, குண்டு பாய்ந்த மகனை கூடச் சுமந்து ஒரு கூடாரம் சேர்ந்தேன், அவன் இறந்தது கூடத் தெரியாத வேகத்தில். பச்சைத் தண்ணியைத் தவிர வேறேதாவது அருந்தி நாள்கள் நாலைந்து ஆனதெடா இன்றோடு! ஏதாவது செய்யடா இந்த ஏழைத் தாய்க்கு!”

> வாளெடுத்து வீசும் தோள்கள் மட்டும் அல்ல, சொல்லெடுத்துப் பேசும் பல்லறிவு நாவுகளும் தானே, வரும் நாள்களில் எம் வானத்துச் சூரியன்களாகத் தேவை. வெறும் ஆயுத முரட்டுப் பலத்தினை நம்பி அரசியல் சாணக்கியத்தை உலகரங்கில் அவிழ்த்துவிடாத தவறுகள்தான் மரணக் குழிக்குள் முழு இனத்தையும் தள்ளி மூழ்யது என்ற இழிச் சொல்லுக்கு இன்னுமொரு முறை இடம் கொடாமல் காப்போமா?

''சேர்ந்து கொன்றவன்'', ''சதி செய்து மரணப் பொறியமைக்கத் திட்டம் கொடுத்தவன்'', ''கடல் எங்கும் 'ராடர்' கண்களால் சைகை காட்டியவன்'','' தடை செய்த ஆயுதங்களை தாராளமாய் வார்த்து வளர்த்து விட்டவன்'', ''தன் நாட்டுத் தளபதி களையும் துணைக்கனுப்பியவன்'' எல்லோரையும் திரைப்படங்களில் மட்டுமே விமர்சித்து விட்டு விசிலடித்து, உயரக் ''கட்டவுட்'' மீதேறி பாலா பிஷேகம், பட்டாசு வெடிக்கும் பேடிகளாக எங்களை அலங்கரித்து சமூகத்தில் உலாவ விட்டுள்ளான் எம் எதிரி.

உரிமை பேசும் இறுதிக் குரல்கள் உலக அரங்கில் ஒலிக்கச் சென்றதையும் சகிக்காத, ''கொங்கிறீட்'' உடைப்புக் குண்டர்களிடம் நாற்காலி போட்டு உட்கார்ந்து பேசி உரிமைகளை யாசகம் கேட்குமாறு பரிந்துரைக்கின்றன உலக நாடுகள்.

''விதியே! விதியே! என் செய்தாய், என் தமிழ்ச் சாதியை'' என்ற பழந்தமிழ்க் கவிஞனின் வரிகள் கச்சிதமாய்ப் பொருந்தி நிற்பதை கண்ணீரோடு கண்டு, விரக்தியில் சிரிக்கவும் விரியாதோ எம் உதடுகள் இனி??

''யாரையடா நம்பவில்லை நாங்கள்? ஆட்சிக் கட்டிலுக்கு வரும் யாராயினும், அவன் நடிகனோ, வசன கர்த்தாவோ, நடிகையோ, ஒப்பனைக்காரனோ எவனாயினும் என்னினத்தின் துயர் போக்கும் தூதுவனாக இருக்க மாட்டானா என்ற ஏக்கத்தில், யாரையடா நம்பவில்லை நாங்கள்?'' என்று இனவெழுச்சிக் கூட்டமொன்றில் முழங்கிய செந்தமிழன் சீமான், தொடர்ச்சியாய், ''ஈழத்திலிருந்து என்னைத் தொலைபேசியில் அழைத்த ஓர் தாய் (அடே தம்பீ! தலையிழந்த கணவனை நேற்றுத் தான் வீதியில் போட்டு விட்டு, குண்டு பாய்ந்த மகனை கூடச் சுமந்து ஓர் கூடாரம் சேர்ந்தேன், அவன் இறந்தது கூடத் தெரியாத வேகத்தில் பச்சைத் தண்ணியைத் தவிர வேறேதாவது அருந்தி நாள்கள் நாலைந்து ஆனதெடா இன்றோடு! ஏதாவது செய்யடா இந்த ஏழைத்தாய்க்கு'') என்று கதறியழுததை நினைவு கூர்ந்தான்.

'' என் பேச்சுக்களையெல்லாம் பதிவு செய்து கேட்கும் உளவுத்துறை நண்பர்களே! இந்தத் தாயின் குரலையும் பதிவு செய்து உங்கள் உயரதிகாரிகளுக்கும், உலகத்துக்கும் போட்டுக் காட்ட முடியாதா?'' என்று அவன் வினாவெழுப்பி ஓய்ந்தபோது விதிர் விதிர்த்துப் போன பக்கத்துப் பாரத தேசத்தின் இந்த நொடி வரைக்குமான மௌனத்துக்கு சரியான மொழி பெயர்ப் புத்தான் என்ன?

உண்மை மிகச் சுலபம் பதினைந்தரைக் கோடி, உலகத் தமிழனே! ''உன்னிடம் தன் நலன் காட்டும் ஓர் காரணி இருப்பினும் உலகம் உன்னை அணி செய்யும், இன்றேல் அழி செய்யும்!!''

'ஆயிரமாண்டுகளாயினும் வீண் போகாத சக்தித் தேவையைப் பூர்த்தி செய்யும் தனித்தன்மையான நிலத்தடிப் பெற்றோலிய வளமோ', 'பல்லுலகப்

பாதைகளும் வந்து தொடுக்கும் கடற் போக்கு வரத்தின் கப்பல் வழிகளில் வணிகமாற்றும் பெருந் துறை முகங்களின் ஏகபோக உரிமையோ', 'எண்ணிக்கை ரீதியாகச் சவால் கொடுக்கும் மக்கள் தொகையின ரால் நிரப்பப்பட்ட வல்லரசுகளுக்குப் போட்டியாக வளரத்துடிக்கும் அபிவிருத்தியடையும் பெரு நிலப்பரப்போ', 'அணுசக்தி, விண்வெளி ஆராய்ச்சி, ஆயுத உற்பத்தி, தொழில்நுட்பப் புரட்சி என்ற உச்ச பொருண்மிய ஈட்டலைக் கொடுக்கும் அறிவு விருத்தியோ' உன்னிடமிருந்தால் அல்லவா உலகம் உற்றுப் பார்த்திருக்கும்?

ஓரங்குலம்கூட எல்லை மீறினால், மீறியவன் காலை உள்நாட்டு புரட்சியால் முறித்தெடுத்து, தனிக்கொடி தந்து தங்களுக்குச் சமமாகத் தாப ரித்திருக்கும்! மாறாக, ''ஆக'' இரண்டாயிரம் ஆண்டுகளே பழைமையான மொழியொன்றையும், பண்பாட்டுப் பின்னலையும் பெரிதென்று புலம்பும் இலக்கியங்கள் எப்படிக் கவரும் இந்த வியாபார உலகை? கூடவே துரோகமும், தன்னலமும், சகோதரச் சண்டையும் எப்போதும் இலகுவில் தலைதூக்கிவிடும் தாளாண்மைக்குக் குறைவிலாத இனமொன்றுக்கு அங்கீகாரம் வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று ஏன் வலிக்கவேண்டும் ஏனைய நாடுகளுக்கு?

எவனையாவது ''கச்சையில் பிடித்துக் காரிய மாற்றி'' முன்னிலை பெறவேண்டி, உன்னிலும் சிறிய தேசங்களிலெல்லாம் வீதிகளில் கூடி வாய் கதறும் தமிழா! கூட்டிக் கழித்துப் பார்த்தால் புரியும் ''முளையிலே விட்ட தவறுகளால்தான், உன் விளைவினில் இத்தனை தாமதம்'' என்பது!

''அடுத்த கட்டத்துக்கு நகர முயற்சிக்காத கல்விக் கட்டமைப்புக்களும்,' 'தொழில் வாய்ப்பொன்றுக் காக எப்போதும் இன்னொருவனை அண்டிப் பிழைக்கும் சுயநம்பிக்கைக் குறைவும்', 'ஆய்வுகள், ஆராய்ச்சிகள் என்ற புத்தாக்க முனைப்புக்களை எப்போதும் புதுமையுடன் தூரநின்றே பார்க்கும் பழமைவாதமும்,'சீதனம், சேர்த்து வைத்தல், சொத்தளந்து சேர்தல், மதக் கொள்கைகள், குருட்டு ஆன்மீகம் இன்ன பிற புரையோடிப்போன பழம் புண்களை புதிதாய்ச் சுரண்டி வைக்கும் சுகமும், சேர்ந்தெழுந்த பெருஞ் சுவர் முன்னால் தேங்கி நிற்கும் குட்டைகளாக எம்மிளஞ் சந்ததியை வளைந்தோடி வளரும் நதியாக வழிவிடாதது காலத்தால் கரைத்தழிக்க முடியாது தடுக்கும் மாதவறுகள் இல்லையா?

வெறும் ஆறு வருடங்களுக்குள் ஐந்தாயிரத்தில் இருந்து நாற்பதினாயிரத்தைத் தாண்டி வளர்ந்து விட்ட வேலையற்ற பட்டதாரிகளை பிரசவிக்கும் பலகலைக் கல்லூரிகளை தொழில் வாய்ப்புச் சுரக்கும் திறமையூற்றாக மாற்றாமலே வைத்திருப் பது யார் தவறு?

நான்காயிரத்துக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகளை

■ செந்தூரி

போட்டியாளர்களாகக் கொண்ட தடைதாண்டல் பரீட்சையில், சித்திபெறும் அடிப்படைப் புள்ளி களைத் தாண்டாமல் அரைவாசிப்பேர் உலகறியாக் ''கிணற்றுத் தவளைக்காக'' இன்னமும் இருக்கக் கர்த்தா யார்?

516 பேரைத் தெரிவு செய்த அரச நிர்வாக உயர்பரீட்சையின் பெறுபேற்று அட்டவணைகளில் தமிழ்மொழி மூலத்தில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை இருபதுகளைத் தாண்டாத இவ்வருட மர்மமும், எவருமே தெரிவு செய்யப்படாத கடந்த வருட மர்மமும், துலங்காதது ஏன்?

பேரிடர் காலங்களில்கூட முதல் மூன்று அகில இலங்கை இடங்களுக்குள் இடம்பிடித்த கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சார்த்திகள், ''எல்லா வசதியும்'' கிடைக்கும் அண்மைய வருடங் களிலும், அடுத்த வருடங்களிலும் ''சறுக்கிக்'' கொண்டேயிருப் பதற்கு சரியான மூலம் என்ன?

''அத்திபாரத்தை வெறும் மணல்கொண்டு நிரப்பி வைத்துவிட்டு, ஆறாம் மாடி கட்ட அனுமதி கேட்கும்'' எம் அறியாமையே எம்மினத்தை ''கெடுப்பாரில்லா மல் கெடுக்கும்'' கேடில் லையா?

வாளெடுத்து வீசும் தோள்கள் மட்டும் அல்ல, சொல்லெடுத்துப் பேசும் பல்லறிவு நாவுகளும் தானே, வரும் நாள்களில் எம் வானத்துச் சூரியன்களாகத் தேவை.

வெறும் ஆயுத முரட்டுப் பலத்தை நம்பி அரசியல் சாணக்கியத்தை உலகரங்கில் அவிழ்த்துவிடாத தவறுகள்தான் மரணக் குழிக்குள் முழு இனத்தையும் தள்ளி மூடியது என்ற இழிச் சொல்லுக்கு இன்னுமொரு முறை இடம் கொடாமல் காப்போமா?

''பயணத்தில் பெரும் தடையா? பதறாதே! உன் பாதை சரியானதே என் எதிரியின் பாராட்டுரை அது!!''

# சமய ஆசிரியரா சமயத்துக்கு ஆசிரியரா?

பாடசாலைகளில் தேர்ச்சியை அடிப்படை யாகக் கொண்ட கல்வி முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது தற்போதுள்ள நடைமுறை. சமயமும் ஒழுகலாறும் என்பது அடிப்படைத் தேர்ச்சிகளுள் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றன. இதனால் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் சமய பாடம் பிரதான பாடங்களுக்குள் ஒன்றாக உள்ளது.

சமய பாடத்தின் ஊடாக அறிவு, திறன், மனப்பாங்கு மாத்திரமன்றி வையத்துள் வாழ் வாங்கு வாழ்வதற்கான வாழ்வியல் நெறி முறையும் போதிக்கப்படுகின்றது.

எமது சமூகத்தில் விடுபட்டுப் போகும் சமயக் கட்டமைப்புகளை வளர்த்தெடுப்பதற்கும் எமது சந்ததியினரை நல்வழிப்படுத்துவதற்கும் சமய பாடம் ஊடாக நற் கருத்துக்களை வழங்க வேண்டி யது அவசியம்.

இதனைக் கருத்தில் கொண்டு சமய பாடத் தின் முக்கியத்துவம் எடுத்து விளக்கப்படுகின் றது.

இதனால் இறை சிந்தனை (சமய நம்பிக்கை), சமய ஒழுகலாறும் விழுமியங்களும் (சமய இலக் கியங்கள், தத்துவங்கள்) சமயமும் சமூக நடை முறைகளும் என்பன இந்தப் பாடத்தின் பிரதான உள்ளடக்கங்களாக உள்ளன.

பாடசாலைகளில் சைவ சமய பாடத்தைப் போதனை செய்வதற்கென விசேட பயிற்சி பெற்ற ஆளணியின் எண்ணிக்கை போதாமல் இருக்கிறது.

இந்த நிலையில் ஏனைய பாட ஆசிரியர்களே இந்தப் போதனையை மேற்கொள்கின்றனர். இது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

சமயம் கற்பிக்கும் ஆசிரியருக்குத் தான் சார்ந்திருக்கும் சமயத்தின் மீதான நம்பிக்கை முக்கியமானது. இத்தகைய நம்பிக்கை உள்ள வராலேயே தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்ற முடியும். ஆனால் சமய பாடந்தானே என்ற அசமந்தப் போக்குடன் இந்தப் பாடத்தைக் கற்பிக்கும் நிலைமையை இன்று பலரிடம் காணமுடிகின்றது.

நேரசூசி தயாரிக்கும் போது ஆசிரியர்களுக் கான பாட ஒதுக்கீட்டைச் சமப்படுத்த வார மொன்றுக்கு இரண்டு பாடவேளைகள் சமயம் கற்பிக்குமாறு ஆசிரியரைப் பணிக்கும் நிலைமை யும் காணப்படுகின்றது. இது சமயபாட ஆசிரியரைச் சமயத்துக்கு ஆசிரியராக்கிவிடும் சந்தர்ப்பமாகும். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு சமய பாடம் கற்பிப்பதற்காக ஆசிரிய வளத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமன்றி சமய பாட ஆசிரியர்களைச் சமயத்துக்குள்ளேயே தள்ளிவிடும் மனோநிலை மாற்றப்படவேண்டும்.

அடுத்த ஆண்டுக்கான திட்ட வரைபை மேற்கொள்ளும் இந்தச் சந்தர்ப்பத்தில் சமய பாட போதனை வினைத்திறனுடனும் விளை திறனு டனும் முன்னெடுக்கப்படுவதற்கு நட வடிக்கை மேற்கொள்ளல் நலந்தருவதாக அமையட்டும்.

**ச. லலீசன்,** விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

# நிம்மதி எங்கே இருக்கிறது?



ஓர் ஊரில் வசித்துவரும் மனிதன் ஒருவருக்கு எந்தக் குறையும் இல்லை அவனுக்கு: ஆனாலும் மனசில் நிம்மதி இல்லை. உறங்கப்போனால் தூக்கம் வரவில்லை. சிரமப்பட்டான். அவனின் மனைவி பரிதாபப்பட்டு ஒரு யோசனை சொன்னாள்.

''அருகிலே உள்ள காட்டில் ஓர் ஆச்சிரமம் இருக்கின்றது அங்கே ஒரு பெரியவர் இருக்கின்றார்.போய் பாருங்கள்!''

ஆச்சிரமத்துக்குப் போனான். பெரியவரைப் பார்த்தான் .

''ஐயா... மனதில் நிம்மதி இல்லை.. தூங்க முடியவில்லை.

அவர் நிமிர்ந்து பார்த்தார். ''தம்பி... உன் நிலைமை எனக்குப் புரியுது.. இப்படி வந்து உட்கார்!''என்றார்.

பிறகு அவர் சொன்னார்: ''உன் மனசுக்குச் சில ரகசியங்கள் தெரியக்கூடாது. தெரிஞ்சால் உன் நிம்மதி போயிடும்!''

''அது எப்படி?''

''சொல்கின்றேன் .... அது மட்டுமல்ல... .மனம் தேவையில்லாத சமயங்களிலே, தேவையில்லாத சுமைகளைச் சுமக்கிறதும் இன்னொரு காரணம்!''

''ஐயா.. நீங்கள் சொல்கின்றது எனக்குப் புரியவில்லை!''

''புரிய வைக்கிறேன்.. அதற்குமுன் ஆச்சிரமத்தில் வந்து சாப்பிடு.''

வயிறு அதிகமாகச் சாப்பிட்டான்.

பெரியவர் அவனுக்கு ஒரு சுகமான படுக்கையைக் காட்டி, ''அதில் படுத்துறங்கிக்கொள்''என்றார்.

படுத்துக்கொண்டான். பெரியவர் பக்கத்தில் உட்கார்ந்து கதை சொல்ல ஆரம்பித்தார்....

கதை இது தான்: ரயில் புறப்படப்போகிறது. அவசர அவசரமாக ஒருவன் ஓடி வந்து ஏறுகிறான். அவன் தலையில் ஒரு மூட்டை. ஓர் இடம் பிடித்து உட்கார்ந்தார்.

ரயில் புறப்பட்டது. தலையில் சுமந்து வந்த மூட்டையை மட்டும் அவன் கீழே இறங்கி வைக்கவில்லை.

எதிரே இருந்தவர் கேட்கிறார்:''ஏனப்பா! எதுக்கு அந்த மூட்டையைச் சுமந்துகொண்டு வருகின்றாய்? இறக்கி வையேன்!''

அவன் சொல்கிறான்: ''வேண்டாம் இந்த ரயில் என்னை மட்டும் சுமந்தால் போதும்! என் சுமையை நான் சுமந்துகொள்வேன்!''

பெரியவர் கதையை முடித்தார்.

படுத்திருந்த அந்த நபர் சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''பைத்தியக்காரனா இருக்கிறானே... ரயிலை விட்டு இறங்கும்போது, மூட்டையைத் தூக்கிக்கொண்டு இறங்கினால் போதாதா?''

''அது அவனுக்குத் தெரியவில்லையே!''

''யார் அவன்?'' இயல்பாகக் கேட்டான்.

''நீதான்!''

''என்ன சொல்கிறீங்கள்?''

பெரியவர் சொன்னார்: '' வாழ்க்கை என்பதும் ஒரு ரயில்பயணம் மாதிரித்தான்... பயணம் பூராவும் சுமந்துகொண்டே போகின்றவர்கள் நிம்மதியாக வாழ முடியாது. தேவைப்படுகிறதை மட்டும் மனசில் வைத்துக்கொள்!''

அவனுக்குத் தனது குறை மெதுவாகப்புரிய ஆரம்பித்தது. சுகமாகத் தூக்கம் வந்தது. தூங்க ஆரம்பித்துவிட்டான். கண்விழித்தபோது எதிரே பெரியவர் நின்றுகொண்டிருந்தார்.

''எழுந்திரு!'' என்றார்.

எழுந்தான்!

'' அந்தத் தலையணையைத் தூக்கு! என்றார். தூக்கினான். அடுத்த கணம் ''ஆ'' வென்று அலறினான்.

தலையணையின் அடியில் ஒரு நாகபாம்பு. சுருண்டு படுத்திருந்தது.

''ஐயா! என்ன இது?''

''உன் தலைக்கு மிக அருகில் ஒரு பாம்பு அப்படி இருந்தும் நீ எப்படி நிம்மதியாகத் தூக்கியிருக்கிறாய்!''

அவன் புறப்பட்டான். ''நன்றி பெரியவரே.. நான் போய் வருகிறேன்!''

''நிம்மதி எங்கே இருக்கிறது என்பதைப் புரிந்துகொண் டாயா?''

''புரிந்துகொண்டேன்! என் மனசுக்குள்ளேயே ஒளிந்துகொண்டிருக்கிறது. அறிவின் வெளிச்சத்தால் அதைத் தேடிக் கண்டுபிடித்துவிட்டேன்!''என்றார்.

**கோ.சுவாமிநாதன்**



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிறுவர் தின விழாவும், 'சங்கமம்' இறுவட்டு வெளியீட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றன. சங்கமம் இசைக்குழுவினருடன் ஆசிரியர்கள். (ம–15)

# இளைய தலைமுறையினரின் செயற்பாடு சமூகத்தை அழிவுக்குக் கொண்டு செல்கிறது

### களையோடை கண்ணகை அம்மன் ஆலயகுரு

யாழ்ப்பாணம், நவ.8

இளம் சமுதாயத்தினரது மனோ நிலையில் இன்று பல்வேறு மாற்றம் நிகழ்கிறது. இதில் 80 வீதமான இளைஞர்களின் செயற்பாடு சமூகத்தை அழிவுக்குக் கொண்டு செல்கிறது. இது அபத்தமானது - சாபக்கேடாகவே கொள்ள முடிகிறது.

பிரசித்திபெற்ற நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலய பிரதம குருவும் ஆலய உரிமையாளருமான சிவத் திரு கந்தையா நாகேந்திரம் இவ்வாறு கவலை தெரிவித்தார்.

நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பொங்கல் வழிபாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஆலய பிரதமகுரு கந்தையா நாகேந்திரம் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

இன்றைய இளைஞர்கள் கைத்தொலைபேசியுடன் மோட்டார் சைக்கிளில் தேவையற்று வலம் வருகின்றனர். இவ்வாறான இளைஞர்கள் தமது போக்கை மாற்ற வேண்டும். கல்வி கற்ற மாணவ சமூகம் நேரத்தை வீணடிக்கக் கூடாது. சனசமூக நிலைய நூலகங்கள், பொது நூலகங்களை பயன்படுத்தி கல்வியைத் தொடர வேண்டும்.

இன்று இளம் மாணவச் சமூகம் கற்கை செய்யக்கூடிய பல கற்கை நெறிகள் உள்ளன. இதனைப் படித்து பயன் பெறுங்கள், சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்பை ஏற்படுத்தி மேலதிக கல்வியை மேம்படுத்துங்கள்.

இது உங்கள் குடும்பத்தையும் சிறப்பாக வைத்துக் கொள்வதுடன் உங்கள் சமூகத்தையும் உயர்த்தும், எதிர்காலமும் சுபீட்சமாக மாறும்.

கைத்தொலைபேசி கலாசாரத்தை, சீரியல் பார்க்கும் கலாசாரத்தை தூக்கி எறியுங்கள்.

இதனால், சமூகம் மேலும் மேலும் பின்தள்ளப்படுகின்றது. இதனை உணர்ந்து செயற்படுவீர்கள். எமது சமூகத்தில் நல்ல மாற்றம் நிகழவேண்டும். இளம் சமூதாயம் ஊடாக நல்லெண்ணம் ஏற்பட வேண்டும். இது சமூகப் புரட்சிக்கான ஓர் எடுத்துக் காட்டாகும்.- என்றார். (ம-302)

# பாடசாலைகளின் அபிவிருத்திக்கு சமூகத்தின் ஒத்துழைப்பும் அவசியம்

### சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் உரை

யாழ்ப்பாணம், நவ.8

பாடசாலைகளின் அபிவிருத்திக்கு அதிபரின் பங்களிப்பு மட்டுமல்லாது பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்பும் தேவையாகவுள்ளது.

இதன் மூலம்தான் பாடசாலை வளங்களை விரிவுபடுத்தி சிறந்த அபிவிருத்தி பெற்ற பாடசாலையாக உருவாக்க முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 135 ஆவது ஆண்டு நிறைவு தினவிழா அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:

பாடசாலையின் வளர்ச்சியானது அதிபர், ஆசிரியர்களில் தங்கியிருப்பது கிடையாது. பாடசாலையைச் சேர்ந்த சமூகத்தின் பங்களிப்பும் தேவை.

பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்றன இணைந்து தம்மால் இயன்ற உதவிகளையும், சேவைகளையும் வழங்கினால் பாடசாலையின் அபிவிருத்தி மேலும் வளர்ச்சியடையும்.

அத்துடன் புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பும் தேவை.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் இவ்வாறானவர்களின் ஒத்துழைப்பு அதிகம் கிடைத்துள்ளது.

இதனைப்போல் ஏனைய பின்தங்கிய பாடசாலைகளின் அபிவிருத்திக்கு பாடசாலைச் சமூகம் சார்ந்தவர்களின் ஒத்துழைப்பு இருந்தால் பாடசாலைகளை விருத்தியடையச் செய்யலாம்.- என்றார். (ம-313-29)

# வாசிப்பதற்கு பல்வேறு வாய்ப்புகள் இருந்தும் மாணவரின் வாசிப்புப் பழக்கம் வீழ்ச்சியடைகிறது

### கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்

சுன்னாகம், நவ.8

வாசிப்பதற்கான வாயில்கள் பல திறக்கப்பட்டுள்ளன. பல வகை ஊடகங்கள் அதிகரித்துள்ளன. இருந்த போதும் எமது மக்களின் குறிப்பாக மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் வீழ்ச்சி கண்டு வருகின்றமை கவலைக்குரியது.

வாசிப்புப் பற்றிய உணர்வுத் தொற்றுகையை ஏற்படுத்துவதற்கு நூலக வார விழாக்கள் உதவியளிக்கின்றன.பிரதேசந் தோறும், பாடசாலைகள் தோறும் வாசிப்பை ஊக்குவிக்கும் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும் என்று தெரிவித்தார் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் நூலக வார விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று அச்சு ஊடகங்கள் பெருகிவிட்டன. இணைய வழியில் வாசிப்பதற்கும் பல தளங்கள் உள்ளன. இந்த நிலையில் வாசிப்புப் பற்றிய ஆர்வம் மாணவரிடையே போதியளவில் காணப்படவில்லை. பரீட்சையை மையப்படுத்திய கல்வி முறையே இன்றும் காணப்படுகின்றது. அது சார்ந்தே பெரும்பாலானவர்கள் செயற்பட்டு வருகின்றமையால் பாடசாலைகளை விடத் தனியார் கல்வி நிறுவனங்கள் செல்வாக்குப் பெற்று விட்டன. பாடசாலை, தனியார் கல்வி நிலையம் என மாணவர்களின் பொழுது சென்று விடுவதால் மாணவர்களின் சுயாதீனமான வாசிப்புக்குப் போதிய அவகாசம் கிடைப்பதில்லை.

படைப்பிலக்கியத்தில் நாவலைப் படைப்பதற்கு எங்கள் எழுத்தாளர்கள் பின்னடிக்கின்றார்கள். வாசகர்களின் ஆர்வமின்மையே இதற்கான பிரதான காரணமாகும். எமது பிரதேசங்களில் உள்ள புடைவைக் கடைகள், சாப்பாட்டுக் கடைகளில் இடம்பெறுகின்ற விற்பனையோடு ஒப்பிடுகின்ற போது புத்தக விற்பனை மந்த மாகவே அமைந்திருக்கிறது.

வாசிப்பு ஒரு நல்ல பொழுது போக்கு என்ற பிரக்ஞை ஏற்படுத்தப்பட வேண்டும். இன்று பெரும்பாலானவர்களின் வாசிப்புப் பழக்கம் பத்திரிகை வாசிப்பதுடன் மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றது. இதனை மாற்றியமைப்பதற்கான உபாயங்கள் வகுக்கப்பட வேண்டும் என்றார்.

நிகழ்வில் கல்லூரி அதிபர் வேணுகா சண்முகரத்தினம் வாழ்த்துரை வழங்கினார். உடுவில் பொதுநூலக நூலகர் திருமதி இ.கருணாநிதி, நூலகப் பொறுப்பாசிரியர் காஞ்சனமாலா உதயகுமார் ஆகியோரும் உரையாற்றினர். நூலக வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது. (ம-38)

## முல்லை வலய நியமனங்கள்

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் அதிபர்கள் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுதந்திரபுரம் அ.த. க.பாடசாலைக்கு எஸ்.யோகேஸ்வரனும் மந்துவில் அரசரத்திணம் வித்தியாலயத்துக்கு சி.செல்வநாயகமும் முள்ளி வாய்க்கால் கிழக்கு அ.த.க.பாடாலைக்கு கே.சுப்பிரமணியமும், தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு செ.யோகதாஸும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வற்றாப்பளை ம.விக்கு செ.யோகேஸ்வரனும் உடையார்கட்டு ம.விக்கு எம்.மகேந்திரனும் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிபிடத்தக்கது. (ம-433)

## போட்டி முடிவுகள்

வரணி, நவ.8

தென்னிந்திய திருச்சபையினரால் நடத்தப்பட்ட வரணி பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றி வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:

**ஓட்டம் (4 வயது) ஆண்கள்**- இ.பாருஸன், ஜெ.சாரங்கன், ர.பிரவிக்.

**பெண்கள்** - வ.கஜானா, யோ.கஜேந்தினி, லி.லிதுஜா.

**ஓட்டம்- ஆண்கள்**- ர.ஷாருஸன், ப.பிரதீஸ், உ.செழியன்.

**சமநிலை ஓட்டம் ஆண்** -ர.ஷாருஸன், ப.பிரதிஸ், நி.பிரசன்னா.

**பெண்**- யோ.கஜேந்தினி, லி.லிதுசா, ஜெ.ரம்மியா.

**வண்ணத்துப் பூச்சி ஓட்டம்**-ஜெ.கஜீவன், ச.சஜீவன், வி.சஞ்சிகன்.

**சமநிலை ஓட்டம் பெண்**- ந.கஜிதா, து.சபிதா, சி.மிதுனா.

**பலூன் உடைத்தல்**- ஜெ.சாரங்கன், இ.பாருஸன், சி.மிதுஸ்னா.

**பூக்கோர்த்தல்**-சி.மிதுஸ்னா, ச.சஜீவன், த.ஷாகித்தியா.

**வாத்துநடை (4 வயது) ஆண்கள்**-இ.பாருசன், ஜெ.சாரங்கன், ர.பிரவிந்.

**நண்டுநடை ஆண்கள்** - உ.செழியன், ர.ஷாருஸன், ப.பிரதீஸ்.

**முயல் பாய்ச்சல் (4 வயது) பெண்கள்** - சி.மிதுஸ்னா, தி.சாகித்யா, ஜெ.வளர்நிலா.

**கொடிநாட்டுதல்**- சி.மிதுஸ்னா, இ.பாருசன், து.சபிதா.

**தடை தாண்டுதல்** -ஜெ.வளர்நிலா, இ.பாருஸன், ர.பிரவிந்.

**நிறம் தெரிதல்** -சி.மிதுஸ்னா, தி.ஷாகித்யா, து.சபிதா.

**சிரட்டை நடை ஆண்கள்**- ப.பிரதீஸ், உ.செழியன், சி.ஷாருசன்.

**இருகால் துள்ளல் (3வயது)** - ஜெ.கஜீவன், ந.சஜிதா, வி.சஞ்சிகன்.

**தொடர்பு படுத்தல்**- ர.ஷாருஸன், நி.பிரசன்னா, வ.கஜானா

**எண்கள் எண்ணல்** -ர.ஷாருசன், ப.பிரதீஸ், நி.பிரசன்னா.

**கரடி நடை பெண்கள்**- நி.நிவிய, யோ.கஜேந்தினி, வ.கஜானா.

**நீர் நிரப்புதல்** -து.சபிதா, ந.சஜீதா, ஜெ.வளர்நிலா.

**ஏறு வரிசை** -நி.பிசன்னா, ஜெ.ரம்மியா, ஜெ.லாவண்யா.

**நிறம் தீட்டுதல்**- ர.ஷாருஸன், ப.பிரதீஸ், ஜெ.லாவண்யா.

**எழுத்து தெரிதல்**- ர.ஷாருஸன், ப.பிரதீஸ், நி.பிரசன்னா (ம-122)

# தன்னிகரில்லா தமிழ்த் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம்



தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலன்களுக்ககாவும் இறுதி வரை உழைத்த மாபெரும் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 110ஆவது பிறந்ததினம் இன்றாகும்.

இராணியரின் சட்ட ஆலோசகர் (Q.C) கணபதிப்பிள்ளை காங்கேசர் பொன்னம்பலம் 1901 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 08 ஆம் திகதி பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்ற அவர் தனது மேற்படிப்பை கொழும்பு புனித ஜோசப் கல்லூரியில் தொடர்ந்தார். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் விவசாயத்துறைக்கான புலமைப் பரிசிலை 1921 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட ஜீ.ஜீ. கேம்பிறிட்ஜ் நகரின் (Fizwilliam House) இல் இணைந்து கற்று இயற்கை அறிவியல் துறையிலும் சட்டத் துறையிலும் இரண்டாம் வகுப்பின் உயர் தரத்தில் சிறப்புச் சித்தியைப் பெற்றார். 1925 ஆம் ஆண்டு முதுகலைமாணிப் பட்டத்தை கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகம் அவருக்கு வழங்கியது. 1925 ஆம் ஆண்டு லிங்கன்ஸ் இல் சேர்ந்து கொண்ட இவர் 1927 ஆம் ஆண்டு இலங்கை உச்ச நீதிமன்ற வக்கீலாகவும் பின்னர் 1961 ஆம் ஆண்டளவில் சென்னை உயர்நீதிமன்ற வக்கீலாகவும் பணி தொடர்ந்தார்.

தொழில் புரிந்தவர் சட்ட அறிஞராக 1937 ஆம் ஆண்டில் தேசவழமைச் சட்ட ஆணையம் மற்றும் 1959 ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற அனைத்துலக நடுவர் ஆணையம் என்பவற்றில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு தனது சட்டப் புலமையால் உயர் பதவிகளைப் பெற்றார். கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கற்று வந்த காலத்தில் 1922 ஆம் ஆண்டளவில் அதன் இந்திய மஜ்லிஸ்களின் தலைவராக இருந்தார்.

அரசியலில் ஆர்வம் கொண்டு ஜீ.ஜீ யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேர்தல் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து 1934 ஆம் ஆண்டு பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்லும்வரை தமிழ் சமூகத்திற்காகக் குரல் கொடுப்பதற்கு எவரும் இருக்கவில்லை.

காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவும் ஏனையோரும் சேர்ந்து சிங்கள மகாசபையை ஸ்தாபித்த போது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியை ஸ்தாபித்து தமிழருக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்காக நெருக்குதல் கொடுத்தார். சமநிலைப் பிரதிநி தித்துவம் (ஐம்பதுக்கு ஐம்பது) என்பதே அவரது சுலோகமாக இருந்தது.

தமிழ்த்தலைவர்களான சேர்.பொன். இராமநாதன், சேர்.பொன். அருணாசலம் ஆகியோருக்கு பின் அரசியலில் தோன்றிய இடைவெளியை நிரப்பிய தமிழர் தலை வர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆவார். இலங் கையில் தேசியவாதம் என்ற நூலில் காலஞ்சென்ற பேராசிரியரும் அமரர் செல்வநாயகத்தின் மருமகனுமாகிய வில்சன் குறிப்பிட்டுள்ளார்.

1945 ஆம் ஆண்டு சிங்கள வருக்கும் சிறுபான்மையினருக்கும் நாடாளுமன்றத்தில் சமபலம் இருக்க வேண்டுமென்பதே அது. தமிழர்களுக்கு வரப் போகும் இடர்களை முன் கூட்டியே அறிந்தபடியால் அவை வராமல் தடுப்பதற்காக இக் கோட்பாட்டை முன் வைத்தார்.

1922 ஆம் ஆண்டு சேர் வில்லியம் மனிங் அரசியல் சீர்திருத்தத்துக்கு அடித்தளம் இட்டார். இவரின் கருத்து பின்வருமாறு: ''ஒரு பெரும்பான்மையினம் சிறுபான்மை யினம் மீது ஆதிக் கம் செலுத்தக் கூடாது'' என்பதாகும் சேர் வில்லியம் மனிங் அரசியல் சீர்திருத்தத்துக்கு அமையவே ஜீ.ஜீ.பொன்னம்பலம் சமபிரதி நிதித்துவக் கோட்பாட்டை முன் வைத்தார்.

சோல்பரி கமிஷன் சம பிரதி நிதித்துவக் கோட்பாட்டை ஏற்காவிடினும், ஜீ.ஜீ.யின் வாதத்தால் பிரிவு 29 போன்ற சில பாதுகாப்புக்களை சிறுபான்மையினரின் நன்மைகருதி அரசியல் சாசனத்தில் உட்புகுத்த வேண்டுமென சிபாரிசு செய்தது.

மலைநாட்டு தமிழர்களுக்கு அவர்களின் பிரஜா உரிமையைப் பறித்த மசோதாவுக்கு ஆதரவு நல்கி மலைநாட்டுத் தமிழர்களுக்கு அவர் துரோகம் செய்தார் எனச் சிலர் அவரைக் குற்றம் சுமத்தி அவர் மீது சேறு பூச எத்தனிக்கிறார்கள். தற்போதும் எத்தனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மலையக மக்களின் பிரஜாவுரிமையை பறித்த சட்டம் 1948ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த 18 இலக்க இலங்கைப் பிரஜாஉரிமைச் சட்டமாகும். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இதை எதிர்த்தது. ஜீ.ஜீ. பொன்னம்பலம் இந்த பிரேரணைக்கு ஆதரவு அளிக்கவில்லை.

அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான யூரர்கள் இல்லாத (ட்ரயல்-அற்-பார்) நீதிமன்றத்தில் அவர்களுக்காக வாதாடி அந்த நீதிமன்றம் அதனை விசாரிக்க உரித்துடையதல்ல என்ற சட்ட நுட்பத்தை எடுத்துரைத்து அந்த வழக்கைத் தகர்த்தெறிந்தார்.

மிகத் திறமையான குற்றவியல் வழக்கறிஞராகத் திகழ்ந்த இவர் றஞ்சனி டக்ஸி வழக்கில் இங்கிலாந்தில் இருந்து வருகை தந்து சாட்சியமளித்த கைவிரல் அடையாள நிபுணரைக் குறுக்கு விசாரணை செய்ததைத் தொடர்ந்து கைவிரல் அடையாளம் பற்றிய சட்டமே திருத்தியமைக்கப்பட்டது.

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி,**
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்,
முன்னாள் தலைவர்- அகில இலங்கைத்
தமிழ்காங்கிரஸ்.

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலன்களுக்காகவும் தனது இறுதி மூச்சுவரை அரசியல் ரீதியாகப் போராடி 1977 ஆம் ஆண்டு மாசி மாதம் 09 ஆம் நாள் அமரத்துவம் எய்திய வீரத்தமிழனுக்கு நன்றி செலுத்த தமிழ்ச் சமூகம் உண்மையிலேயே கடமைப் பட்டுள்ளது.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



P. நிரஞ்சன்

07.11.2011 திங்கட்கிழமை கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் HNDA பட்டத்தைப் பெற்ற P. நிரஞ்சன் மற்றும் 06.10.2011 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முகாமைத்துவமாணி பட்டத்தைப் பெற்ற ம.தவகோகுலன், கா. சோதிநாதன் ஆகிய எமது நண்பர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.
(7940)
(4-6-7)
V.V.S. நண்பர்கள்

வீடு, காணி விற்பனைக்கு

கணேஸ்வரம் அளவெட்டி, குருக்கண கிணற்றடிப் பிள்ளையார் கோயிலடி அருகில் 22 பரப்பு காணி உட்படச் சகல வசதிகளும் உள்ளடங்கிய வீடு 3 அறைகள், ஒரு பெரிய ஹோல், சமையல் அறை, குளியல் அறை, இரண்டு கழிவு அறை, தண்ணீர் தாங்கி மற்றும் 8 பரப்புக் காணியில் வருமானம் தரக்கூடிய பயிர்கள் (30 தென்னை, 1200 வாழைமரம்) உட்பட முன்பக்கம் இரண்டு கடைகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776621993
0779003155
0771789042

கதிரமலை மணிவண்ணன், கணேஸ்வரம், அளவெட்டி.
(10166) (2-6-7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கிருஸ்ணா கல்வி நிறுவனம்
கொடிகாமம்

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2011
சித்தி பெற்ற எமது நிறுவன மாணவர்கள்



க.சேனுஜா 160 புள்ளிகள்
ப.கனிஸ்த்தா 158 புள்ளிகள்
வி.சகானா 153 புள்ளிகள்
ச.சஜீவன் 152 புள்ளிகள்



க.பிரதீபன் 152 புள்ளிகள்
த.டர்மிளா 151 புள்ளிகள்
பா.கிந்துஜன் 151புள்ளிகள்

இவர்கள் கல்வியில் மேலும் சாதனைகள்படைத்து உயர்வு பெற இறை ஆசி வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

★ மேற்படி நிறுவனத்தில் கல்வி கற்ற 70 வீதமான மாணவர்கள் சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது.
★ 2012 புலமைப்பரிசில் விசேட வகுப்புக்கள் ஆரம்பம் : காலம் 09.11.2011 புதன் பி.ப 4 மணி

ஆசிரியர் : திரு.யோ.லிங்கேஸ்வரன்
[புலமை விசேட வகுப்பு]
திரு. க.கமலதாசன் (ஆங்கிலம்)
திரு. செ.திருவிந்தன் (சிங்களம்)

மேலதிக விவரங்களுக்கு நிர்வாகத்துடன் தொடர்பு கொள்க.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (07.11.2011) திங்கட்கிழமை கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 8 ஆவது பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம் பெறும்

செல்வன் நடராசா தவரூபன்

அவர்களை மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர்நிலை அடைய விஸ்வலிங்க விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
மாமா, மாமி, மைத்துனர்
உடையார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(10168)(1,6,7)

**விற்பனைக்கு**

EPUM xxxx தொடரிலக்கமுடைய Hero Honda Hunk மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776652655

**சேவை**

UK, Singapore, Germany போன்ற நாடுகளுக்கான கற்கையுடன் கூடிய வேலை வாய்ப்பு. தொடர்பு: 0779692434

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முன்பாக சண்டிலிப்பாய். Tel: 0776751649

**பணிப் பெண் தேவை**

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம் ரூபா 10,000.
தொடர்பு: 0771965666 (10167) (2-6-7)

**நாய் விற்பனைக்கு**

7 மாதம் நிரம்பிய அல்ஷேஷன் (ஜேர்மன் செப்பேட்) ஆண் நாய் விற்பனைக்குண்டு
தொடர்பு: 0776203797
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. (10285) (2-6-7)

**உடனடி வேலைவாய்ப்பு**

சர்வதேச GDM முகாமைத்துவ நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கான வேலைவாய்ப்பு.
Team Leader - 07
Supervisor - 04
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
[விசேட சலுகைகளும் தனியே வழங்கப்படும்]
தொடர்பு : 0777968485,0728012111
[ஆரியகுளம் சந்திக்கருகில்]

## கொழும்பு மேயரின் குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்தது எதிர்க்கட்சி

கொழும்பு மாநகர சபைக் கட்டடத்தின் அறையொன்றை எதிர்க்கட்சியினர் பலவந்தமாக திறந்ததுடன் சாவியையும் எடுத்துச் சென்றனர் என்று கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் சுமத்திய குற்றச்சாட்டை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மறுத்துள்ளனர்.

கொழும்பு மாநகரசபை எதிர்க் கட்சி பேச்சாளர் ரிஸா ஸாரூக் இது தொடர்பாக செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார். அதன்போது அவர் தெரிவித்ததாவது: எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மாநகர சபையின் எந்தச் சாவியையும் கொண்டு செல்லவில்லை. அத்துடன் மாநகர சபை எதிர்க் கட்சித் தலைவரின் அறைக்குள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எந்த வேளையிலும் செல்லமுடியும் – என்றார்

**தவறிவிட்டது**

மலையாளபுரத்துக்கும் இரணைமடுச் சந்திக்கும் இடையில் 06.11.2011 பி.ப. 3-4 மணி அளவில் ஒரு சிறு கைப்பையொன்று தவறிவிட்டது. அதற்குள் 12 ½ பவுண் பெறு மதியான தங்க நகைகள், 3500 ரூபா பணம், தே.அடையாள அட்டை, கைத்தொலைபேசி, இரண்டு சாச்சர் என்பன உள்ளன. கண்டெடுத் தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
ஜெகதீஸ்வரன்.
தொடர்பு: 0775283494. (14007) (2-6-7)

## கைதடி சிறுவர் இல்லக் குழந்தைகளுக்கு பரிசில்கள்

சாவகச்சேரி ,நவ.8

இலங்கை இராணுவத்தின் 07 ஆவது விஜயபாகு படையணியின் முதலாவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் முகாமிட்டுள்ள 07 ஆவது விஜயபாகு படையணியின் சாவகச்சேரி கைதடியில் உள்ள அரச சிறுவர் இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு உணவையும் பரிசில் பொருள்களையும் வழங்கியுள்ளனர். இந்த நிகழ்வில் 07 ஆவது விஜயபாகு படையணியின் கட்டளை அதிகாரி லெப் கேணல் டிலுப பண்டார பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு பால்மா வகைகள், பிஸ்கற் வகைகள், பற்பசைகள் , பற்தூரிகைகள் உள்ளிட்ட பொருள்களை அரச சிறுவர் இல்ல சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி வாசுகி சுபாகரனிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் கப்டன்களான ஜி.கே.ஜி. சமரடிவாக, டபிள்யூ. ஐ. டி. தாரங்க, லெப்டினன்களான ஜீ. எஸ். சந்திர சேகரா, டபிள்யூ.எம்.ஏ.திஸ்ஸ குமார, ஆர். எஸ். கே. ராஜபக்ஷ உட்படப் பலர் கலந்து கொண்டனர்(ம-131)

**அறிவித்தல்**

ஐயப்பன் புனிதமாலை அணிந்து விரதம் இருப்பவர்கள் எமது இல்லத்தில் பெயரைப் பதிந்து கொள்ளவும்.

உரும்பிராய் சிவதர்மசாஸ்தா ஆலயத்தில் 17.11.2011 தொடக்கம் 15.12.2012 வரை மாலை 4 மணிக்கு அபிஷேகம், பூசை, பஜனை, படிப்பூசை இடையில் 10 நாள்கள் உற்சவம் நடைபெறும். சபரி யாத்திரை செய்ய முடியாதவர்களுக்கு யாழ். கட்டுவன் ஐயப்பன் ஆலயத்துக்கு இரு முடிகட்டி 18 படி ஏறி தரிசனம் காட்சிதர வசதி செய்து தரப்படும்.

ஆதீனம்
குருசுவாமி
தா.வாசுதேவசிவாச்சாரியார்
உப்புமடச் சந்தி, கோண்டாவில் மேற்கு.
(10170)(1,6,7)

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி
ஸ்ரீதேவி சண்முகநாதன்
அவர்களின் பாசமிகு மாமி
அமரர் புண்ணியமூர்த்தி
சேதுப்பிள்ளை
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
யா/நாயன்மார்க்கட்டு,
மகேஸ்வரி வித்தியாலயம்.
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
(10169) (4-6-7)

# பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் -2012

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 01.01.2012 தொடக்கம் 31.12.2012 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 14.11.2011 - 28.11.2011 பி.ப.02.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 29.11.2011 பி.ப. 01.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 30.11.2011 பி.ப. 02.00 மணி

நிபந்தனைகள்:

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்துக்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 29.11.2011 ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் தமது தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திரம் ஏதாவது ஒன்றுடன் வருதல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
04. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கையை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்குப் பூரண அதிகாரமுண்டு.
05. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
06. கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் மேற்குறித்த காலத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 09.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினையும் செய்து கொள்ள வேண்டும்.

மேலதிக விவரங்களினை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## குத்தகை கேள்வி அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | புலோப்பளை உப அலுவலகம் | | | |
| 01. | ஆட்டிறைச்சிக் கடை | 25000.00 | 1500.00 | 500.00 |
| 02. | மாட்டிறைச்சிக் கடை | 500000.00 | 3000.00 | 500.00 |
| 03. | கோழியிறைச்சிக்கடை | 100000.00 | 1500.00 | 500.00 |
| 04. | பொதுச் சந்தை (மரக்கறிச் சந்தை, மீன்சந்தை, துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட) | 600000.00 | 3000.00 | 500.00 |
| | முள்ளிப்பற்று உப அலுவலகம் (இயக்கச்சி) | | | |
| 01. | ஆட்டிறைச்சிக் கடை | 20000.00 | 1500.00 | 500.00 |
| 02. | மாட்டிறைச்சிக் கடை | 150000.00 | 2000.00 | 500.00 |
| 03. | பொதுச்சந்தை இயக்கச்சி (மரக்கறிச் சந்தை மீன்சந்தை உட்பட) | 50000.00 | 1500.00 | 500.00 |

F.D.அன்ரன்
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை,
பளை.
(4-6-7) (சி/5668)

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**

உறவோடு:
18.08.1940

இறையோடு:
24.10.2007



அமரர் கந்தையா
குணரத்தினம்

தினம் வந்து மனம் தழுவும் தந்தையே
தனம் தந்து கனம் ஈர்ந்த எந்தையே
அரன் தாள் நீர் ஏகிய இத்தினமே
ஆண்டுகள் நான்கும் ஈரமாய்க் கழிந்ததே
ஐயனே நின் ஆத்ம ஈடேற்றமே
மெய்யேனக் கொண்டு நாளும் தொழுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திதி:
08.11.2011
குடும்பத்தினர்
687/28, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.
(10203)(1,6.7)

**முதலாவது ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்: 1943.02.16
மறைவு: 2010.10.21
திதி: திரயோதசி
08.11.2011



அமரர் கலாவல்லி
கனகரத்தினம்

அன்னையே!
ஆண்டொன்று சென்றிடினும்
அகலாத நினைவுகளுடன் –
உம்
ஆத்ம சாந்திக்காக

நிரந்தர முகவரி:
நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.
தற்காலிக முகவரி:
பிள்ளையார் கோயிலடி,
தாவடி கிழக்கு, கொக்குவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(10208)(1,3,7)

# வறிய மக்களின் சுயதொழில்களுக்கு கடன் வழங்கி ஊக்குவிக்கும் புலோலி காந்தியூர் சனசமூக நிலையம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

1994 ஆம் ஆண்டுக்குப் பின் காந்தியூர் சனசமூக நிலையமானது ஒருவசதி படைத்த உயர்ந்த நிலைக்கு வருவதற்கு பல நிகழ்வுகள் காத்திருந்தன. இதன்படி வெளிநாட்டில் வசித்துவந்த இந்தக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களிடம் நிதி சேகரித்து நிலையத்தின் முதலீடு அதிகரிக்கப்பட்டது.

கடந்த 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி இந்தக் கிராமத்தின் பிதாவான அமரர் சோதிமாஸ்டர் சனசமூக நிலையத்துக்கும், பாலர் பாடசாலைக்கும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்துக்கும் ஒரு தொகைப் பணத்தை வங்கி ஒன்றில் நிலையான வைப்பிலிட்டார். இந்த முதலீடு இப்படியே இருக்க இதன் வட்டி மாத்திரம் கோயில், பாலர் பாடசாலை, சனசமூக நிலையம் ஆகியவற்றின் தேவைகளுக்கு எடுக்கப்பட்டு வருகின்றது. இவர் வழங்கிய முதலீடு பத்திரமாகப் பேணப்பட்டு வருகின்றது.

இந்த வேளையில் காந்தியூர் கிராமம் சனசமூக நிலையத்தின் நிறுவுநர் 1995 ஆம் ஆண்டு காலமானார். இந்தக் கிராமத்தினதும், சனசமூக நிலை யத்தினதும் தோற்றத்துக்கு, தனது வயதையும், குறைந்த வயதையும் கொண்ட ஆண் மக்களை ஒன்று திரட்டி உழைத்து அவற்றை வளர்ச்சிப் பாதையில் வீறு நடைபோட்டு வேகமாக வளர்ந்து செல்ல காத்திட்ட அப்பெருமகனின் மறைவால் கிராமம் பெரும் சோகத்தில் ஆழ்ந்தது. அன்னாரின் நினைவாக அன்றைய காலத்தில் அஞ்சலிக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. அன்னார் மறைந்து 16 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும்



அன்னார் சனசமூக நிலையம், கோயில், பாலர்பாடசாலைகளுக்கு வழங்கிய மூலதனம் இன்னமும் இருந்து கொண்டே உள்ளது அவரது கிராமப்பற்றுக் கொண்ட அர்ப்பணிப்பான சேவை எக்காலமும் துலங்கும் என்பதில் ஐயமில்லை. புதிய தலை முறையான வருங்காலச் சந்ததியும் இவரது வரலாற்றை உணர்ந்து கொள்ளும்.

இந்த நிலையில் 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி 50 ஆவது ஆண்டு நிறைவான பொன்விழாவை வெகு சிறப்பாகக்கொண்டாடியது. பொன் விழாவை ஒட்டி விளையாட்டுப்போட்டி, வீரதீரச் செயல்கள், மாணவர்களிடையே போட்டிகள், பரிசளிப்புவிழா, நாடகங்கள் உள்ளிட்ட கலை, காலாசார விழாவு டன் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொன் விழா கொண்டாட்டத்துக்கான செலவுகளுக்கென நிலையத்தின் இளையதலைமுறை அங்கத்தவரான சுவிஸ் நாட்டில் வாழும் சி. தங்கவடிவேல் 80 ஆயிரம் ரூபாவைச் சேகரித்து அனுப்பியிருந்தார். அவரது நிதி உதவி மூலம் பொன்விழா சிறப்படைந்தது.

மேற்படி சனசமூக நிலையத்தை இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 1948 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த சந்ததி ஒன்று தோற்றுவித்து நிர்வாகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்கையில் 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிர்வா கத்தைப் பொறுப்பேற்ற இளைய தலைமுறை யான இரண்டாவது சந்ததி நெற்றி வியர்வை சிந்த தமது நேர காலங்களையும் பராது சனசமூக நிலையத்தின் தேவைக்காக பல்வேறு வழிகளில் நிதிகளை உள்ளூ ரில் திரட்டி பன்முகப்பணிகளை மேற் கொண்டார்கள். இவர்களில் பொ.மோகன், வே. செல்வரத்தினம், ப. ஸ்ரீபதிராஜா, க. தங்கராசா, ப.ஸ்ரீலோகராஜா, செ. செல்வராசா, இ.லோகேஸ்வரன் க. பாக்கியநாதன், ப.ஸ்ரீவிக்கினேஸ்வர ராஜா,சி.தங்கவடிவேல் இ.லோகேஸ்வரன், சி. வசந்தன், கே. தவராசா, சி. குகபாலன, ச. ஸ்ரீஸ்கந்தராசா, வே. அருட் செல்லம், க. சிவராஜ் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்தக் காலப் பகுதியில் சனசமூக நிலையத்துக்கு முதலீடாகச் சேர்த்து வைக்கப்பட்ட மூலதனத்தில் ஒருபகுதி கிராமத்தைச் சேர்ந்த வறிய மக்களின் சுயதொழில் உதவிகளாக மாதாந்த வட்டி அடிப்படையில் சுழற்சி முறையில் கடனாக வழங்கப் பட்டு வந்தது. இந்தக் கடன்களைப் பெற்ற வறிய குடும்பங்கள் புகையிலை, வெங்காயப் பயிர்களை பயிரிட மூலதனமாகப் பயன்படுத்தி உழைப்பால் உயர்ந்தனர். இத்தகைய பணி சனசமூக நிலையத்தின் பணிகளில் சிறந்த தொரு பணி என்பதை இந்தக் கடன் களைப் பெற்றோர் மாத்திரமன்றி, கிராம மக்களும் உணர்ந்து கொண்டனர்.

**கர்ணன்**

இந்தக் கிராம மக்களின் குடிதண்ணீர்த் தேவைக்கென 1948 ஆம் ஆண்டுக்கு முன்னர் அப்போதைய கிராம சபையால் வெட்டப்பட்டிருந்த பொதுக்கிணறு பழுதடைந்திருந்தது. இந்தக் கிணற்றைப் புனரமைக்க அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்துடன் சனசமூக நிலையம் தொடர்பு கொண்டதையடுத்து, இந்தக் கிணற்றை மக்கள் பங்களிப்புடன் புனரமைப்புச் செய்ய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரக நிதி உதவி வழங்க முன்வந்தது.

(தொடரும்)




10 ஆம் ஆண்டு

நினைவஞ்சலி



குரும்பசிட்டி
அமரர் சண்முகராஜா
சிறீஸ்கந்தராஜா
(போட்டோ சிறி)
திதி: திரயோதசி (08.11.2011)

தோற்றம்: 28.03.1951
மறைவு: 29.10.2001

பத்தாண்டு முடிந்த பின்னும்
பாரம் குறையவில்லை
படர்ந்து விட்ட நினைவுகளின்
ஈரம் மாறவில்லை
பல வீடுகளில் படமாக வாழும்
போட்டோ சிறியே
பலமாக இன்றைக்கும்
வழி நடத்தும் துணை நீரே
உடல் உருவமில்லை
உயிர் கலந்தீர் உறவாய்
படம் போல நெஞ்சில்
பதிந்து விட்டீர் நினைவாய்
கடந்தாலும் காலங்கள்
உங்கள் துணை கொண்டு
தடந் தோறும் பெருமை
பெற ஆசி வேண்டித் தொழுவோம்.

மனைவி,
பிள்ளைகள்.
போட்டோசிறி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(10142) (8-5-7)

# இயற்கைப் பசளை என்ற பெயரில் பிண்ணாக்கு விற்றுவந்த பலே பேர்வழி

கொழும்பு, நவ. 8

செடிகளைச் சேதப்படுத்தும் புழுக் களை அழிக்கக்கூடிய நாசினி எனக் கூறி ஏமாற்றி பிண்ணாக்கை விற்று வந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள் ளார் என்று பொரலஸ்கமுவ பொலி ஸார் தெரிவித்தனர்.

இவர், பிண்ணாக்கை உருண்டைக ளாக்கி பைக்கற்றுகளில் அடைத்து வர்த்தகப் பெயரொன்றையும் அச்சிட்டு, வான் மூலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வியாபாரம் செய்து வந்துள்ளார். பைக்கற் ஒன்று 225 ரூபாவுக்கு விற்பனை செய்யப் பட்டுள்ளது.

இவரைக் கைதுசெய்யும்போது வானி லிருந்து 686 'பசளை'ப் பைக்கற்றுக ளும் மூன்று சாக்குப் பிண்ணாக்கும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தப் பசளைப் பைக்கற்றுகளில் பொறிக்கப்பட்டிருந்த நிறுவன முகவ ரிக்கு பொலிஸார் சென்றபோது அந்த இடத்தில் சைக்கிள்களைப் பழுதுபார்க் கும் கடையொன்றே இருந்துள்ளது. எனினும், சைக்கிள் கடைக்காரருக்கும் கைதுசெய்யப்பட்டவருக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லையெனத் தெரிய வந்துள்ளது. பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




மானிப்பாய் பொலிஸார் கடந்த சனிக்கிழமை சுதுமலை வித்தியாசாலையில் நடத்திய நடமாடும் சேவையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்காந்த் கோடி "சூழலை பாதுகாப்பது அரசாங்கமா, பொது மக்களா" என்ற விவாத போட்டியில் வெற்றிபெற்ற மாணவனுக்கு சான்றிதழ் வழங்குகிறார். (ச-100)

# விவசாயிகளின் அடிப்படை ஓய்வூதியம் 1,000 ரூபா நிறுத்தப்பட்டது பாரபட்சமானது

## நிலுவையுடன் வழங்காவிடில் போராட்டம் வெடிக்கும்

யாழ்ப்பாணம், நவ.8

மீனவர்களுக்கு அடிப்படை ஓய்வூதி யமாக 10 ஆயிரம் ரூபா வழங்க நட வடிக்கை மந்திரிசபையில் எடுக்கப்பட் டுள்ளது. இதேவேளை ஏழை விவசாயி களுக்கு வழங்கப்பட்ட 1000 ரூபா அடிப் படை ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்ட தேசவள விவ சாயிகள் சம்மேளத் தலைவர் சி. பொ. வ.மா.க.முதலியார் கடந்த சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு நாம் பயிரிடுவோம் தேசத்தைக் காப் போம், மனைப்பொருளியல் விவசாய மேம்பாடு, காணி அபிவிருத்தி ஊடாக விவசாய அபிவிருத்தி எனப் பல தொனி களில் கருத்து வெளியிட்டு அபிவிருத் திகளை முன்னெடுக்கின்றார்.

ஆனால் விவசாயிகளின் அடிப்படை ஓய்வூதியம் 1000 ரூபா நாடளாவிய ரீதி யில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என் பது ஆபத்தமானது.

ஒவ்வொரு விவசாயியும் இந்தத் திட்டத்தில் இலவசமாகச் சேரவில்லை. பெருமளவிலான ஆரம்ப நிதியை முழு மையாகவும் பகுதியாகவும் பாடுபட்டு கழகத்துக்குக் கொடுத்த பின்னரே 60 வயதில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

எனவே எக்காரணம் கொண்டும் இந்த விவசாய ஓய்வூதியத்தை அரசு நிறுத்த முடியாது. உடன் நிலுவையுடன் வழங்க முன் வரவேண்டும்.

இல்லாவிடில் நாட்டில் 25 மாவட்டங் களில் உள்ள விவசாய ஓய்வூதியர்களை இணைத்து நாடுதழுவிய போராட்டம் நடத்தும் நிலை ஏற்படும்.

எனவே அரசும், விவசாய அமைச்சும் இதனுடன் சம்பந்தப்பட்ட திணைக் களங்களும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (ச-302)

# பதவி உயர்த்தப்பட்ட பொலிஸார் மீண்டும் முன்னைய தரங்களுக்கு

கொழும்பு, நவ.8

முன்னாள் பொலிஸ் அதிபரான மஹிந்த பாலசூரியவினால் பொலிஸ் இன்ஸ்பெக்ரர்கள், உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர்கள் மற்றும் சார்ஜன்ட் தரங்களுக்குப் பதவி உயர்வு வழங் கப்பட்டுள்ள 170 பேரை மீளவும் அவர் கள் முன்னர் வகித்த பதவி நிலை களுக்கே கீழிறக்கி விடுவதற்கு நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவ தாக பொலிஸ் தலைமையகத்தின் தக வல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதால் அவ் வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப டாதிருப்பதற்கான காரணிகளைத் தெரி வித்து மேன்முறையீடுகளை முன்வைக் குமாறும் சம்பந்தப்பட்ட 170 பேருக்கும் பொலிஸ் தலைமையகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதங்களில் குறிப் பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது. மேலும் முறைகேடான நடத் தைகள் பற்றித் தெரியவந்தால் எதிர் காலத்தில் தங்களது பதவி உயர்வுக ளைக் கீழிறக்கிவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்தக் கடிதங்களில் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைப்பாடு தொடர்பாக சம் பந்தப்பட்டோர்சார்பில் கருத்து வழங்கி யுள்ள சிலர் தமக்கு எதிரான ஒழுக்கக் கேடான எந்தவொரு குற்றச்சாட்டுக்க ளும் இல்லாத நிலையிலேயே 2168/ 2009 சுற்று நிருபத்துக்கு அமைய முன் னாள் பொலிஸ் மா அதிபரால் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டது என்று தெரி வித்துள்ளனர். (ச-22)

# கணித முகாம்

தென்மராட்சி, நவ.8

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 4 பாடசாலைகளில் தரம் 10 இல் கற்கும் மாணவர்களுக்கு வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினர் மாதிரி செயற் பாட்டுடனான கணித முகாமை நடத் தவுள்ளனர். இந்த முகாம் நாளை புதன் கிழமை கச்சாய் அ. த. க. பாடசாலை யில் நடத்தப்பட வுள்ளது. அல்லாரை அ. த. க.பாடசாலை, விடத்தற்பளை கம லாசனி வித்தியா லயம், உசன் இராம நாதன் ம.வி, கச் சாய் அ.த.க. பாட சாலை ஆகியவற் றின் 109 மாணவர் களுக்கு இந்த கணித முகாம் நடத்தப்பட வுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. (ச-207)

# சிறுவனைக் கடத்தியோரில் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, நவ.7

கல்கிஸை டெம்பிள் வீதியில் 50 லட்சம் ரூபா கப்பம்கோரிச் செல்வந்தர் ஒருவரின் 15 வயது மகனைக் கடத்திச் சென்ற கோஷ்டியைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தில் கல்கிஸை பொலிஸ் குற் றத்தடுப்புப் பிரிவினர் கடந்த வியாழக் கிழமை ஒருவரைக் கைதுசெய்ததுடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வானையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்தக் கடத்தல் சம்பவத்தில் கப்பக் காரர்கள் பணத்தை 3 லட்சமாகக் குறைத் ததையடுத்து சிறுவனின் தந்தை புளத் கொஹுப்பிட்டியில் வைத்துப் பணத்தைக் கொடுத்துவிட்டு மகனை மீட்டு வந்தி ருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ச)

**வீடு விற்பனைக்கு**

யாழ். இராசாவின் தோட்ட வீதியில் ரைல்ஸ் பதிக்கப்பட்ட புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 021 7902989
077 2720119

**பட்டதாரி நியமன ஒத்துமாறல் (P.A.Finance)**

பட்டதாரி நியமனம் பெற்று யாழ்ப்பா ணத்தில் இருந்து வவுனியாவுக்கு செல்ல விரும்புவோர் 0750378013 என்னும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்வி வலயத்தின் வணிக ஆசிரியர் நவீந்திரன் அவர்களின் பாசமிகு தந்தை

**நம்பையா தர்மலிங்கம்**

அவர்கள் கடந்த 02.11.2011 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வணிகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்,
வணிக ஆசிரியர்கள், யாழ்.வலயம்.
யாழ்ப்பாணம். (10165)(1,6,7)

**கண்ணீர் அஞ்சலி**

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் போதனாசிரியர் மற்றும் பொறியியல்துறைத் தலைவராகக் கடமையாற்றும் திரு.பு.சண்முகதாசன் அவர்களது அன்புத் தாயார்

**திருமதி புண்ணியமூர்த்தி சேதுப்பிள்ளை**

அவர்களின் மரணச் செய்தி கேட்டுத் துயரடைகின்றோம். அத்தோடு அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி ஊழியர் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம்.

(சி/5662) (2-6-7)

**நெஞ்சத்தில் நீங்கா நினைவுகள்**

முதலாம் ஆண்டு — 3ஆம் ஆண்டு



அன்னை மடியில் 20.06.1937
அம்பாள் அடியில் 20.10.2010

**சோமசுந்தரம் பத்மநாதன்**
ஐப்பசி சுக்கில பட்ச திரயோதசி



அன்னை மடியில் 02.01.1939
அம்பாள் அடியில் 15.11.2008

**பத்மநாதன் சந்திராவதி**
கார்த்திகை அபரபக்க திருதியை

அன்பால் அனைவரையும் அணைத்து வாழ்ந்த
எங்கள் அன்பு நெஞ்சங்களே
ஆண்டு பல போனாலும் நீங்காது
எம் நெஞ்சில் உம் நினைவு

'சந்திர பத்மம்'
சிறுனி, சண்டிலிப்பாய். [10050] [3, 6,7]
குடும்பத்தினர்.

**மூன்றாம் ஆண்டு நினைவலைகள்**



**அமரர் கந்தையா மகாலிங்கம்** (கோறா)

திதி: திரயோதசி

பெயருக் கிசைந்த பெரும்
புகழ் படைத்தாய்
துயரக் கடலில் அமிழ்ந்தவும்
வைத்தாய்
அனலில் விழுந்த புழுப்போல்
துடிக்கின்றோம்
கனலுங் கருணை காட்டுமோ
அப்பா!

தோற்றம்: 14.02.1951
மறைவு: 13.11.2008

மூணாமலை லேன்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (1-6-7)
மனைவி, பிள்ளை, மருமகன்.
(10144)

### நொய்யலாற்றில் வெள்ளப்பெருக்கு

# குடிசைகள் நீரில் மூழ்கின 20 பேரைக் காணவில்லை



திருப்பூர், நவ.8

திருப்பூரில் இதுவரை இல்லாத அளவுக்கு நொய்யலாற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. இதில் 100 இற்கும் மேற்பட்ட குடிசை வீடுகள் தண்ணீரில் மூழ்கின. பல வீடுகள் தண்ணீரில் இழுத்துச் செல்லப்பட்டன. வெள்ள நீரில் சிக்கிய 20 பேரைக் காணவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழகம் முழுவதும் கடந்த ஒரு வார காலமாக பருவமழை பெய்து வருகிறது. இதில் தமிழகம் முழுவதும் 30 இற்கும் மேற்பட்டோர் பலியாயினர். சென்னையில் வடிகால் நிரம்பி பல்வேறு வீதி முழுவதும் தண்ணீர் குளம் போல தேங்கி நிற்கிறது. நெல்லை, குமரி, தூத்துக்குடி, கோவை, திருப்பூர், நீலகிரி, விழுப்புரம், தஞ்சாவூர், தேனி , மதுரை உள்ளிட்ட பகுதிகளில் தொடர் மழை காரணமாக அங்குள்ள அணைகள் நிரம்பி வருகிறது.

இந்தநிலையில் திருப்பூரில் நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் பலத்த மழை விடிய, விடிய பெய்தது.

கோவையில் பெய்த மழை மற்றும் மற்றும் அருகில் உள்ள குளங்கள் உடைந்ததாலும், நொய்யல் ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் வெள்ளம் கரை புரண்டு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

ஜம்மனை பள்ளம், கே.வி. ஆர்.நகர், சத்யா நகர், தாராபுரம், சங்கிலிப் பள்ளம் ரோடு, டைமண்ட் தியேட் டர் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள நீர் புகுந்தது.

இதில் இரவு நேரத்தில் தூங்கிக் கொண் டிருந்த இந்தப் பகுதி மக்கள் தங்கள் உடைமைகளை விட்டு, விட்டு வெளியேறி மாற்று இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

முத்தையாநகர் பகுதியில் 150 பேரை இந்து முன்னணியினர் மீட்டு வேறு இடத்துக்குக் கொண்டு வந்தனர்.

இரவு நேரத்தில் குடிசைகள் தண்ணீரில் சென் றதில் 10 பேர் வெள்ளத்தில் இழுத்து செல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. ஒரு பெண் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குன்னங்கால் பாளையம், கடல்பாளையம் என்ற இரு குட்டை களும் நிரம்பி உடைப்பு ஏற்பட்டது . இந்த நீரும் நொய்யல் ஆற்றில் சென்றதால் வெள்ளப்பெருக்கு அதிகரித்தது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# தேசியக் கொடியை அவமதிப்பு ஹசாரே குழுவினர் மீது வழக்கு



டில்லி, நவ.8

தேசியக் கொடியை அவமதித்து விட்டதாக அன்னா ஹஸாரே மற்றும் அவரது குழுவினர் மீது டில்லி சட்டத்தரணி ஒருவர் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இதுதொடர்பாக ரவீந்தர் குமார் என்ற அந்த சட்டத்தரணி டில்லி பெருநகர மஜிஸ்திரேட்டு நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கில்:

கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த உண்ணாவிரத போராட்டத்துக்காக திகார் சிறையில் இருந்து ராம்லீலா மைதானத்துக்கு அன்னா ஹஸாரே, கிரண்பெடி, கெஜ்ரிவால் உள்ளிட்டோர் சென்றனர். அவர்கள் சென்ற வாகனம் முழுவதும் தேசிய கொடியால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அரசியல் சட்டப்படி தேசியக் கொடியை வாகனங் களில் கட்டிக் கொண்டு மட்டுமே செல்லலாம். இது தவிர, உண்ணாவிரதம் நடந்த இடத்தில் தேசிய கொடி கிழிக்கப்பட்டு இருந்தது. பலர், அதன் மீது அமர்ந்தனர்.

வியர் வையைத் துடைத்தனர். எனவே, அன்னா ஹஸாரே உள்ளிட் டோர் மீது தேசியக் கொடி அவமதிப்பு வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக விளக்கம் தர உத்தரவிட்டு டில்லி காவல்துறை, மாநில அரசு ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப மஜிஸ்திரேட் உத்தரவிட்டார். வழக்கு விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (வ)

# 2 ஆம் இடத்துக்கு பின் தள்ளப்பட்ட சன் ரி.வி. நிறுவன அலைவரிசை

சென்னை, நவ.8

சன் தொலைக்கட்சி குழும வரலாற்றிலேயே முதல் முறையாக அந்த நிறுவனத்தின் அலைவரிசை ஒன்று, 2ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

தூர்தர்ஷன் மட்டுமே இருந்து வந்த காலத்தில் மக்கள் விடிவு தேடி அலைந்தபோது விடிவெள்ளியாக வந்தது சன் தொலைக்காட்சி. சன் தொலைக்காட்சியின் புதுமையான மற்றும் புதுப்பொலிவுடன் கூடிய, வித்தியாசமான நிகழ்ச்சிகள் மக்கள் மனதை சட்டென்று கவர்ந்தன.

அன்று முதல் இந்த நிமிடம் வரை தமிழ் மக்களின் ஏகோபித்த வரவேற்புக் குரிய தொலைக்காட்சியாக சன் தொலைக்காட்சி விளங்கி வருகிறது.

தொடர்ந்து முதலிடத்திலேயே சன் குழுமத்தின் அலைவரிசைகள் அத்தனை யும் இருந்து வருவது உண்மையிலேயே மிகப் பெரிய சாதனையாக கருதப்படுகிறது. நிகழ்ச்சிகளை வழங்கும் விதம், துல்லியம், மக்கள் மனதைப் படித்து அதற்கேற்ப நிகழ்ச்சி களை வழங்குவது, அனைவரிடமிருந்தும் தனித்துவத்துடன் தனித்து நிற்பது என்று அதற்கென்றே புள்ளிகள் இதற்குக் காரணம்.

ஆனால் முதல் முறையாக சன் செய்தி அலைவரிசை 2ஆவது இடத்திற்குப் போயுள்ளது. அதுவும் நேற்று முன்தினம் புதிதாகப் பிறந்த புதிய தலைமுறை அலைவரிசை சன் செய்தி அலைவரிசையை முந்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து புதிய தலைமுறை தரப்பில் கூறுகையில்:

தொலைக்காட்சி பார்வையாளர்களை கணக்கிடும் ஏசி நீல்சன் நிறுவனத்தின் TAM கணக்கீட்டின்படி, தமிழகத்தில் கடந்த 8 வாரங்களாக முன்னேறிச் சென்ற வாரம் ஜி.ஆர்.பி. எனப்படும் மொத்த மதிப்பீட்டுப் புள்ளிகளில் 35.94 என்ற அளவை புதிய தலைமுறை எட்டி, முதலிடத்தைப் பிடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# மின்னல் தாக்கி நடராஜர் கோயில் கோபுரம் சேதம்

சிதம்பரத்தில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு இடி மின்னல் தாக்கி நடராஜர் கோயில் மேற்குக் கோபுரத்தின் ஆழி மற்றும் பொம்மை சேதமுற்றது.

சிதம்பரம் நகரில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு பலத்த இடிமின்னலுடன் கன மழைபெய்தது. அப்போது இடிமின்னல் தாக்கி நடராஜர் கோயில் மேற்கு கோபுரத்தின் உச்சியிலிருந்து ஆழி மற்றும் சிங்கமுத்து பொம்மை ஆகியன சேதமுற்று இடிந்து கீழே விழுந்தன.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு இதே மேற்குக் கோபுரத்தில் இடிமின்னல் தாக்கி கலசங்கள் சேதமுற்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

**பெருமைக்குரியவர்கள்...**



கூடங்குளம் அணுமின் நிலைய ஆய்வுக்குப்பின், முன் னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அருகில், இந்திய அணுசக்தி கழக தலைவர் எஸ்.கே., ஜெயின் கூடங்குளம் அணுமின் நிலைய வளாக இயக்குநர் காசிநாத் பாலாஜி ஆகியோர் இருக்கின்றனர்.

# ஈழத்தமிழர் தீர்வுக்கான கோரிக்கை மத்திய அரசு செவி சாய்க்கவில்லை

### பா.ம.க.தலைவர் கண்டனம்

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுதொடர்பான கோரிக்கைகளுக்கு இதுவரைக்கும் செவி சாய்க்காத மத்திய அரசை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போரக் குற்றவாளி என்று அறிவித்த பின்னரும் மத்திய அரசு அவரை இதுவரைக்கும் கண்டிக்காதது கவலை தரக்கூடிய விடயம் . இவ்வாறு தெரிவித்தார் பாட் டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே.மணி.

ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு கோவையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு தனது கண்டனத்தை தெரிவித்தார். அந்த மாநாட்டில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகிய மூவரின் தூக் குத் தண்டனையை ரத்துச் செய்ய வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

இந்தியாவில் தூக்குத்தண்டனையை ரத்து செய்ய வேண்டும். போர்க் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ராஜபக்ஷவை உலக நாடுகளின்முன்நிறுத்தும்நிலையை நாம் உருவாக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். பழ.நெடுமாறன், வைகோ, திருமாவளவன், ஜி.கே.மணி உள் பட பல தலைவர்கள் பங்கேற்றனர். (ம)

# ஈழத்தமிழருக்கான குரல் மத்திய அரசுக்கு கேட்பதில்லை

### பழ.நெடுமாறன் தெரிவிப்பு

ஈழத் தமிழர்களுக்காக அனைத்துக் கட்சியினரும் குரல் கொடுக்கிறோம். ஆனால் அந்த குரல் மத்திய அரசின் காதுக ளுக்கு கேட்பதில்லை என்று உலகத்தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு கோவை வ.உ.சி. பூங்கா மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மாநாடு மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகியது. இந்த மாநாட்டில் நெடுமாறன் தொடர்ந்து பேசுகையில்:

தமிழகத்தில் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தினால் தான் ஈழத் தமிழர் பிரச்சினை, காவிரி நதிநீர், முல்லை பெரியாறு அணை பிரச்சினை உள்பட பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் உள்ளோம். இதைத் தவிர்த்து ஓர் உருவாய் நாம் எழுந்து நிற்க வேண்டும். அந்த சக்தி இது போன்ற மாநாடுகளை நடத்துவதின் மூலமே உருவாகும். (வ)

# கூடங்குளம் அணுமின் நிலையம் பாதுகாப்பானது

### அப்துல் கலாம் கருத்து

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மூன்று விதமான பாதுகாப்பு அம்சங்கள் உயர் தரத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்று இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கூறியுள்ளார். கூடங்குளம் அணுமின் நிலை யத்தில் அணு உலை பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில்:

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மூன்று வித பாதுகாப்பு அம்சங்கள் உயர் தரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சாரம் தடைப்பட்டால் அணு உலைகளை குளிர்விக்க தெர்மோசெட் மூலம் நீரை செலுத்தும் முறை பயன்படுத் தப்படுகிறது.

எரிபொருள் சூடு அதிகமாக இருந்தால் அதை குளிர்விக்க ரேடியேசன் தயார் செய்யப்பட்டுள்ளது. கோர் உருகும் போது கதிர்வீச்சு ஏற்படாமல் இருக்க கோர் கேச்சர் பயன்படுத்தப் படுகிறது. கதிர்வீச்சு வெளி வராமல் இருக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இதனால் கூடங்குளம் அணுமின் நிலையத்தால் எந்த ஆபத்தும் இல்லை என்று கலாம் தெரிவித்தார். (வ)

உதயன்
08 நவம்பர் 2011 செவ்வாய்க்கிழமை

# சனிப் பெயர்ச்சிப் பலன்கள்

15.11.2011 - 02.11.2014

தருவது : ஜோதிடக் கலைமாமணி
டாக்டர் முருகடிமை துரைராஜ்

## துலாம்

(சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)



துலாம் இராசிக்காரர்களுக்கு சனி பகவான் 15.11.2011 முதல் 2.11.2011 வரை ஜன்ம இராசியில் சஞ்சரிப்பார்.

கடந்த 2லீ வருட காலம் சனி பகவான் உமது இராசிக்கு 12 இல் சஞ்சாரம். இதனால் வீடு மாற்றம், தொழில்மாற்றம் என நிகழ்ந்தன. அவ்வப்போது மருத்துவ செலவுகள் வந்தன. எனினும் சனி பகவான் சுக பூர்வ புண்யாதிபதி என்பதால் அதிக கெடுதல் செய்யவில்லை. பிள்ளைகள் விடயத்தில் மனக்கவலை. கணவன் மனைவி இடையில் மனஸ்தாபம் என நிகழ்ந்தன.

தற்சமயம் சனி பகவான் ஜென்ம ராசியில் வருகிறார். இதனால் கவலை வேண்டாம். சனி பகவான் உமது 5ஆம் இடத்துகுடையவர் 1,5,9 இற்குடையவர் கெடுதி செய்யார்.

பிள்ளைகள் வழியில் முன்னேற்றம் கிட்டும். வீடு கட்ட வாகனம் வாங்க இடமுண்டு.

### சனி பகவான் பார்வை பலன்

சனி பகவான் 3,7,10 ஆகிய பார்வையினால் 3,7,10 ஆகிய வீடுகளை பார்வை செய்வார்.

சனி பகவானின் 3 ஆம் பார்வையால் உங்கள் ராசிக்கு 3 ஆம் வீட்டைப் பார்வை செய்வதால் கடன் தீரும். கவலைகள் விலகும். புதிய முயற்சிகளில் இருந்து வந்த தடைகள் அகலும்.உயர்வான பதவிகள் தேடி வரும். சிலருக்கு காதல் திருமணம் கைகூடும். சிலர் வெளிநாடு செல்லவும் இடமுண்டு.

சனி பகவானின் 7 ஆவது பார்வையில் உமது இராசிக்கு 7 ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. கணவன் மனைவி இடையில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போவது நலம். நாள்பட்ட நோய் விலகும். முதிர் கன்னியருக்கு திருமணம் நடக்கும். தொழில் முதலீட்டுக்குத் தேவையான நிதிஉதவி கிட்டும்.

சனி பகவானின் 10 ஆவது பார்வையினால் உமது இராசிக்கு 10 ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் தந்தை நடத்திய தொழிலை சிலர் ஏற்று நடத்த வேண்டியிருக்கும். சனி பகவான் விசேடமான பார்வை 10 ஆம் பார்வை. எனவே தொழில் அபிவிருத்தி பற்றிய கவலை வேண்டாம்.

### விசேட பலன்கள்.

உத்தியோகத்தர்களுக்கு: சுற்றுச் சூழல், துறை முகங்கள், கடல்வாழ் உயிரின ஆய்வு, தீயணைப்பு போன்ற துறைகளில் பணி புரிபவர்கள் மிகுந்த அனுகூலம் அடைவர்.

விவசாயிகளுக்கு: எள்.கொள்ளு, மானாவரி பயிர்கள், நல்ல இலாபம் தரும். பயிர் அதிக விளைச்சல் தரும். எனினும் பயிர்பாதுகாப்புச மற்றும் பராமரிப்புச் செலவுகள் கூடுதல் ஆகும். விளைபொருளுக்கு நல்ல விலை கிடைக்கும். பூர்வீக சொத்தின் மூலம் நல்ல அனுகூலம் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு: குளிர்பானங்கள்,திரவ வகைகள், அமிலங்கள், நீர்ப்பாசனம் தொடர்பான சாதனங்கள், மின்சாதனம் போன்ற பிரிவுகளில் தொடர்புடையவர்கள் முன்னிலை பெறுவர். உமது இராசியில் சனி உச்சபலம் பெறுபவர் எனினும் சூரியன் பாதகாதிபதி ஆவார். இதனால் அரசு வழி அல்லலுக்கு இடம் உண்டு.

மாணவர்களுக்கு: சிவில் பொறியியல் இன்ஜினியரிங், விவசாயக்கல்வி, போன்ற பிரிவுகளில் பயில்வோர் முன்னிலை பெறுவர். சிலர் உயர்கல்வி பயில வெளிநாடு செல்வர். கல்விக் கடன் கிடைக்கும். சிலர் கல்லூரியிலே மற்றும் பல்கலைக்கழக அளவில் முதல்நிலை பெற்று வாழ்க்கைக்கு பெருமை சேர்ப்பர்.

பெண்களுக்கு: வேலை தேடும் பெண்களுக்கு வேலை கிடைக்கும். திருமணத்தடை விலகும். புத்திர பாக்கியம் இல்லையே என வருந்தியவர்களுக்கு புத்திர பாக்யம் உண்டாகும். உமது கணவர் உமது பெயரில் வீடு, பூமி என வாங்குவார். வங்கியில் நிரந்தர வைப்பு நிதியாக முதலீடு செய்வார். சனி சஞ்சாரம் சாதகமாக இருப்பதால் ராகு, கேது சஞ்சார சாதகமாக இல்லை,

### சஞ்சார பலன்கள்

15.11.2011 முதல் 07.02.2012 வரை மற்றும் 03.08.2012 முதல் 27.10.2012 வரை சனி பகவான் சித்திரை நட்சத்திரத்தில் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிப்பதால் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் ஆகும். நிலபுலன்களில் சீர்திருத்தம் செய்வீர்கள். பிரிந்த தம்பதிகள் இணைந்து வாழ இடமுண்டு.

28.10.2012 முதல் 18.02.2013 வரை மற்றும் 09.07.2013 முதல் 05.11.2013 வரை சனி பகவான் சுவாதி நட்சத்திரத்தில் ராகு பகவான் சாரத்தில் சஞ்சரிப்பதால் எதிர்பாராத திடீர் செலவுகள் வரும். பணம் கையாள்வதிலும் மிகுந்த கவனம் தேவை. மின்சாரம் கணனி போன்ற துறையினர் விரைந்து முன்னேற்றம் அடைவர். வெளிநாடு செல்ல இடமுண்டு.

05.11.2013 முதல் 02.03.2014 வரை மற்றும் 21.07.2014 முதல் 2.11.2014 வரை சனி பகவான் விசாக நட்சத்திரத்தில் குருபகவான் சாரத்தில் சஞ்சரிப்பதால் சரளமான பணப்புழக்கம் உண்டு. கடன் தீரும். காதல் நிறைவேறும். சிலருக்கு திடீர் திருமணம் நடக்கும்.

### சனி பகவான் விக்ர கால பலன்கள்

08.02.2012 முதல் 02.08.2012 வரையும் 19.2.2013 முதல் 8.7.2013 வரையும் 3.3.2014 முதல் 20.7.2014 வரையும் சனி பகவான் வக்ர கதியில் சஞ்சரிப்பதால் உடல் நலனில் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் கூடுதல் சிரத்தை எடுப்பது நலம். கடன் தொல்லை தராது. மாமன் மைத்துணர் உறவு முறையில் பின்னடைவு உண்டாகும்.

மூர்த்திகர நிர்ணய பலனும் பரிகாரமும்.

சனிப்பெயர்ச்சி பேறு மூர்த்திகா நிர்ணயத்தில் ராச்சத மூர்த்தியாக வருகிறார். பலன் லு பங்கு அருகில் உள்ள விஸ்ணு ஆலயத்திற்கு இயன்ற வெள்ளியிலான பூஜாசாதனம் வாங்கிக் கொடுக்கவும்.

### சனிப்பெயர்ச்சியும் குருப்பெயர்ச்சியும்

16.5.2012 வரை குருபகவான் உமது இராசிக்கு 7 இல் சஞ்சாரம். இதனால் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் ஆகும். 28.5.2013 வரை குருபகவான் உமது ராசிக்கு 8 இல் சஞ்சரிப்பார். இதனால் வாக்கினால் ஜவனம் புரிபவர் ஏற்றம் பெறுவர். 19.6.2014 வரை குருபகவான் உமது இராசிக்கு 9 இல் வருவதால் வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிட்டும். இதற்கு பின்பு குருபகவான் உமது இராசிக்கு10 இல் சஞ்சாரம். இதனால் உத்தியோகம் அல்லது தொழில் மாற்றம் உண்டாகும்.


### சனிப்பெயர்ச்சியும் ராகு, கேது பெயர்ச்சியும்

6.6.2011 முதல் இராகு 2இலும் கேது 8இலும் சஞ்சாரம் இதனால் பணம் கொடுக்கல் வாங்கல்களில் மிக்க எச்சரிக்கையாக இருப்பது நல்லது.25.12.2012 முதல் இராகு ஒன்றிலும் கேது 7இலும் சஞ்சாரம். இதனால் உடல் நலனில் கவனம் தேவை கணவன் மனைவி இடையில் யாராவது கலகம் செய்து பிரிக்கப்பார்ப்பார்கள்.14.7.2014 வரை இராகு 12 இலும் கேது. 6இலும் சஞ்சாரம் தண்ணீரில் கண்டம் உண்டாக இடம் உண்டு. உடல் நலன் கெடும்.

விசேஷ பரிகாரம்: பிரதி வெள்ளிக்கிழமை இராகு காலத்தில் துர்க்கையை வழிபட வேண்டும். பிரதோஷ காலத்தில் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்க. பிரதி சனிக்கிழமை சனிபகவானுக்கு நல்லெண்ணை தீபம் ஏற்றவும்.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)



விருச்சிக இராசினருக்கு சனி பகவான் 15.11.2011 முதல் 2.11.2014 வரை அயன சுபன சோபன சுகம் மற்றும் விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பார். கடந்த 2லீ வருட காலம் பகவான் உமது ராசிக்கு 11 இல் சஞ்சரித்தார். இது லாபஸ்தானம் உமது வாக்கு ஸ்தானத்தில் தன ஸ்தானம் சனி பகவான் நன்மை தரும் ஸ்தாணங்களில் இது முக்கியமான இடமாகும். நினைத்தது நடந்தன. கேட்டது கிடைத்தது தொழில் வழியில் முன்னேற்றம் கிடைத்தது.

தற்சமயம் சனி பகவான் உமது இராசிக்கு 12 இல் வருவதால் சிலர் பூர்வீகம் விட்டு வேறு ஊரில் குடியேறநேரும். சிலர் தாய் நாட்டை விட்டே வெளிநாட்டில் சென்று வசிக்கவும் இடமுண்டு. சனி பகவான் உமது இராசியில் 3, 4 இற்கு வந்தடைவார் 3இற்கு உடையவர் 12 இல் வருவதால் பாதிப்பு இல்லை. 4இற்கு உடையவர் 12 இல் வருவதால் கல்வியில் பாதிப்பு, உடல் நலனில் பாதிப்பு என்று கூறலாம். ஆனால் 1, 5 9 இற்கு வந்தடைந்து பரந்த சுப பலனைத் தருவார் என்பது விதி. எனவே அச்சம் தவிர்க்கவும்.

### சனி பகவான் பார்வை பலன்

சனி பகவானில் 3,7,9 ஆகிய பார்வையினால் உமது இராசியில் 2, 6 வீடு 2 இல் பார்வை செய்வார். சனி பகவானில் 3 ஆவது பார்வையினால் உமது இராசிக்கு 2ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் கடன் தீரும்.வாக்கினால் ஜீவனம் புரிபவர்கள் மேன்மை அடைவர். பணம் சார்ந்த பணியினர் மிகவும் கவனமாக பணிபுரிதல் அவசியம் ஆகும்.

சனி பகவானின் 7 ஆவது பார்வையில் உமது ராசியில் 6 ஆவது வீட்டை பார்வை செய்வதால் நீண்ட கால பிணி தீரும். கடன் தீரும். ஏற்றுமதி இறக்குமதி வாணிபம் சிறப்படையும். மாமன் மைத்துணர் வழியில் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். மகன் அல்லது மகள் கல்விச் செலவு கூடும். சனி பகவான் 10 ஆவது பார்வையினால் உமது ராசியில் 9 ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் சிலருக்கு வெளிநாட்டுக்குடியுரிமை கிட்டும். பிரிந்து வாழும் கணவன் மனைவி சேர்ந்து வாழ இடமுண்டு. புதிய முதலீடுகள் பெருக இடமுண்டு.

### விசேட பலன்கள்

உத்தியோகத்தர்களுக்கு: அனைத்துத் துறைகளிலும் பணிபுரிவோர் ஏற்றம் பெறுவர். சிலர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் மேலும் பணி நீடிப்புப் பெற இடம். பணிச்சுமையும் பொறுப்பும் அதிகமாகும். எப்போதும் ஓய்வின்றி விழிப்புணர்வுடன் செய்ய நேரும்.

விவசாயிகளுக்கு: சிவப்பு ராசியான பயிர்கள் நல்ல அமோக விளைச்சல் தரும். அரசு வழியில் மானியம் பயிர்க்கடன் போன்றவைகள் கிடைக்க இடம் உண்டு. புதிய விவசாய உபகரணங்கள் வாங்குவீர்கள்.

வியாபாரிகளுக்கு: அரச வழியில் நிலவிய அல்லல் அகலும். பங்குவர்த்தகம் போன்ற பிரிவுகளில் பணிபுரிவோர் ஏற்றம் பெறுவர். முதலீடு பெருகும். வங்கிகள் நிதி நிறுவனங்கள் தாராளமாக நிதி உதவி செய்யும்.

பெண்களுக்கு: இளைய சகோதர வழியில் சுபச் செலவுகள் வரும். சேமிப்பு வளரும். வேலை தேடும் பெண்களுக்குத் தகுதியான வேலை கிடைக்கும். புத்திர பாக்கியம் இல்லையே என ஏக்கம் அடைந்தவர்களுக்கு புத்திர பாக்கியம் கிட்டும். திருமணத் தடை விலகும் . குடும்பஸ்தானத்தை சனி பகவான் பார்வை செய்வதால் குடும்பத்தில் வேறு மனிதர்களின் தலையீட்டை அனுமதிக்க வேண்டாம்.

மாணவர்களுக்கு : மருத்துவம் அனைத்து வகை தொழில் கல்வி, கணனி சயன்ஸ், விவசாயம், போன்ற துறைகளில் பயில்வோர் முன்னிலை பெறுவர். உயர் கல்வி பெற நிலவிய குழப்பமான சூழ்நிலை அகலும். சிலர் வெளிநாடு சென்று ஆய்வுக்கல்வி பயிலவும் இடமுண்டு. சிலருக்கு தந்தை வேலை பார்த்த இடத்திலேயே வேலை கிட்டும்.

### சஞ்சாரப்பலன்கள்

15.11.2011 முதல். 07.2.2012 வரையும். 03.8.2012 முதல் 27.10.2012 வரையும் சனி பகவான் சித்திரை நட்சத்திரத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால் வீடு, மனை, பூமி போன்ற சொத்து வாங்க முடியும். உமது பிள்ளைகளின் திருமணம் உயர்கல்வி என சிறப்பாக நடக்கும். சிலருக்கு பேரன், பேர்த்தி பிறக்கவும் இடமுண்டு.

28.10.2012 முதல் 18.12.2013 வரையும். 09.7.2013 முதல் 05.11.2013 வரையும் சனி பகவான் சுவாதி நட்சத்திரத்தில் யோகக்காரனான இராகு பகவான் சாரத்தில் சஞ்சரிப்பதால் எதிர் பாராத தன வரவுக்கு இடமுண்டு. இல்லத்தில் நவீன சாதனங்களின் சேர்க்கை உண்டு. தூர தேசத்திலிருந்து நற்செய்திகள் வரும். சிலர் வெளிநாடுகளுக்குச் செல்ல இடமுண்டு.

05.11.2013 முதல். 02.3.2014 வரையும் 21.7.2014 முதல். 02.11.2014 வரையும் சனி பகவான் விசாகம் நட்சத்திரத்தில் குருபகவான் சாரத்தில் சஞ்சாரம் செய்வதால் வாக்கினால் வளரும் நலமும் சேரும்.உமது பிள்ளைகள் கல்வியில் முன்னிலை பெறுவர். செல்வந்தர்களின் நட்பு கிட்டும். பணம் கையாளும் பணியிலிருப்பவர்கள் மிகமிகக் கவனமாக பணி புரியவும்.

### சனி பகவான் வக்ர கால பலன்கள்

8.2.2012 முதல் 2.8.2012 வரையும் 19.2.2013 முதல் 8.7.2013 வரையும் 3.3.2014 முதல் 20.7.2014 வரையும் சனி பகவான் வக்ர கதியில் சஞ்சரிப்பார் இதனால் மனோதிடம் குறையும். சனி பகவான் வக்ரம் அடைகிறார். "கெட்டவன் கெட்டிடில் கிட்டும் ராஜயோகம்" என்பது மரபு. 4 ஆம் வீட்டுக் கிரக வக்ரம் அடைவது உசிதம் அல்ல. இதனால் உடல் நலனில் கவனம் தேவை. சனிபகவான் வக்ர கால பலன்கள் 08.2.2012 முதல் 02.8.2012 வரையும் 19.2.2013 முதல் 8.7.2013 வரையும் 3.3.2014 முதல் 20.7.2014 வரையும் சனி பகவான் சஞ்சரிப்பதால் கவனம் தேவை. வீண் பேச்சு விதண்டாவாதம் வேதனை தரும். கொடுக்கல் வாங்கலில் கவனம்தேவை. 2, 3 இக்குடைய சனி பகவான் வக்ரம் என்பதால் கடன் தொல்லை தராது.

### மூர்த்திகர நிர்ணய பலனும் பரிகாரமும்

சனிப்பெயர்ச்சியின்போது மூர்த்திகர நிர்ணயத்தில் உலோக மூர்த்தியாக வருகிறார். பலன் கால் பங்கு உலோகம், இரும்பு.

### சனிப்பெயர்ச்சியும் குருப்பெயர்ச்சியும்

16.5.2012 வரை குருபகவான் உமது ராசிக்கு 6இற்கு பிராப்த ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் கடன் தீரும். 28.5.2013 வரை குருபகவான் உமது ராசியில் 7 இல் சஞ்சரிப்பதால் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் ஆகும். மாமன் மைத்துனர் உறவு பலப்படுத்தப்படும். 19.6.2014 வரை குரு பகவான் உமது ராசியில் 8 இல் சஞ்சரிப்பதால் யாருக்கும் வாக்குறுதி தரக்கூடாது. பின்பு சனி பகவான் விருச்சிகத்தில் பிரவேசிக்கும் வரை குருபகவான் உமது ராசியில் 9 இல் சஞ்சரிப்பதால் வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

### சனிப்பெயர்ச்சியும் இராகு கேது பெயர்ச்சியும்

06.6.2011 முதல் ராகு ஒன்றிலும் கேது 7இலும் சஞ்சாரம். இதனால் உடல் நலனில் கவனம் தேவை. வாயுத் தொல்லையும் அஜீரண கோளாறும் உண்டாகும். 25.12.2012 முதல் ராகு 12 இலும் கேது 6 இலும் சஞ்சரிப்பதால் அதிக பிரயாணம் இருக்கும்.14.7.2014 வரை இராகு 11இலும் கேது 5இலும் சஞ்சாரம். இதனால் விதவை மாதரால் அனுகூலம் கிட்டும். இஷ்ட தெய்வ குலதெய்வ பிரார்த்தனை நன்மை தரும். விசேட பரிகாரங்கள்:பிரதோஷ காலத்தில் யோக நரசிம்மரை பக்திசிரத்தையுடன் வழிபடவும். பிரதி சனிக்கிழமை சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வணங்கவும்.

# ஜி 20 நாடுகளின் இரு நாள் உச்சி மாநாடு தோல்வியடைய நிதிநெருக்கடி காரணமா?

கேன்ஸ், நவ.8

பிரான்ஸின் கேன்ஸ் நகரில் நடைபெற்ற ஜி20 நாடுகள் அமைப்பின் 2 நாள் உச்சி மாநாடு தோல்வியில் முடிந்ததாக நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

உலக நாடுகள் எதிர்காலத்தில் நிதிநெருக்கடியில் சிக்காத வகையில் நிதித்துறையில் சீர்திருத்தங்கள் செய்வது மற்றும் வெளிநாட்டு முதலீட்டை அனைத்து நாடுகளுக்கும் பரவலாக்குவது தொடர்பாக விவாதிப்பதற்காக கூடிய இந்த மாநாட்டில்,இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க அதிபர் ஒபாமா, பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், சீன அதிபர் ஹூஜிண்டாவோ, பிரான்ஸ் அதிபர் சர்கோஸி, ஜேர்மன் அதிபர் மார்க்கல் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர். ஆனால், ஐரோப்பிய யூனியனில் ஏற்பட்டுள்ள கடும் நிதி நெருக்கடி காரணமாக ஆக்கபூர்வமான எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனினும், ஐரோப்பிய யூனியனில் ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடியைத் தீர்ப்பதற்கான திட்டம் மாநாட்டில் வகுக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் கிரீஸ் நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஐரோப் பிய நாடுகள் நிதியுதவி வழங்க முன்வந்துள்ள போதிலும், அதை ஏற்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்படும் எனக் கிரீஸ் அறிவித்தது.

இது ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த பிரான்ஸ், ஜேர்மன் உள்ளிட்ட நாடுகளை அதிர்ச்சியடைய வைத்தது. வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் கிரீஸ் நாட்டை யூனியனிலிருந்து வெளியேற்றுவோம் என அந்த நாடுகள் எச்சரித்ததுடன் ஜி20 மாநாட்டிலும் இது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளின் நிதி நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காண யூனியன் வழங்கும் நிதியுதவியை கிரீஸ் வாக்கெடுப்பின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஜி20 உறுப்பு நாடுகள் வலியுறுத்தின. இதையடுத்து, வாக்கெடுப்பைக் கைவிட முடிவு செய்துள் ளதாகத் தெரிய வருகிறது. (ந)

# இந்தியா, ஜப்பான் நாடுகளுடன் அமெரிக்கா முத்தரப்புப் பேச்சு

## அடுத்த மாதத்தில் நடைபெறும்

வாஷிங்டன், நவ.8

இந்தியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் கலந்து கொள்ளும் முத்தரப்பு பேச்சு எதிர்வரும் டிசெம்பரில் நடைபெறும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவின் வெளியுறவுத்துறை துணைச் செயலாளர் வில்லியம்பர்ன்ஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் நாடான இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து பிராந்திய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்படும் எனவும், அவை புத்தாண்டில் எழுச்சியை உருவாக்கும் எனத் தான் நம்புவதாகவும் கூறினார்.

மேலும் அவர் கிழக்கு ஆசிய நாடுகளில் இந்தியா பொருளாதார ரீதியிலும், கலாசாரத்துறையிலும் சிறந்து விளங் குவதால் அதனுடன் பொருளாதார ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்தி கொள்ளவும் அமெரிக்கா விரும்புகிறது எனவும் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி ஜப்பான், தென்கொரியா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா மற்றும் வியட்நாம் நாடுகளுடனும் அமெரிக்கா நட்புறவை வளர்த்துக்கொள்ள விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

# இத்தாலியில் பயங்கர வெள்ளம்; 6 பேர் சாவு

இத்தாலியின் ஜெனோவாவில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் நகரிலில் பலர் காணாமற்போய் விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவமானது துக்ககரமானது என்று நகரமேயர் மாத்தா விசென்சி தெரிவித்தார்.

ஜெனோவாவில் வெள்ள நீரூடாக மக்கள் நடந்து செல்வதையும் வெள்ள நீரில்கார்கள் மிதந்து போவதையும் இத்தாலி தொலைக்காட்சிகள் வெளியிட்டுள்ள அதேவேளை வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம்என்றும், மாடிக்கட்டடங்களில் ஏற வேண்டாம் என்றும் நகர பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந)



தென்னாபிரிக்காவில் ஐந்துநாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ், கேப்டவுன் நகரில் பாதிரியார் டெஸ்மண்ட் டூவைச் சந்தித்துப் பேசினார்.

# அப்பிள் நிறுவனம் மீது அமெரிக்க விஞ்ஞானி வழக்கு

தனது கண்டுபிடிப்புக்களை கணினி, ஐபாட், ஐபோன்களில் திருடிப் பயன்படுத்தியதாக பிரபல அப்பிள் கணினி நிறுவனம் மீது அமெரிக்க விஞ்ஞானி வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அமெரிக்காவின் உட் பிரிட்ஜ் பகுதியைச் சேர்ந்த தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் நடத்திவருபவரான டேவிட் ஜெலர்ட்னர் என்பவரே இவ்வாறு வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக டேவிட் கூறுகையில், அப்பிள் நிறுவனத்தை எதிர்த்து இதற்கு முன் என்னால் தொடரப்பட்ட வழக்கில் ரூ.62.5 கோடி டொலர் இழப்பீடு வழங்கத் தீர்ப்பு வந்தது.

ஆனால் 4 மாதங்களில் நிலைமை தலைகீழானது. மேன்முறையீட்டில் எனது தொழில்நுட்பம் பிரதி அடிக்கப்பட்டதை ஏற்பதாக அறிவித்தும் ஆதார மில்லை என்று கூறி நிராகரிக்கப்பட்டது. எனினும் மனம் தளராமல் மீண்டும் வழக்குத் தொடர்ந்துள்ளேன் என்றார். (ந)

# ஈரான் அணு ஆயுத தயாரிப்பு விவகாரம் ஓரிரு நாள்களில் ஐ.நாவில் அறிக்கை

வியன்னா, நவ.8

ஐ.நா.வின் சர்வதேச அணு சக்தித் தொடர்பகம் இன்னும் ஓரிரு நாள்களில், ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரித்து வருவதற்கான ஆதார பூர்வ அறிக்கையைத் தாக்கல் செய்ய உள்ளது. ''அவர்கள் அறிக்கையை வெளியிடட்டும்; அதன் பின் என்ன நடக்கும் என்பதை நாம் பார்ப்போம்'' என ஈரான் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும் மேற்குலகும் ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என ஐ.நா.வுக்கு நெருக்கடி கொடுத்தன. இந்நிலையில், ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் நடக்க உள்ள உறுப்பு நாடுகளின் காலாண்டுக் கூட்டத்தில், ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு குறித்த ஐ.ஏ.இ.ஏ.,யின் அறிக்கை வெளியிடப்பட உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், "ஐ.ஏ.இ.ஏ.,யின் இந்த முயற்சி, பேச்சு மூலம் தீர்க்கக் கூடிய ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பு விவகாரத்தை மேலும் சிக்கலாக்கி விடும்; அதைத் தொடர்ந்து ஐ.நா. ஈரான் மீது கடுமையான தடைகளை விதிக்க நேரிடும்'' என ரஷ்யாவும், சீனாவும் கவலை தெரிவித்துள்ளன.

இதேவேளை ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் சலேஹி நேற்றுமுன்தினம் இது குறித்து கூறுகையில்:

''அந்த அறிக்கையில் இருப்பவை ஆதாரமற்றவை என, நான் கருதுகிறேன். இந்தப் போலி அறிக்கையை அவர்கள் வெளியிடட்டும்; அதன் பின் என்ன நடக்கிறது என்பதை நாம் பார்ப்போம்'. தனது அண்டை நாடுகள் அணு ஆயுதங்கள் வைத்திருப்பதைப் பொறுத்துக்கொள் ளாத இஸ்ரேல் ஈராக் மற்றும் சிரியாவின் அணு உலைகள் மீது தாக்குதல் நடத்தி அழித்ததைப் போல, தற்போது ஈரான் மீதும் தாக்குதல் நடத்தத் தயார் நிலையில் உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இஸ்ரேல் அதிபர் சிமோன் பெரஸ், ''ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு அதிகளவில்மையும் வாய்ப்பு உள்ளது'' என மிரட்டல் விடுத்துள்ளார். (ந)

# 2011 இன் மிஸ் வேல்ட் ஆனார் வெனிசுலா அழகி



2011 ஆம் ஆண்டுக்கான உலக அழகியாக வெனிசுலா நாட்டின், லுன சொல் சர்கோஸ் கொலிமெனார்ஸ் தெரிவாகியுள்ளார்.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடதத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் போட்டியில் 122 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்து கொண்டனர். இறுதிப் போட்டியில், சுமார் 15 அரையிறுதிப் போட்டியாளர்களைத் தோற்கடித்து, லுனசொல் மகுடம் சூடியுள்ளார்.

வெற்றி வாகை சூடிய வெனிசுலா அழகிக்கு, 2010 இன் உலக அழகியாகத் தெரிவான அலெக்ஸாண்ட்ரியா மில்ஸ் மகுடம் சூட்டி வைத்தார்.

இதேவேளை இரண்டாவது இடத்தைப் பிலிப்பைன்ஸ் அழகிக்வெண்டோலின் ருயேஸும், மூன்றாம் இடத்தை புயெட்ரோ ரிகோ அழகி அல்மாண்டா பெரெஸும் பெற்றுக் கொண்டனர்.

# நைஜீரியாவில் தொடர் குண்டுத் தாக்கு; 150 பேர் பரிதாபச் சாவு; பலர் காயம்





அபுஜா, நவ.8

நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில், போகோ ஹராம் என்ற தீவிரவாத அமைப்பு நடத்திய தொடர் வெடிகுண்டுத் தாக்குதல்களில் 150 பேர் பலியாகினர்; பலர் காயம் அடைந்துள்ளனர்.

நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள யோப் மாகாணத்தின் டமாடுரு என்ற நகரில் தேவாலயங்கள், பொலிஸ் தலைமை நிலையம், மசூதிகளைக் குறி வைத்து நேற்று முன்தினம் அடுத்தடுத்து தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதேவேளை, யோப் மாகாணத்தை அடுத்துள்ள போர்னோ மாகாணத்தின் மைடுகுரி நகரில், தற்கொலைத் தாக்குதல் நடந்தது. இந்த இரு சம்பவங்களிலும், ஏழு பொலிஸார், இரு ராணுவ வீரர்கள் உட்பட 150க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்தச் சம்பவங்களுக்கு அல்குவைதாவுடன் தொடர்புடைய போகோ ஹராம் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ள அதேவேளை ''பாதுகாப்புப் படையினர், எங்கள் நபர்களைத் தாக்குவதும், பொது மக்களைத் துன்புறுத்துவதும் நிற்கும் வரையில் அரசு அமைப்புக்களின் மீதான எங்கள் தாக்குதல் தொடரும்'' என மிரட்டலும் விடுத்துள்ளது.

இந்தக் கொடூர சம்பவங்களுக்கு அதிபர் குட்லக் ஜோனதன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2004 இல் உருவாக்கப்பட்ட ,மேற்கத்திய கல்வி முறைகளுக்கு எதிரான இந்த அமைப்பு நாட்டின் வடபகுதியில் உள்ள 12 மாகாணங்களில் அமுலில் உள்ள ஷரியா சட்டம், நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, இதுபோன்ற தாக்குதல்களை நடத்தி வருகிறது. (ந)

# கடத்தப்பட்ட நைஜீரிய கப்பல் ஊழியர்கள் விடுதலை

நைஜீரிய கடற் பகுதியில் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட கப்பல் ஊழியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு 20 ஊழியர்களுடன் நைஜீரிய கடற்பகுதியில் சென்று கொண்டிருந்த கிரீஸ் நாட்டுக்குச் சொந்தமான கப்பலைக் கடந்த ஜூலை மாதம் கடற்கொள் ளையர்கள் கடத்திச் சென்றனர்.

அந்தக் கப்பலை விடுவிக்க கிரீஸ் நிறு வனமும் சர்வதேச கடற்கொள்ளைத் தடுப்பு அமைப்பும் தீவிர முயற்சி மேற் கொண்டு வந்தன. இந்நிலையில் 20 ஊழியர்களும் விடுவிக்கப்பட்டதாகக் கடற்கொள்ளை தடுப்பு அமைப்பு அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

கப்பல் அதிபர்கள் அமைப்பான இன்கோரா நிறுவனம் தனது இணையத்தளத்தில், கப்பலில் இருந்த ஊழியர்கள் 20 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியிட்டுள்ளது. (ந)

# நாவற்குழி மகா வித்தியாலய அணி தென்மராட்சி வலயச் சம்பியனானது

யாழ்ப்பாணம், நவ.8
தென்மராட்சி வலய மட்ட பாடசாலைகளின் 18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் நாவற்குழி மகா வித்தியாலய அணி சம்பியனானது.

இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை வரணி மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணியை எதிர்த்து நாவற்குழி மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் தத்தமது அணி வெற்ற பெற வேண்டும் என்ற உற்சாகத்தோடு களம் இறங்கினர்.

இதனால் ஆட்டம் சூடு பிடித்தது. இரண்டு அணியினரும் தமது அணிக்காகக் கோல்களைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் மாறி மாறி எதிரணியின் கோல் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

எனினும் முயற்சி இரண்டு அணிகளின் பின்கள வீரர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதனால் முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் ஆட்டம் பாதி ஆரம்பமான போது இரு அணியினரும் மிகவும் உற்சாகத்துடன் விளையாடினார்கள். இரண்டாம் பாதி ஆட்டத்தின் போது இரு அணிகளும் கோல் எதையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.


ஆட்டத்தில் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் நாவற்குழி மகா வித்தியாலய அணி 5:4 என்ற கோல்களால் வெற்றியீட்டி வலய மட்டச் சம்பியனானது.

மூன்றாமிடத்திற்காக இடம் பெறவிருந்த ஆட்டத்தில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அணியும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணியும் மோதுவதாக இருந்தது.

இதில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அணி மைதானத்திற்கு சமூகம் தராமையினால் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (த-23)

# மாற்றுவலுவுள்ளோருக்கான கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம்



மேஜர் ஜெனரல் பியல் அபய சேகரா, இலங்கை மாற்று வலுவுடையோர் கரப்பந்தாட்டச் சம்மேளனத்தின் செயலாளர் கருணாரட்ண விக்கிரமசிங்க, கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த, 57 ஆவது படைத் தளபதி பிரிகேடியர் றோணுக நோவல், 571 ஆவது பிரிவு இராணுவப் பொறுப்பதிகாரி கேணல் ரந்தன ஹத்துறுசிங்க, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-23)


யாழ்ப்பாணம், நவ.8
மத்திய விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாற்று வலுவுள்ளோருக்கான கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் கரைச்சிப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள கிளிநொச்சி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் மாற்றுவலுவுள்ள வீரர்களின் காட்சிப் போட்டிகள் இடம் பெற்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் உத்தியோகத்தர்கள், பயிற்றுநர்கள் மற்றும் புதிதாக இணையவுள்ள மாற்று வலுவுள்ள வீரர்களுக்கான பயிற்சியை ஜேர்மனில் இருந்து வருகை தந்த போதனாசிரியரும் பயிற்றுநருமான பாவாஜியோஜியோ வழங்கினார்.

பயிற்சி முகாம் ஆரம்ப நாள் நிகழ்வில் இலங்கை மாற்று வலுவுடையோர் கரப்பந்தாட்ட சங்கம், இராணுவ மாற்று வலுவுடையோர் கரப்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர்

# சதுரங்கப் போட்டி முடிவுகள்



வடமராட்சி கல்விவலய பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்கச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு

**பெண்கள்**

7 வயதுப் பிரிவு-எஸ். தர்சிகா (ஞானசாரியார் கல்லூரி), பி. செம்புவிணி (நெல்லியடி மெ.மி.த.க.பா), ஆர். மிலோமிகா(கரணவாய் மணியகாரன் தோட்டம் க.த.க.பாடசாலை), ஆர். பிரவிணா (தம்பசிட்டி மெ.மி.த.க.பா சாலை).

8 வயதுப் பிரிவு - பி.சாகித்தியா (வட இந்து ம.க), ரி.துவாரகா(உடுப்பிட்டி ம.க), க.அம்சாயினி (வட இந்து ம.க).

9 வயதுப் பிரிவு- ஆர் மாதுமை(நெல்லியடி மெ. மி.த.க.பாடசாலை), எஸ். யதுசிகா (உடுப்பிட்டி ம.க), ஸ்ரீ. சரண்யா (விக்கினேஸ்வரா க).

10 வயதுப் பிரிவு- ச.வித்தியா (ஞானசாரியார் க),க.சாமந்தி (மெதடிஸ் பெ.உ.பாடசாலை) ,சி.கம்சப்பிரியா(உடுப்பிட்டி ம.க),கு.ரிஷிரேகா (தொண்டமானாறு வி.ம.வித்தியாலயம்).

11 வயதுப் பிரிவு- ஈ.ராஜினி (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை), யோ.சாம்பவி (மெதடிஸ் பெ.உ. பாடசாலை), வி.கஜானா (உடுப் பிட்டி ம.க) , சி.உமையாள்(உடுப்பிட்டி.ம.க).

12வயதுப் பிரிவு- வைஷ்ணவி (வட இந்து ம.க), ம.தயானா (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை), சி.சன்சிகா (உடுப்பிட்டி க).

13 வயதுப் பிரிவு- பு.துளசிகா (மெதடிஸ்த பெ.உ. பாடசாலை), ச.சரணியா (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை) , உ. தனுஷா (வல்வை சிவகுரு வித்தியாலயம்).

**ஆண்கள்**

7 வயதுப் பிரிவு- டி.டெரிக் (தம்பசிட்டி மெ.மி.த.க.பா), கே.அபிசன் (தம்பசிட்டி மெ.மி.த க.பா), எஸ்.நிவிரகன் (உடுப்பிட்டி அ.மி.க), ஏ.அபிராம் (உடுப்பிட்டி அ.மி.க).

8 வயதுப் பிரிவு- பி.மனோச் (நெல்லியடி மெ.மி. த.க.பா), கே.சுதன்ராஜ் (உடுப்பிட்டி அ.மி.க), வி.யினோசன் (உடுப்பிட்டி அ.மி.க.), இ.ரஜீபன் (தம்பசிட்டி மெ.மி.த.க.பா).

9 வயதுப் பிரிவு- ஜெ.ரிசிகோபன் (புற்றளை ம.வி), கே.சுயானந் (தம்பசிட்டி மெ.த. க.பா), ஆர்.சர்மிலன் (கரணவாய் மணியகாரன் தோட்டம் க.த.க.பா.).

10 வயதுப் பிரிவு- இ.தனுசன் (தம்பசிட்டி மெ.மி.த. க.பா), ப.சிவபாலஸ்ரீ (உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை), சு.சுமன (உடுப்பிட்டி சைவ பிரகாச வித்தியாசாலை).

11 வயதுப் பிரிவு- சி.ரமணன் (ஹாட்லிக் கல்லூரி), க.கம்சன் (நெல்லியடி ம. ம.வி), ஜெ.விபுலன் (ஹாட்லிக் கல்லூரி), த.தேனுஜன் (உடுப்பிட்டி அ.மி.க)

12 வயதுப் பிரிவு- பி.ஜொய்சன் (ஹாட்லிக் கல்லூரி), இ.உதயதர்சன் (ஹாட்லிக் கல்லூரி), த.அபிலாஷ் (நெல்லியடி ம.ம.வி), சு.சுதர்சன் (உடுப்பிட்டி அ.மி.க).

13 வயதுப் பிரிவு- ஆர்.லோஜிதன் (ஹாட்லிக் கல்லூரி), ரி.அஜித்ராஜ் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.விதுஜன் (ஹாட்லிக் கல்லூரி). (த-23)

# உதைபந்து காலிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், நவ.8
வடமராட்சிக் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் 16, 18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான காலிறுதியாட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன.

இதில் 16 வயதுப் பிரிவினருக்கான காலிறுதி ஆட்டங்கள், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும், 18 வயதுப் பிரிவு அணியினருக்கான காலிறுதியாட்டங்கள் அல்வாய் மனோகர விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (த-23)

# கத்துக்குட்டி வீரரை புகழும் கவாஸ்கர்

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் கத்துக்குட்டியாக களமிறங்கி உள்ள தமிழக வீரர் அஸ்வின் சிறப்பாக விளையாடி வருவதாக முன்னாள் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

அஸ்வினின் வரவால், நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங், மீண்டும் அணிக்குத் திரும்புவது அரிதாகி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஹர்பஜன் சிங்கின் இடத்தை யார் நிரப்புவார் என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது, தக்க சமயத்தில் அணியில் நுழைந்து, அந்த இடத்தை அஸ்வின் சிறப்பாக நிரப்பி வருவதாக கவாஸ்கர் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஏமாற்றிய சச்சின் டெண்டுல்கர், இந்தத் தொடரிலாவது சதமடித்து சாதனையை நிறைவேற்றுவாரா என்று ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர் - என்றார். (15)

## அரச அதிபர் வெற்றிக் கிண்ணம்

# யாழ்.மாவட்ட செயலக அணி இறுதியாட்டத்தில் மோதத் தகுதி



யாழ்ப்பாணம்,நவ.8
பிரதீபனின் துல்லியமான பந்து வீச்சு கைகொடுக்க இறுதியாட்டத்துக்குத் தெரிவானது யாழ். மாவட்ட செயலக அணி.

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிச் சங்கம் நடத்தும் அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட செயலக அணியை எதிர்த்து வேலணைப் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய வேலணைப் பிரதேச செயலக அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட செயலக அணி 15 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜெயராஜ் 23 ஓட்டங்களையும் மோகன்,பிரதீபன் ஆகியோர் 18 ஓட்டங்களையும், ரஜீவன் ஆட்டம் இழக்காமல் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வேலணைப் பிரதேச செயலக அணிசார்பாக சுகந்தன், மதன், குகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

96 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வேலணைப் பிரதேச செயலக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 30 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சசி 16 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் யாழ்.மாவட்ட செயலக அணிசார்பாக பிரதீபன் 2 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், சதீஸ் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

மற்றைய அரை இறுதியாட்டத்தில் சங்கானைப் பிரதேச செயலக அணி வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (த-23)

# மாற்றுவலுடையோர் கரப்பாந்தாட்ட சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், நவ.8
கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் கரப்பந்தாட்டச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ்.சாதனந்தனும், உப தலைவராக எஸ்.குமாரும், செயலாளராக ஜி.ஆர். கிருஷனியாவும், உப செயலாளராக கே.ஜெயக்குமாரும், பொருளாளராக கே. பரமலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஐந்து நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவாகினர். (த-23)

# முதலாவது இன்னிங்ஸில் சுருண்டது இந்தியா



இந்திய, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி 21 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்துள்ளது. முன்னதாக தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 209 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. நேற்றைய நாளில் மட்டும் 16 இலக்குகள் வீழ்த்தப்பட்டன.

இந்திய, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் டெல்லியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் சமி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

அதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் 256 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது. களத்தில் சந்திரபோல் 111, போச் 19 ஓட்டங்களுடனும் இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டம் ஆரம்பமாகி ஆறாவது பந்து பரிமாற்றத்திலேயே 6 ஆவது இலக்கு வீழ்த்தப்பட்டது. போச் 27 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து களம்புகுந்த அணித்தலைவர் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார். சதமடித்த சந்திரபோல் 118 ஓட்டங்களுடன் வெளியேற மேற்கிந்தியத் தீவுகளின் ஆட்டம் முடிவை நோக்கி பயணமானது. இறுதியில் சகல இலக்குகளையும் இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மேற்கிந்தியத்தீவுகளின் சார்பில் சந்திரபோல் 118, பிறத் வெயிட் 63, போச் 27 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இந்தியாவின் சார்பில் ஓஜா 6, அஸ்வின் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட தொடங்கியது இந்திய அணி. மிகவும் பலமான துடுப்பாட்ட வரிசையையும் அனுபவ வீரர்களையும் உள்ளடக்கிய இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சேவாக், கம்பீர் களமிறங்கினர்.

இந்த ஜோடி மிகவும் வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. ஏட்டிக்குப் போட்டியாக சேவாக், கம்பீர் வேகமான ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டனர். 52 பந்துகளில் இந்திய அணி 50 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தது. 75 பந்துகளில் இணைப்பாட்டமாக 89 ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில் முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. கம்பீர் 46 பந்துகளில் 9 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 55 ஓட்டங்களுடன் வெளியேறினார். இருப்பினும் மறுமுனையில் சேவாக் அதிரடியைத் தொடர்ந்தார். அணி 100 ஓட்டங்களை எட்டிய நிலையில் சேவாக் 41 பந்துகளில் 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 41 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து சதம் கடப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட சச்சின் 7 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். அனுபவ வீரர் லக்ஸ்மன் 1, யுவராஜ் 23 வெளியேறினார். அணித்தலைவர் டோனி, அஸ்வின் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர். இந்திய அணி 154 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து திக்குமுக்காடிக் கொண்டிருந்தது.

டிராவிட், இசாந் சர்மா இணைந்து இந்தியாவை தூக்கி நிறுத்த முயற்சித்தனர். மிகவும் மெதுவாக ஆடிய டிராவிட் 96 பந்துகளில் 61 ஆவது சர்வதேச அரைச் சதத்தை கடந்தார். இறுதியில் 8 ஆவது இலக்குக்காக 49 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் இசாந் 17 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து டிராவிட் 54 ஓட்டங்களுடன் வெளியேற இந்தியாவின் ஆட்டத்துக்கு முடிவு கட்டப்பட்டது.

மேற்கிந்தியத்தீவுகளின் சார்பில் பந்து வீச்சில் சமி 3, ராம்போல், பிஷு தலா 2 இலக்குகளையும் கைப்பற்றி இந்தியாவின் ஆட்டத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தனர்.

95 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியது மேற்கிந்தியத்தீவுகள். இருப்பினும் சறுக்கலுடனேயே மேற்கிந்தியத் தீவுகளின் ஆட்டம் ஆரம்பமானது. ஓட்டமெதனையும் பெறாத நிலையில் கிரன் பவல், அஸ்வினின் பந்து வீச்சில் வெளியேறினார். தொடர்ந்து அணி 17 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 41 பந்துகளை சந்தித்து 2 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிறத் வெயிட், ஓஜாவின் பந்து வீச்சில் வெளியேறினார்.

இந்திய அணியைவிட 116 ஓட்டங்கள் மேலதிகமாகப் பெற்றுக் கொண்டுள்ளது மேற்கிந்தியத்தீவுகள் அணி. இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாளாகும். (15)

# போராடி தோல்வியைத் தவிர்த்து தொடரை தனதாக்கியது பாகிஸ்தான்

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது. இலங்கை அணி வெற்றிபெறும் வாய்ப்பு இருந்த போதிலும் மழை அதனைப் பறித்து விட்டது.

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடர் இடம்பெற்று வந்தது. முதலாவது டெஸ்ட் சமநிலையிலும் இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தான் அணியும் வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் தொடரை சமப்படுத்த இலங்கை அணி வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களம் புகுந்தது. சார்ஜா மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை அணி அணித்தலைவர் டில்ஷான் மற்றும் சங்ககாரவின் சிறப்பான துடுப்பாட்டத்தின் உதவியுடன் சகல இலக்குகளையும் இழந்து 413 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சங்ககார 144, டில்ஷான் 92, மஹேல, கௌசல சில்வா 39, ஹேரத் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பில் சுழற்பந்து வீச்சாளர் அஜ்மல் 4, வேகப் பந்து வீச்சாளரான உமர்குல் 3 மற்றும் யுனைட் ஹான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி சகல இலக்குகளையும் இழந்து 340 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் யுனிஸ்கான் 122, மிஷ்பா 89, அஷார் அலி 53, அஜ்மல் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இலங்கையின் சார்பில் வெலகெதர 5 இலக்குகளையும், ஹேரத் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

73 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை நேற்று முன்தினம் தொடங்கியது இலங்கை அணி. நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் 53.4 பந்து வீச்சுக்களில் 5 இலக்குகள் நஷ்டத்திற்கு இலங்கை அணி 164 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பரணவிதாரன 66, சீகுகே குலசேகரா 4 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.


இறுதி நாள் ஆட்டம் மழை காரணமாக நேற்றையதினம் தாமதமாகவே ஆரம்பமானது. நேற்றைய ஆட்டம் ஆரம்பமானதிலிருந்து பரணவிதாரன வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தார். மறுமுனையில் ஆடிய சீகுகே குலசேகர மேலதிகமாக 3 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழக்க இலங்கை அணி 178 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது. இறுதியில் 58 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 6 இலக்குகளை மாத்திரம் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாகஅறிவித்தது. பரணவிதாரன 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தலிருந்தார்.

255 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம்புகுந்தது பாகிஸ்தான் அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய மொஹமட் ஹபீஸ், தௌபீக் உமர் இருவரும் வெற்றியிலக்கை விரைவாக அடைவதற்காக ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டனர். இருப்பினும் அணி 20 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹபீஸ் 13 ஓட்டங்களுடனும், அடுத்து அஷார் அலி 7 ஓட்டங்களுடன் வெளியேற பாகிஸ்தான் 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறியது.

அடுத்து நுழைந்த யுனிஸ், உமருடன் இணைந்து தோல்வித் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இருப்பினும் இலங்கையின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் அணி 57 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் யுனிஸ் 11 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த அணித்தலைவர் மிஷ்பாவும் தடுப்பாட்டத்திலேயே ஈடுபட்டார். மேலதிக இலக்கு இழப்பை தடுக்க பாகிஸ்தான் அணி மிகவும் கடுமையாகப் போராடியது. 41.1 பந்து வீச்சுக்களில் 77 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பாகிஸ்தானின் 4 ஆவது இலக்கு வீழ்த்தப்பட்டது. தௌபீக் உமர் 39 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து நுழைந்த அஷாட் சபிக், மிஷ்பாவுடன் இணைந்து தடுப்பாட்டத்தை தொடர்ந்தார். இலங்கை அணி களத்தடுப்பை நெருக்கமாக்கியது. இருப்பினும் பாகிஸ்தான் அணி மேலதிகமான இலக்கு சரிக்கப்பட்டு தோல்வியடைவதை தவிர்க்க மிகவும் கடுமையாக போராடியது.

இறுதியில் 57 பந்து பரிமாற்ங்களில் பாகிஸ்தான் அணி 4 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மிஷ்பா 86 பந்துகளில் 9 ஓட்டங்களையும், சபிக் 55 பந்துகளில் 7 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் இலங்கை சார்பில் ரன்டீவ், வெலகெதர, ஹேரத் தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர்.

இதன் மூலம் மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரை பாகிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஆட்டநாயகனாக இலங்கையின் சங்ககாரவும் தொடர் ஆட்டநாயகனான பாகிஸ்தானின் அஜ்மலும், இலங்கையின் சங்ககாரவும் தெரிவானார்கள். (15)



# உசைன் போல்ட் இறுதிப்பட்டியலில்

இந்த ஆண்டின் சிறந்த தடகள வீரர் தேர்வுக்கான, இறுதிப்பட்டியலில் ஜமைக்காவின் 'ஒலிம்பிக் சம்பியன்' உசைன் போல்ட் இடம் பெற்றுள்ளார்.

சர்வதேச தடகள கூட்டமைப்பு சார்பில், ஒவ்வொரு ஆண்டும் சிறந்த வீரர், வீராங்கனைக்கான விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான பட்டியலில் கடைசி மூன்று பேர் தேர்வு செய்யப்பட்டனர். இதில் ஆண்கள் பிரிவில் ஜமைக்காவின் உசைன் போல்ட், இவரது சக வீரர் யோகன் பிளேக், நீண்ட தூர ஓட்ட வீரர் டேவிட் ரூடிஷா (கென்யா) ஆகியோர் இடம் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் குண்டு எறிதல் உலக சம்பியன் வலெரியே அடம்ஸ் (நியூசிலாந்து), கென்யாவின் செருயாட் (ஓட்டம்), ஆஸ்திரேலியாவின் சாலி பியர்சன் (தடை ஓட்டம்) இடம் பெற்றுள்ளனர். (15)

# HAPPY 60th BIRTHDAY

**Mrs Sivarani Rajaratnam**

*(Retired People's Bank Staff)*



May this beautiful day be different from the rest of your birthdays in every good way. may all your fantasies come true. Have a lovely birthday mother.

**Best wishes from-**
**Loving son-Daughter in low,**
**Daughter, Grand children son in low.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 07.11.2011 அன்று

**HNDE**
***(HIGHER NATIONAL DIPLOMA IN ENGLISH)***

பட்டம் பெற்ற

**செல்வி**
**லதாங்கி தர்மேந்திரன்**

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வு நிலையடையப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
Gateway Staff, Chavakachcheri.

## செல்வச் சந்நிதியில் திருக்கல்யாண விழா

வடமராட்சி, நவ.8

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் முருகப் பெருமான் - வள்ளியம்மன் திருக் கல்யாணத் திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேகப் பூசை நடைபெற்று வள்ளியம்மை திருமணப் படலம் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 மணியளவில் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று கந்த புராணப் படன பூர்த்தியுடன் நிறைவடையும்.

(எ)

## பரிசில்நாள்

யாழ்ப்பாணம், நவ.8

சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயத்தின் பரிசில் நாள் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ச. தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி உப பீடாதிபதி எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க. சண்முகலிங்கமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(த)

**ஊர்க்குஞ்சுகள் விற்பனைக்கு**

தடுப்பூசி ஏற்றப்பட்ட உயர்தர (ஒரு நாள், ஒரு கிழமை, மூன்றுகிழமை, ஒரு மாதம்) ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை ரூபா 75/= இல் இருந்து- வீடுகளிற்கே கொண்டு வந்து தரப்படும்.
தொடர்பு:0217200616.

**Dr.Pimple**
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
Care



முகப்பருக்களுக்கு
**International Skin Peeling**
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு

எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா- 24,25 ஆகிய திகதிகளில்
முன் பதிவுகளுக்கு-021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை சரஸ்வதி



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வட்டு. கிழக்குசித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சரஸ்வதி கடந்த 06.11.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் -பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், விநாயகமூர்த்தி, வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சக்திதாசன் (ஓய்வுபெற்ற மருந்தாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), தர்மராஜா (லண்டன்), ஸ்ரீமகாதேவி, சிவஞானதேவி ஆகியோரின் அன்புத் தாயும், பேரின்பரஜனி (ஆசிரியை- அராலி இந்துக் கல்லூரி), அமிர்தபவானி (லண்டன்), இராஜராம் (ஓய்வுபெற்ற முகாமையாளர், பல. நோ.கூ.சங்கம், சங்கானை), விஜயவேல் (கிராம சேவையாளர், வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமியும், சுபாங்கன், சுகந்தன், சுரேசன்- சுபகரி, அருணன், அமலன், மயூரன், செந்தூரன், சுமதிலா, கஜன், பிரியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.

தகவல்:
செ. சக்திதாசன் (மகன்).

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

Care

**DR.HAIR**
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புழுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-24,25 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு- 021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

## மரண அறிவித்தல்



**புண்ணியமூர்த்தி சேதுப்பிள்ளை**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய மருந்துகலவையாளர், காலஞ் சென்ற தனுக்கோடி புண்ணியமூர்த்தி அவர்களின் அன்பு மனைவி சேதுப்பிள்ளை 04.11.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகளும் தனுக்கோடி- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பண்டிதர் கந்தையா (இளைப்பாறிய அதிபர்), வேலாயுதம், மார்க்கண்டு (நில அளவையாளர்), மாணிக்கம், மற்றும் நடராசா (ஓய்வு பெற்ற கணக்காளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகதாசன் (பகுதித்தலைவர்- பொறியியல் பகுதி, விரிவுரையாளர்- தொழில் நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்), கிருஷ்ணதாசன் (முன்னாள் தொழில் நுட்ப உத்தியோகத்தர்-அமெரிக்கா), யோகரெட்ணம் (ஜேர்மனி), குமாரரட்ணம்(கனடா), கோமதி(நோர்வே), கிருபாகரன் (நோர்வே), தேவகரன் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்- பிரதேசசபை,நெடுந்தீவு), ஆகியோரின் அன்புத்தாயாரும் ஸ்ரீதேவி(உப அதிபர் யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), லலிதினி (முன்னாள் விரிவுரையாளர்), குணபாலா (பொறியியலாளர்), தங்கரானி( முன்னாள் ஆசிரியை), காலஞ்சென்ற சந்திரவதனி (முன்னாள் ஆசிரியை), மற்றும் விமலினி (முன்னாள் ஆசிரியை), சுரேகா (முன்னாள் ஆசிரியை), சாந்தினி(ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, முருகேசு, அமராவதி, கதிரவேலு மற்றும் குணரத்தினம் (ஓய்வுபெற்ற மாநகரசபை கணக்காய்வாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கிரிசாளினி, சர்மிலன், கௌசிகா, தினேசியா, டர்சியா, சுபானுகா, சகீதன், சகீதா, பிரணன், லம்போதரர், ஜெயதீபா, சுபதீபா, கஜவர்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30மணியளவில் சாஸ்திரியார் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/1 சாஸ்திரியார் வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

**பண்டிகைக் கால சிறப்பு விற்பனை**

*புதிதாக அறிமுகப் படுத்துகின்றோம்*

**SHARP** DIGITAL PHOTOCOPIER-AR-5618



இப்பொழுது மிகவும் விரைவானது.
ஒரு நிமிடத்துக்கு 18 பிரதிகள்
A3 Colour Scanning
64 mb Memory
ஒரு வருடம் / 60000 பிரதிகளுக்கு உத்தரவாதம்.
01 வருட இலவச விற்பனைக்குப் பிந்திய சேவை.

**இப்பொழுது**
**99000+ vat மட்டும்**

அத்துடன் பரிசாக Fax இயந்திரம் அல்லது Olympus Digital Camera (12mp) ஒன்றை இலவசமாக பெற்றிடுங்கள்.



**Three In one: Colour Scanning/ Printing/ Photocopy**



தொடர்புகளுக்கு-
**BROWN & COMPANY PLC- IBS**
இன் அங்கீகரிக்கப்பட்ட ஏக முகவர்
**DIGITAL ELECTONICS**

இச்சலுகை November 30 வரை மட்டுமே

62/16, Stanley Road, Jaffna.
T.P- 0212224040

No.05, Dipot Road, Kilinochchi.
T.P- 0212285678

ஜனா- 0772078636, ரவீன்- 0776623824, கிஷோ- 0772299324

## பிரபாகரன் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவர் சோலை கேசவன் (வயது - 55).

தீவிர அ.தி.மு.க கட்சிக்காரரான இவர், பழனி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகத்தின் அருகில் பத்திரம் எழுதி வருகிறார்.

கடந்த 2001 உள்ளூராட்சித் தேர்தலில், அ.தி.மு.க சார்பில் பழனி நகராட்சி முதலாவது தொகுதி உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர் 2006 தேர்தலில் அதே தொகுதியில் போட்டியிட்டு தோற்றுப்போனார்.

இந்த முறை அ.தி.மு.கவின் சார்பில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்காமல் போனதால், சுயேச்சையாகப் போட்டியிட்டு அ.தி.மு.க வேட்பாளரைக் காட்டிலும் 120 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி நகர மன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுக்கும் போது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரால் வளர்த்து உருவாக்கப்பட்ட, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவரான தம்பி பிரபாகரன் அவர்களின் விடுதலை வேட்கையின் மீது ஆணையாக நான், எனக்கு வாக்களித்த மக்களுக்கும், இந்த நாட்டுக்கும், நாட்டின் இறையாண்மைக்கும் கடமை தவறாமல் பணியாற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன் என்று பிரமாணம் எடுத்துள்ளார்.

உங்களுக்கு எப்படி பிரபாகரன் மீது இவ்வளவு பற்றுதல் என்று சோலை கேசவனிடம் கேட்டபோது...

1980 - 86 ஆம் ஆண்டுகளில் ஈழ விடுதலைப்போர் தொடங்கிய காலகட்டங்களில், தலைவர் எம்.ஜி.ஆர்.தான் பிரபாகரனை வளர்த்தார்.

பிரபாகரனின் தாய் எம்.ஜி.ஆர். தந்தை இந்திராகாந்தி. இவர்களின் வளர்ப்பால் தான் அந்த இயக்கம் நம் தமிழினத்துக்கு விடுதலையும், தனி நாடும் என்னுடைய வாழ்நாளிலேயே வாங்கிக் கொடுக்கும் என்று நம்பியிருந்தேன்.

ஆனால், சோனியா என்ற ஒருவரால் என்னைப் போன்ற கோடான கோடி தமிழ் மக்களின் கனவும், விருப்பமும் நாசமாகிப் போனது. எப்படிப் போனாலும் பிரபாகரனின் விடுதலை வேட்கை ஒருபோதும் தோற்காது. அது நம் இனத்துக்கு வெற்றியைத் தேடிக்கொடுக்கும். எம்.ஜி.ஆரின் எந்தத் திட்டமும் தோற்றது கிடையாது. அவரால் வளர்க்கப்பட்ட - வழிகாட்டப்பட்ட யாரும் தோற்கவும் மாட்டார்கள்.

இன்றில்லை. நாளை நிச்சயம் தமிழீழம் மலரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. பிரபாகரன் அதைச் செய்து முடிப்பார். அவரது விடுதலை வேட்கை பலம் மிகுந்தது. அந்த விடுதலை வேட்கையை நானும் நம்புகிறேன். அதனால்தான் நான் பிரபாகரனின் விடுதலை வேட்கையின் மீது ஆணையாகப் பதவி ஏற்றுக்கொண்டேன் - என்று கூறினார் கேசவன். (ஒ-சி)

## இலங்கை அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தீர்கள். ஆனால், தமிழக அரசு மற்றும் மத்திய அரசின் இதுபோன்ற கவலைகள் அனைத்தும், இலங்கை அரசைப் பொறுத்தவரை, செவிடன் காதில் ஊதியது போல, எந்தவித பயனையும் அளிக்கவில்லை. கடந்த மே மாதத்தில் இருந்து, இதுவரை, 22 தாக்குதல் சம்பவங்கள், தமிழக மீனவர்கள் மீது நடந்துள்ளன.

இதில், கடந்த மாதம் 10ஆம் திகதி தங்களுக்கு நான் கடிதம் எழுதிய பின், ஆறு பெரிய தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன. தமிழக மீனவர்களைப் பாக்கு நீரிணைப் பகுதியில், மீன்பிடித் தொழிலில் ஈடுபட விடாமல் தடுக்க வேண்டும் என்பதற்காக, அவர்களை அச்சமூட்டும் திட்டத்துடன், இலங்கைக் கடற்படையினரும், கூலிப்படையினரும் திட்டமிட்டு, ஒரே மாதிரியான தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

கடும் நடவடிக்கை தேவை

மத்திய அரசிடம் தொடர்ந்து முறையிட்ட பின்பும், வெளியுறவு அமைச்சின் மூலம் முயற்சிகளை மேற்கொண்ட பின்பும், இதுபோன்ற தாக்குதல்கள் தொடர்வதால் தமிழகம் முழுவதும் மீனவ சமுதாயத்தினரிடம் மிகுந்த கவலையும் அசாதாரண சூழ்நிலையும் நிலவி வருகிறது. எனவே, இலங்கை அரசுக்கு எதிராக, கடுமையான நிலையை பிரதமர் எடுக்க வேண்டும்.

மீனவர்கள் மீது இதுபோன்ற தாக்குதல் தொடரக் கூடாது என, கடுமையான வார்த்தைகள் மற்றும் நடவடிக்கைகள் மூலம், தங்களது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும். இப்பிரச்னையைத் தமிழகப் பிரச்னையாக ஒதுக்கிவிடாமல், தேசியப் பிரச்னையாகக் கருத வேண்டுமென, ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ளதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

- இவ்வாறு, ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

(உ)

## 348 பட்டதாரிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என.யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதை அடுத்து முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான நியமனக் கடிதங்களும் அடுத்த சில தினங்களுக்குள் வழங்கப்பட்டு அவர்களும் 14ஆம் திகதி பதவி ஏற்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் பட்டதாரி வெற்றிடங்களை நிரப்பும் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 80 பட்டதாரி களுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த 70 பட்டதாரி களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 71 பட்டதாரிகளுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 53 பட்டதாரிகளுக்கும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 74 பட்டதாரிகளுக்கும் விரைவில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

நியமனக்கடிதங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் எதிர்வரும் டிசெம்பர் 13 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி கடமையை பொறுப்பேற்கத் தவறும் பட்சத்தில் இந்த நியமனம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாகிவிடும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிய முறையில் நியமனங்களை ஏற்றுப் பதவிப் பொறுப்புக் களை ஏற்றுக் கொள்ளாதவர்களின் வெற்றிடங் களுக்கு காத்திருப்போர் பட்டியலில் இருந்து பொருத்தமான வர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்படி நியமனம் வழங்குவதற்கான போட்டிப் பரீட்சை கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றது.இதில் 5100 பட்டதாரிகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.(த-11)

## வீதி விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தின் தலைவரும் யாழ். போதனா வைத்திய சாலை சத்திர சிகிச்சை நிபுணருமான டாக்டர் எஸ். ரவிராஜ் தலைமையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இதில் சங்கத்தின் செயலாளரும் உணர்வளிப்பு வைத்திய நிபுணருமான எஸ்.பிறேமகிருஷ்ணா, சங்கத்தின் முன்னாள் செயலாளரும் உளநல மருத்துவருமான எஸ்.சிவயோகன், இதயநோய் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் பூ.லக்ஷ்மன் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது அங்கு மேலும் கூறப்பட்ட விடயங்கள் வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. வீதி விபத்துக்களில் இளம் வயதுடையோரின் மரணங்களே அதிகமாக இருக்கின்றன. எமது உயிர்களை நாம் தான் பாதுகாக்க வேண்டும்.

எனவே வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக அடுத்த வருடம் ஜனவரி மாதம் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அமுல்படுத்தவுள்ளோம். பல்கலைக்கழக மருத்துவ மாணவர்கள், கிராம அலுவலர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் யாழ். மாவட்டத்தின் பொலிஸ் பிரிவு ரீதியாக மக்களைச் சந்தித்து இது தொடர்பான விழிப்புணர்வை நாம் வழங்கவுள்ளோம்.

✱ யாழ். போதனா வைத்தியசாலையில் விசேட வைத்தியக் கூறுகள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளன. குறிப்பாக இதய சத்திர சிகிச்சைப் பிரிவு தேவையாக உள்ளது. இந்தப் பிரிவுக்கான வைத்திய நிபுணர்கள் ஏற்கனவே தயாராக இருக்கின்றனர்.

✱ உட்கட்டமைப்பு வசதிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் போதுமானதாக இல்லை. அவை ஏற்படுத்தப்படவேண்டும். வைத்தியர்கள், தாதியர்களுக்கான விடுதி வசதிகள் தேவை.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஆய்வு நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இதற்கான உதவிகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம் - என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (த-14)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயால் பாதிக்கப்பட்ட 16 பேர் டெங்கு நோய்க்கு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த மாதத்தில் நேற்றுவரை நான்கு பேர் இந்நோய்க்கு ஆளாகியுள்ளனர். இந்த 20 பேரில் நால்வர் சிறுவர்கள்.

மன்னார், பனங்கட்டிக்கொட்டு கிராமத்தைச் சேர்ந்தவர்களே டெங்கு நோய்க்குக் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

இதேவேளை ஒருவாரத்துக்கு முன்னர் கொழும்பிலிருந்து வந்த குழுவொன்று மன்னார் வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது மற்றும் டெங்கு நோய் ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த என்ன வழிகளை மேற்கொள்வது என்பது தொடர்பாக கருத்தமர்வு ஒன்றை நடத்தியிருந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ-எ-4)

## மரண அறிவித்தல்கள்

### குழந்தைவேலு கணபதிப்பிள்ளை



மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குழந்தைவேலு கணபதிப்பிள்ளை நேற்று (07.11.2011) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு- சீதாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிநாதன்- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கலட்சுமியின் அன்புக் கணவரும், றமணலேகா, ஸ்ரீறமணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தங்கச்சியம்மா, சின்னத்தம்பி, பொன்னம்பலம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, இலட்சுமி, வெற்றிவேலு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2011) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்டைதீவு, 6ஆம் வட்டாரம்.

தகவல்: குடும்பத்தினர்.

### வைத்திலிங்கம் கனகசிங்கம்



[முன்னாள் கோப்பாய் உத்தியோகத்தர் - ப.நோ.கூ. சங்கம், காரைநகர்]

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், காரைநகர் பயிரிக்கடலை வசிப்பிடமாகவும், காரைநகர் நடுத்தெருவில் வசித்து வந்தவருமான வைத்திலிங்கம் கனகசிங்கம் நேற்று (07.11.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுந்தரம்மாவின் பேறாமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அப்பர் - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், கருணாநிதி (நீர்ப்பாசனப் பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்), கலைச்செல்வன் (ஆசிரியர், யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), கலைச்சந்திரன் (கமநல சேவைநிலையம், காரைநகர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவனேஸ்வரி (ஆசிரியை, தாவடி இ.த.க பாடசாலை) அபிராமி (முகாமைத்துவ உதவியாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்), ஸ்ரீ வனிதா ஆகியோரின் அன்பு மாமனும், மயூரன், பிரவீனன் ஆகியோரின் அருமைப் பேரனும், தனலட்சுமி, காலஞ்சென்ற கனம்மா மற்றும் லோகாம்பிகை, அரியமலர், தன்பாலசிங்கம் (V.T.S, கந்தானை), உருத்திரசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற புஸ்பமலர், தருமகுலசிங்கம் (லண்டன்), சோதிமலர் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காரைநகர் நடுத்தெரு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடுத்தெரு, காரைநகர்.

தகவல்: குடும்பத்தினர்.

## காளை மாடு ஏல விற்பனை

குறியில்லாத உரிமை கோரப்படாத காளைமாடு (நாம்பன்) நாளை (09.11.2011) புதன்கிழமை மு.ப 10 மணிக்கு துன்னாலை குடவத்தைக் கோயிலுக்கு அருகில் பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும்.

செயலாளர், துன்னாலை கிழக்கு கமக்காரர் அமைப்பு.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 09 |
| 05 | 10 |
| 1941 | 2011 |



### திருமதி இராஜகிளி பரஞ்சோதி

கடந்த 09.10.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது தாயாரின் திடீர் மறைவினால் நாம் துயரமடைந்திருந்த வேளையில் எமது இல்லம் நாடி வந்து எமக்கு அனுதாபம் தெரிவித்தோருக்கும் நேரிலும் தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் மலர் வளையம் வைத்தும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு [08.11.2011] இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கண்டி வீதி, அரியாலை(656), யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், யாழ்ப்பாணத்தின் நீர்ப்பாசன பொறியியலாளர் எந்திரி க.கருணாநிதி அவர்களின் அன்புத் தந்தை

அமரர் வைத்திலிங்கம் கனகசிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

# 5 இணையத்தளங்களுக்கு இலங்கை அரசு தடை

அரசுக்கு எதிராக, மக்களுக்கு எதிராக, அரசியல் தலைவர்கள் அதிகாரிகளுக்கு எதிராகச் செயல்படுவதாகக் கூறி 5 செய்தி இணையத்தளங்களுக்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது.

இலங்கை செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் கனேகல, இந்தத் தடையை அறிவித்துள்ளார்.

அந்த 5 செய்தி இணையதளங்கள் வருமாறு:
www.lankaenews.com, srilankamirror.com, srilanka-guardian.com, paparacigossip9.com and www.lanka-waynews.com

ஆனால், இலங்கை அரசின் இந்தச் செயலை ஊடக நிறுவனங்கள் விமர்சித்துள்ளன. அமெரிக்கத் தூதரகம், இதனை ஜனநாயக விரோத நடவடிக்கை என்று கூறியுள்ளது.

இலங்கை அரசின் இணையத்தளங்கள மீதான தடையை சுதந்திர ஊடக மையமும் கண்டித்துள்ளது. அந்த அமைப்பு தனது கண்டனத்தில் உலகில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற ஊடக நடைமுறைகளுக்கு எதிராக இலங்கை அரசு செயற்படுகிறது எனக் குற்றம் சுமத்தப்படுகிறது. இலங்கை சட்டப்படி, எந்த செய்தி நிறுவனங்களையும் தடை செய்ய வழியில்லை என்றாலும், அவற்றின் மீது அவதூறு வழக்குத் தொடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படிக்கை செய்யப்பட்டு அவர்களுக்கு ஆதரவளிப்பது குறித்துத் தமது கட்சி அடுத்த வாரம் கூடி ஆராயும் என்று மனோ கணேசன் தெரிவித்தார். முன்னதாக, கொழும்பு மாநகர சபையின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் ஆதரவைக் கேட்டு மனோ கணேசனுடன் ஐ.தே.கட்சித் தலைவர் பேச்சு நடத்தியிருந்தார். இத்தகைய உத்தியோகபற்றற்ற பேச்சுகளாலும், உத்தரவாதமில்லாத பதில்களாலும் ஜனநாயக மக்கள் முன்னணியினால் உறுதியான தீர்மானம் எதனையும் எடுக்க முடியாது என்று ரணிலிடம் அப்போது தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தார் மனோ கணேசன். இதனையடுத்தே ரணிலின் கையெழுத்துடன் உத்தியோகபூர்வ கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மாநகர சபையின் நிலையியற் குழுக்கள் உட்பட்ட பல்வேறு நிர்வாக விடயங்களை ஆரோக்கியமாக முன்னெடுப்பதற்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் ஆதரவு தேவையென்பதால் அதுகுறித்து பரிசீலித்து தீர்மானத்தை எடுக்குமாறு ஐ.தே.கட்சித் தலைவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மனோ கணேசன் தெரிவித்ததாவது:-

ஐ.தே.கவுடன் நாம் ஏற்படுத்துகின்ற புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிற்சேர்க்கை பட்டியலின்படி எமது கட்சி உறுப்பினர்கள் மாநகர சபையில் பல்வேறு நிலையியற் குழுக்களின் தலைவர்களாகவும் கணிசமான அங்கத்தவர்களாகவும் தெரிவு செய்யப்பட வேண்டும்.

ஐ.தே.கவுடனான எமது புரிந்துணர்வு உடன்படிக்கை வரைபில் உள்ள விடயங்கள் என்ன என்பதை இப்போது முழுமையாகப் பகிரங்கப்படுத்த முடியாது.

இந்த விவகாரம் தொடர்பில் செவ்வாய்க்கிழமை (இன்று) காலை கொழும்பிலே கூடும் எமது கட்சியின் தலைமைக்குழு ஆராய்ந்து மாநகர சபையில் நமது அங்கத்தவர்கள் வாக்களிக்க வேண்டிய முறைமைப்பற்றி தீர்மானிக்கும்.

ஐ.தே.கவுடன் நாம் ஏற்படுத்தவுள்ள உடன்படிக்கை பற்றி எமது கட்சியின் அரசியற்குழு அடுத்த வாரம்கூடி ஆராயும். தனது லண்டன் பயணத்தை முடித்து ஐ.தே.க. தலைவர் நாடு திரும்பியவுடன் இந்த உடன்படிக்கை கையெழுத்தாகும்.

எது எப்படியிருந்தாலும் செவ்வாய்க்கிழமை (8ஆம் திகதி) நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கொழும்பு மாநகர சபையில் ஆதரவு வழங்குவோமானால் அது இந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிவரை மாத்திரமே செல்லுபடியாகும்.

அடுத்த வருடத்துக்கான நிலையியற்குழுக்கள் ஜனவரி மாதம் தெரிவுசெய்யப்படும்போது எமது நிலைப்பாடுகளை மீண்டும் பரிசீலனைக்கு எடுப்போம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மாநகரசபை முதல்வர் ஏ.ஜே.எம்.முஸாம்மிலுக்கும் நமது கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பு மாநகரசபையின் முதலாம் அமர்வு நிறைவு பெற்ற பின்னர் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க எனக்கு எழுதியுள்ள கடிதத்திற்கான அரசியல் ரீதியான பதில் அவருக்கு அனுப்பப்பட்டு ஊடகங்களுக்கும் வழங்கப்படும்-என்றார்மனோ.

## அரசு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய அரசு முன்வரும் என்று நினைக்கின்றேன். அப்படி திருத்தங்களைச் செய்யாத பட்சத்தில் அரசுக்கு எதிரான போராட்டம் புதிய வியூகங்களுடன் நடத்தப்படும். அதனை நேரம் வரும்போது வெளிப்படுத்துவேன்.

- இவ்வாறு நேற்று அதிரடியாக தெரிவித்திருக்கிறார் ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

நேற்றுக் கட்சியின் நடாளுமன்றக் குழுக்கூட்டம் நடைபெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தாம் நடத்திய சந்திப்புக் குறித்து இந்தக் கூட்டத்தின்போது ரணில் விரிவாக விளக்கமளித்தார். அதேபோல், அந்தச் சந்திப்புக்குறித்து கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் ரணில் பதிலளித்தார்.

நட்டத்தில் இயங்கும் கம்பனிகளைப் பொறுப்பேற்பது என்ற போர்வையில், இலாபத்தில் இயங்கும் சில கம்பனிகளைக் கைப்பற்ற அரசு திட்டமிட்டுள்ளதாக இங்கு குற்றஞ்சாட்டிய ரணில் விக்கிரமசிங்க, இந்தச் சட்டம் அரைகுறையான சட்டம் என்றும் சாடினார்.

அவசர அவசரமாக இந்தச் சட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்காமல் நன்கு ஆராய்ந்து சில திருத்தங்களைச் செய்யவேண்டுமெனத் தாம் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாகவும் இந்தக் கோரிக்கை உதாசீனப்படுத்தப்பட்டால், அரசுக்கு எதிராக எப்படியான போராட்டங்களை நடத்துவதென்பது பற்றிய வியூகத்தை வகுத்திருப்பதாகவும் ரணில் இங்கு கடும் தொனியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறியவை வருமாறு:-

செவனகல, பெல்வத்த ஆகிய இரண்டு சீனித் தொழிற்சாலைகளும் இலாபத்திலேயே இயங்குகின்றன. நட்டத்திலல்ல என்பதை ஜனாதிபதியிடம் நான் சுட்டிக்காட்டினேன்.

அதற்கு ஜனாதிபதி, "குறித்த இரண்டு நிறுவனங்களால் நாட்டின் சாராய உற்பத்தி அதிகரிக்கின்றது. சீனித் தொழிற்சாலையிலேயே இவ்வாறு சாராயம் உற்பத்தி செய்வதானது இலங்கை முதலீட்டுச் சபையின் நிபந்தனைகளை மீறும் செயலாகும்'' என்றார்.

எனினும் "குறித்த இரண்டு சீனித் தொழிற்சாலைகளும் நட்டத்தில் இயங்கவில்லை. அத்துடன் சீனி உற்பத்தியின்போது சிறிதளவு மதுசாரம் உற்பத்தியாவது தடுக்க முடியாது. அதனைப் பயன்படுத்தி குறித்த இரண்டு நிறுவனங்களும் நீங்கள் கூறுவது போன்று சாராய உற்பத்தியிலும் ஈடுபடவில்லை.எனவே அந்த நிறுவனங்கள் இலங்கை முதலீட்டுச் சபையின் நிபந்தனைகளை எவ்வகையிலும் மீறவில்லை'' என்று ஜனாதிபதியிடம் நான் சுட்டிக்காட்டினேன்.

இதேவேளை, நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மாத்திரமே அரசு, அரசுடைமை செய்ய முடியும். இதுவே யதார்த்தமானதும் ஏற்றுக் கொள்ளக்கூடியதான நடைமுறையாகும். எனினும் இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 35ற்கும் மேற்பட்ட தனியார் கம்பனிகளில் பல கம்பனிகள் இலாபத்தில் இயங்குகின்றன. அதனையும் அரசுடமையாக்க திட்டமிடுகிறீர்கள். எனவே இந்தச் சட்மூலத்தில் திருத்தங்கள் தேவை. அதாவது இலாபத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசுடைமையாக்க முடியாது என்பதையும், அந்நிறுவனங்களை பெயர் குறிப்பிட்டு நிறுவனங்களை அரசுடைமையாக்குவது முடியாது என்பதையும் அச்சட்டமூலத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

இல்லாவிட்டால் இந்தச் சட்டமூலத்தை எதிர்ப்பதை விட வேறு வழியில்லை என்றேன்.இதனை நன்கு செவிமடுத்த ஜனாதிபதி எதுவுமே கூறவில்லை.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# போருக்கு பின்னரான இலங்கையை கட்டியெழுப்ப புதிய திட்டம் அவசியம்

கொழும்பு, நவ. 08

போருக்குப் பின்னர் இலங்கையைக் கட்டியெழுப்ப சிறந்த திட்டங்கள் அவசியம் - என்று வீடமைப்பு, பொறியியல், நிர்மாணம் மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

போருக்கு பின்னர் நாடு மீண்டெழ முதற்கட்டமாக தேசிய பௌதீக செயற்றிட்டத் திணைக்களத்தால் தேசிய பௌதீக திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

2030 ஆம் ஆண்டுவரை நாட்டின் நன்மைக்கென நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்து அரச மற்றும் தனியார் துறையினருக்கு தெளிவுபடுத்தவுள்ளனர்.

## அமைச்சர்களுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

அதேபோன்று அமைச்சர்களுக்கு வழங்கப்படும் அத்தனை வசதிகளும் சிரேஷ்ட அமைச்சர்களுக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகிறது.

இதேவேளை, எதிர்வரும் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் எனக் கூறப்படுகின்ற அமைச்சரவை மாற்றங்களின்போது புதிய இளைய தலைமுறையினருக்கு அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விளையாட்டுத்துறை அமைச்சு, தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு போன்ற பிரதியமைச்சுகள் இல்லாத அமைச்சுகளுக்குப் பிரதி அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், ஆளுங்கட்சியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு இம்முறை பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-சி)

**வீட்டுப் பணிப் பெண் தேவை**

வயோதிபப் பெண் ஒருவரினதும், மையன் ஒருவரினதும் உதவிக்கும் வீட்டுப் பராமரிப்புக்கும் வீட்டுப்பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
70/10, அரசடி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம். 021 - 222 - 3171

**விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு, இராச வீதியில்
5 பரப்பிலமைந்த வீடும் காணியும்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773101371

**தேவை**

யாழ்.நகரில் அமைந்துள்ள நகைக் கடை ஒன்றுக்கு கணக்கு வேலை செய்வதற்கு ஆள்தேவை.
(வயது 45 இற்கும் 55 இற்கும் இடைப்பட்டவர்)
தொடர்பு: 0770259825

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்வி நிறுவன பௌதிகவியல் ஆசிரியர் க.கலைச்செல்வனின் (செல்வன்) அன்புத் தந்தை

அமரர் வைத்திலிங்கர் கனகசிங்கர்

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம், ஆசிரியர் குழாம்
THE SCIENCE CORNER, THE SCIENCE POINT

**SAAMSON ENGLISH 3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி**

இது வரை காலமும் நீங்கள் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கருதி புத்தகத்தைப் படித்தும், கொப்பியில் எழுதியும், இலக்கணத்தைக் கற்றதாலுமே அது உங்களுக்கு கடினமாக இருந்தது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சியானது ஒரு மனிதன் தன் தாய்மொழியை எவ்வாறு பழகிக் கொண்டானோ அதனை அடிப்படையாகக் கொண்டதாகும்.

முற்று முழுதாக ஆங்கிலம் பேசப்படுகின்ற சூழலில், ஆங்கிலம் பேசுபவர்களுடன் இணைந்து நீங்களும் 3 மாதத்தில் தமிழைப்போல ஆங்கிலம் பேச வேண்டுமா?

புதிய பயிற்சிப்பட்டறை ஆரம்பம்: 12.11.2011

(ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்)

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 09 11 பிரிவு III 02-04
பிரிவு II 11-01 பிரிவு IV 04-06

3 மாத கட்டணம் 3000/=

SAAMSON ENGLISH
279, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 077 621 4567

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
**BIT Semester 1, 3, 5**
10 years of experience in BIT
பதிவுகளுக்கு முந்துங்கள்....
MIS Call Us : 0776577359
Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)
74, சபாபதி வீதி தலையாழி பிறப்பு யாழ்ப்பாணம்.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
**Practical Web Development**
Joomla, jQuery, PHP, MySQL
CSS, HTML Call Us : 0776577359
இணையத்தளங்களை உருவாக்க...
MIS Domain Reg. & Web Hosting
Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளும்

இலவச ஆங்கில வகுப்பு (English Workshop)

10.11.2011 வியாழக்கிழமை (போயா விடுமுறை)
பிரிவுகள் : (ஆறு பிரிவுகளில் ஏதாவதொரு பிரிவில் சேரலாம்)
காலை : 8-9.30, 9.30-11, 11-12.30
மாலை 1-2.30, 2.30-4, 4-5.30

இலவச வகுப்பு ஊடாக வார மற்றும் வார இறுதி பயிற்சிநெறியில் சேரலாம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.